
# ஒரு நாடகாசிரியரின் கதை

(தன் வரலாறு Autobiography)

5 நாடகங்கள்

5 கட்டுரைகள்

1 சிறுகதையுடன்



27 ஆவது நூல்

கலாபூஷணம்

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாடகாசிரியரின் கதை

## தன் வரலாறு (Autobiography)

5 நாடகங்கள்
5 கட்டுரைகள்
1 சிறுகதையுடன்

கலாபூஷணம்
அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை

27 ஆவது நூல்

30, கடைச்சாமி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர்: ஒரு நாடகாசிரியரின் கதை

ஆசிரியர்: அறாலியூர் ந. சுந்தரம்பிள்ளை

B.A (இலங்கை) கல்வியியல் டிப்புளோமா

பதிப்பு: முதலாம் பதிப்பு மார்கழி 2011

உரிமை: ஆசிரியருக்கு

பக்கங்கள்: 144 + xxviii

விலை: ரூபா 300.00

அச்சகம்: கங்கை பிறின்டேர்ஸ்

781, சிவலிங்கப்புளியடி

கே.கே.எஸ். றோட், யாழ்.

Title and Subject Oru Nadakasiriyarin Kathai

Matter of the book: Autobiography of a Dramatist

Author: Araliyoor N. Suntharampillai

B.A. (Cey); Dip - in - Edu.

Edition: First - December 2011

No of Pages: 144 + xxviii

Prize: Rs. 300.00

Copy right: Author

குறிப்பு:

- விமர்சனத்திற்கன்றி, இந்த நூலில் உள்ள கட்டுரைகளை முழுமையாகவோ, பகுதிகளாகவோ எவரும் எடுத்துப் பிரசுரிக்கக் கூடாது.
- நாடகங்களை விரும்பியவர்கள் எல்லோரும் நடிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

கொக்குவில் இந்துக் கல்லூரியிலும்
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்
கல்லூரியிலும் எனக்குக் கற்பித்து
என்னை உருவாக்கிய
ஆசிரியப் பெருந்தகைகள்
எல்லோருக்கும்
இந்த நூல்
காணிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

**நான் ஏன் இந்த நூலை எழுதி வெளியிடுகிறேன்?**

1. இலங்கையில் இலக்கியம் பற்றிப் பேசுபவர்கள் எழுதுபவர்கள் எல்லோரும் பழந்தமிழ் இலக்கியங்கள், சிறுகதைகள், கவிதைகள் பற்றியே பேசுகிறார்கள். எழுதுகிறார்கள். நாடகத்தைத் தொட்டும் பார்ப்பதில்லை, அவர்களுக்கு நாடகம், சரியாகத் தெரியாததால். அதனால் தான் இந்த நூலை எழுதி வெளியிடுகிறேன்!

2. தமிழ் மொழியில் நாடக நூல்கள் குறைவு. நவீன நாட நூல்கள் இன்னும் குறைவு. இலங்கை மண்வாசனை நாடகங்கள் அருமையிலும் அருமை. அவை தான் இலங்கைத் தமிழ் நாடகங்கள்! அந்த வகை நாடகத்தை வளர்க்கவும் தான் இந்த நூலை எழுதி வெளியிடுகிறேன். **அவற்றை இலங்கையரால் மட்டுமே எழுத முடியும்.** நான் எழுதியவை எல்லாம் இலங்கை மண்வாசனை நாடகங்களே!

3. மற்றவர்களால் அதிகம் எழுத முடியாத இலங்கை மண்வாசனை நாடகங்களையும், இலங்கை வானொலி நாடகங்களையும் எழுதி வெளியிட்டு, "இலங்கை வானொலி நாடக இலக்கியம்" என்றொரு புதிய இலக்கிய வகையை உருவாக்கியுள்ளேன். அந்த இலக்கிய வகையை வளர்க்க வேண்டாமோ?

4. நான் இலங்கைத் தமிழ் பேசும் பிள்ளைகளுக்கு நவீன நாடகங்களும் நவீன இலக்கியங்களும் கற்பிக்க வேண்டும். இலங்கை மாணவர்கள் பாடசாலை தமிழ்த்தினப் போட்டிகளில் நவீன நாடகங்களை நடிக்கச் செய்ய வேண்டும் என்று நீண்டகாலமாகவே பரப்புரை செய்து வந்துள்ளேன். **சென்ற ஆண்டு எங்கள் கல்வித்திணைக்களம் அனுப்பிய சுற்றறிக்கையின் படி, எல்லாப் பாடசாலைகளும் 2011 ஆண்டு தமிழ்தினப் போட்டிகளில் சமூக நாடகங்களை எழுதின; நடித்தன! எனது லட்சியமும் நிறைவேறியது!** அந்த மகிழ்ச்சியிலும்தான் இந்த நூலை எழுதி வெளியிடுகிறேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. வருங்காலத்தில் இலங்கையில் நவீன நாடகங்களே கற்பிக்கப்படப் போகின்றன. மாணவர்கள் நவீன நாடகங்களையே எழுதப் போகிறார்கள், நடிக்கப் போகிறார்கள். அவர்களுக்கு நான் உதவ வேண்டாமோ?

## எனது தன் வரலாறு

நான் வெற்றிகரமாகப் பல நாடகங்களை எழுதியவன். Successful Dramatist! எனவே நேயர்கள் என்னைப்பற்றி அறிய ஆவலாக இருப்பார்கள். நான் எனது வாழ்க்கை வரலாற்றையே எழுதி வெளியிடலாம். அப்படிச் செய்தால், வாசிப்புப் பழக்கம் குறைந்து வருகின்ற இந்தக் காலத்தில், அந்த நூல் விற்காது. விலைப்படாத நூலை ஏன் மினைக்கெட்டு எழுதி வெளியிடுவான் என்று, எனது ஏனைய நூல்களிலேயே எனது வாழ்க்கை வரலாற்றையும் சுருக்கமாக எழுதி வந்திருக்கிறேன். அதே மாதிரி இங்கேயும் கொஞ்சம் எழுதுகிறேன்.

**எனது மூதாதையர் :** எனது மூதாதையர் கல்வி கற்றவர்களே தவிர, நாடகமாடியவர்களல்ல. நான் கல்வி கற்ற நான்காவது தலைமுறை. அவர்கள் ஆங்கில மொழியில் கல்வி கற்று சிங்கப்பூர் போய் உழைத்துக் கொண்டு வந்தவர்கள். சிலர் இலங்கையிலும் அரசாங்க உத்தியோகம் பார்த்தவர்கள். அவர்கள் ஆங்கிலத்துடன் தமிழையும் படித்தவர்கள்.

**அந்தக் காலத்தில் நாடகத்தின் நிலை :** அந்தக் காலத்தில் இலங்கையில் "இலங்கைத் தமிழ் நாடகம்" என்று ஒன்று இருக்கவில்லை. இந்திய நாடகங்களையும் ஒருவரும் விரும்பி நடிப்பதில்லை. எப்பொழுதாவது எங்காவது யாராவது இந்தியாவில் இருந்து வந்த நாட்டுக்கூத்துகளை ஆடுவார்கள். அயலில் வசிப்பவர்கள் போய்ப் பார்ப்பார்கள். சில வேளைகளில் சில கோவில்களில் இசை நாடகங்கள் நடக்கும். அவையும் இந்தியாவில் இருந்து வந்தவையே. விரும்பியவர்கள் போய்ப் பார்ப்பார்கள். சாதாரண மக்களுக்கு நாடகமும் தெரியாது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுக்கூத்துகளும் தெரியாது. எல்லாம் கேள்விப்பட்டதுடன் சரி. எனது மூதாதையர் நாட்டுக்கூத்தின் பக்கம் தலைவைத்தும் படுத்ததில்லை!

**நாடகம் எழுதும் ஆற்றல் :** அப்படியானால் எனக்கு இந்த நாடகம் எழுதும் ஆற்றல் எப்படி வந்தது? எனது கல்வியில் இருந்துதான்.

"ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்புடைத்து"

என்றார் வள்ளுவர். நாங்கள் கற்ற கல்வி ஏழேழு பிறவிக்கும் வருமாம். நாம் ஒரு முறை செய்த நல்ல செயல்களின் விளைவுகளும் வரும், தீய செயல்களால் வந்த பாவங்களும் நிழலாகத் தொடரும்!

**எழுதத் துவங்கினேன்:** எனது 16 ஆவது வயதில் நான் எஸ்.எஸ்.ஸி. வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் பொழுதே பத்திரிகைகளுக்கு எழுதத்துவங்கினேன். எனது கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் எல்லாம் **"சுதந்திரன்"**, **"வீரகேசரி"** பத்திரிகைகளில் பிரசுரமாகியிருக்கின்றன. நான் கல்வி கற்ற கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரிச் சஞ்சிகைகளையும் அவை அலங்கரித்திருக்கின்றன.

**பல்கலைக்கழகத்தில் :** 1955ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலை கழகத்திற்குள் நுழைந்தேன். அதற்கு முன்பு 1954 ஆம் ஆண்டிலேயே ஒரு சமூக நாடகத்தை எழுதி, எனது நண்பர்களுடன் சேர்ந்து எனது ஊரான அராலியில் அரங்கேற்றியிருந்தேன். பல்கலைக்கழகத்தில் அப்பொழுது நவீன நாடக ஆக்கத்தில் ஈடுபட்டிருந்த பேராசிரியர் கணபதிப்பிள்ளையும் கலாநிதி வித்தியானந்தனும் தாங்கள் தயாரித்த "சுந்தரம் எங்கே?" "துரோகிகள்", நாடகங்களில் நடிக்கும் வாய்ப்பை எனக்கும் தந்தனர். அந்தப் பல்கலைக்கழக நாடகங்கள் இலங்கை முழுவதிலும் அரங்கேற்றப்பட்டன. அவற்றில் நடிக்கும் பொழுது நவீன நாடகம் பற்றி நன்றாக அறிந்து கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்ல பேச்சாளன் :** அதே நேரத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கக் கூட்டங்களிலும் நன்றாகப் பேசினேன். நான் பேசாத தமிழ்ச் சங்கக் கூட்டங்களே இல்லை என்று சொல்லும் அளவுக்குப் பேசினேன்.! அந்த மாதிரிப் பேசும் வாய்ப்பு, அதன் பிறகு எனக்கு என்றுமே கிடைக்கவில்லை!.

அதுவும் நல்லதாகப் போய்விட்டது. இந்தக் காலத்தில் எல்லாரும்தான் பேசுகிறார்கள். யார் இலக்கியம் பேசுகிறார்கள்? யார் யாரோ எதை எதையோ பேசுகிறார்கள். என்ன பேசுகிறார்கள் என்பது அவர்களுக்குத்தான் தெரியும். பேச்சுக்கள் எல்லாம் காற்றோடு கலந்துவிடுபவைதானே?

**எழுத்தில் கவனம் செலுத்தினேன் :** நான் முழுக் கவனத்தையும் எழுத்தில் செலுத்தினேன். மற்றவர்கள் அதிகம் எழுதமாட்டாத, நவீன நாடகங்களையும் வானொலி நாடகங்களையும் எழுதிக் குவித்தேன்! எனது நாடகங்களை இலங்கை வானொலியும் வேறு பல வானொலிகளும் ஒலிபரப்பின. பதியப்பட்ட எனது நாடகங்களை இன்னும் திருப்பிப் போட்டுக் கேட்கலாம். நாடகங்களை நூல்களாகவும் வெளியிட்டேன், தமிழ் மொழியில் நாடகங்கள் இல்லாத குறையைத் தீர்க்க. அவை படிக்கப்பட்டன. நடிக்கப்பட்டன. அந்த நூல்கள் அழியாமல் இருக்கும் வரை அவை படிக்கப்படும், நடிக்கப்படும்!.

**மேடை நாடகங்கள்:** உத்தியோகமானதும் நாடகங்களை எழுதி எனது நண்பர்களுடன் சேர்ந்து எனது ஊரான அராலியில் அரங்கேற்றினேன். அவற்றில் நானும் நடித்தேன். 1954-1974 இருபது ஆண்டு காலப் பகுதியில் 25 நாடகங்கள். எல்லாமே நவீன நாடகங்கள். நடிப்பு நிர்வாகம் எல்லாம் நண்பர்களே. நல்ல திறமையுள்ள நண்பர்கள் கிடைத்தது எனது பாக்கியமே! அவர்கள் எல்லோரும் நாடகத்தில் ஆர்வம் உள்ளவர்களல்ல. அவர்களை நான் நாடகத்தின்பால் இழுத்தேன். நாங்கள் நாடகங்களை வெற்றிகரமாக அரங்கேற்றவே ஏனோ தானோ என்று இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்களும், வந்து எங்களுடன் சேர்ந்து உழைத்தனர். அது ஊரில் உள்ள இளைஞர்களை ஒன்று சேர்க்கும் ஒரு செயற்பாடாகவும் அமைந்தது. இலங்கை மண்வாசனை நாடக வளர்ச்சியில் அராலிக் கிராமத்தையும் இணைத்தது.! அராலி மக்களுக்கு இருபது ஆண்டுகள் நாடக விருந்தளித்தேன். ஊரவர்களும் வந்து பார்த்து எங்களுக்கு ஆதரவு அளித்தனர். இருந்தாலும் மேடை நாடக முயற்சிகள் எனது கையைக் கடிகத்தான் செய்தன.

**அந்தக் காலத்தில், 20 ஆண்டுகளில் 25 நவீன நாடகங்களை எழுதி அரங்கேற்றியவர்கள் வேறு யாரும் இல்லை என்று துணிந்து கூறலாம்.! அது மற்றவர்கள் செய்யாத ஒரு சாதனை!** அதன் பிறகும் எனது மாணவ மாணவியரைக் கொண்டு எனது வானொலி நாடகங்களை மேடைகளில் நடிப்பித்தேன்.

அராலிக் கிராமம் எனக்கு நல்லதொரு பயிற்சிக் களமாக அமைந்தது. எனது செயற்பாடுகளையும் தகுதியையும் கண்டே இறைவன் எனக்கு இலங்கை வானொலியைத் தந்தான், இலங்கையர் எல்லோருக்கும் நாடக விருந்தளிக்க!

**நாடகங்களைப் படித்தேன் :** அதே நேரத்தில் நாடகங்களைப் படித்தேன். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஒரு பெரிய நூல் நிலையம் இருந்தது. அங்கே பட்டப் படிப்புடன் ஏனைய துறைகளையும் படிக்க போதிய நேரம் இருக்கவில்லை.

பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியே வந்த பின்பு யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் இருந்தே நூல்களை எடுத்துப் படித்தேன். எல்லா வகை நூல்களையும் வாசித்தாலும், நவீன நாடகங்களையும் நாடகங்கள் பற்றிய நூல்களையுமே தேடித் தேடி எடுத்து வாசித்தேன். யாழ் நூலகத்தில் நாடகத்திற்கென்று ஒரு தனிப்பகுதியே இருந்தது. அதில் இருந்த நூல்களையெல்லாம் வாசித்து முடிப்பதற்கிடையில் நூலகத்தை எரித்து விட்டார்கள்! அந்த நூல்கள் இனிக் கிடைக்கப் போவதில்லை. அப்படிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தாலும் அந்த ஆங்கில நூல்களை வாசித்து விளங்கி, அவற்றில் உள்ள சிறப்புக்களையெல்லாம் அறிந்து கொள்ளக் கூடிய அறிவு எங்கள் இளம் சந்ததியினருக்கு இல்லை!.

**வானொலி நாடகங்கள்:** எனது நாடகங்கள் தாமாகவே இலங்கை வானொலிக்குள் நுழைந்தன. 1980 ஆம் ஆண்டு "நானே ராஜா" என்றொரு நாடகத்தை எழுதி வானொலிக்கு அனுப்பினேன். அது உடனடியாகவே ஒலிபரப்பப்பட்டது. அதன் பிறகு நான் அனுப்பிய - அனேகமாக எல்லா நாடகங்களையும் தயாரித்து ஒலிபரப்பியிருக்கிறார்கள். தமிழ் சேவைப் பணிப்பாளராக, இயல் நாடகக் கட்டுப்பாட்டாளராக, நாடகத் தயாரிப்பாளராக யார் வந்தாலும், எனது நாடகங்களை வரவேற்றுத் தயாரித்து ஒலிபரப்பி வந்திருக்கின்றனர். அந்த வரவேற்பு இன்றுவரை தொடர்கிறது!

125 நாடகங்கள் எழுதிய பிறகு எனது முதலாவது வானொலி நாடக நூலான "கெட்டிக்காரர்கள்" நூலை, வெளியிட்ட பொழுதே ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குப் போய், தமிழ்ச் சேவைப் பணிப்பாளரை வீ. ஏ. திருஞானசுந்தரத்தையும் நாடகத் தயாரிப்பாளரான ஜோர்ஜ் சந்திரசேகரனையும் சந்தித்தேன். அதுவே தமிழ்ச் சேவைத் தனி நாடகங்களின் முதலாவது தொகுதியுமானதினால், பணிப்பாளர் திருஞானசுந்தரம் அதை கொழும்பில் வெளியிட்டு வைத்தார். அந்த நூலையிட்டு தமிழ்ச் சேவையினருக்கும் பெருமை தானே?

தமிழ்ச்சேவை நடத்திய நாடகம் எழுதும் போட்டிகளில் எனக்கு இது வரை ஐந்து முறை முதலாம் பரிசு தந்திருக்கின்றது. ஒருமுறை மூன்றாம் பரிசு. வேறு பல வானொலி நிலையங்களும் எனது நாடகங்களை தயாரித்து ஒலிபரப்பியதுடன், எனது நாடகங்களுக்குப் பரிசுகளும் தந்திருக்கின்றன.! நான் அனாயாசமாக வானொலி நாடகம் எழுதுவேன். எதையும் நினைத்த மாத்திரத்தில் நாடகமாக்குவேன்! எனது கல்வியும் அனுபவமுமே இதற்குக் காரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா வகை இலக்கியங்களையும் படைத்தாலும் நாடகங்களையே கூடிய கவனம் எடுத்து அதிகமாக எழுதினேன். நான் வானொலி நாடகம் எழுதாதிருந்தால், இன்னும் பல சிறுகதைகளையும் நாவல்களையும் எழுதியிருப்பேன். எல்லாம் பாட்டிலை கிடக்கும். மேடை நாடகங்களை மேடைகளில் நடிப்பித்துக் காண்பித்தேன். வானொலி நாடகங்களை இலங்கை வானொலி ஒலிபரப்புகின்றதே! அவை இலங்கையர் எல்லாரது மனமேடைகளிலும் அரங்கேறுகின்றனவே.! எல்லோரும் கேட்டு ரசிக்கிறார்கள். நூல்களாக வெளிவந்த நாடகங்களை எல்லோரும் படிக்கிறார்கள், நடிக்கிறார்கள்.! பல்கலைக்கழகங்களில் நவீன நாடகங்கள் எழுதக் கற்றுக் கொடுப்பதில்லை. அவர்கள் கற்பிக்கும் நாடகங்களைப் படித்துச் சமூக நாடகங்கள் எழுத முடியாது. பலரும் எனது நாடகங்களைப் படித்தே பாடசாலை தமிழ்த்தினப் போட்டிகளுக்கு நாடகங்கள் எழுதியிருப்பார்கள்.! நாடகங்களை நடித்திருப்பார்கள்.! அவை ஒரு புதிய வகை இலக்கியமும் ஆகின்றன. வருங்காலத்திலும் அவற்றைப் படிப்பார்கள். அவற்றை மாதிரிகளாகக் (model) கொண்டு புதுப் புது நாடகங்களை எழுதி நடிப்பார்கள்.! வானொலி நாடகம் ஒரு முறை பதியப்பட்டால் திரும்பத் திரும்ப ஒலிக்கும். எனது நாடகங்கள் இலங்கை வானொலியின் பல சேவைகளிலும் ஒலிபரப்பப்பட்டன. அவை எத்தனை முறை மறு ஒலிபரப்புச் செய்யப்பட்டன என்று எனக்கே தெரியாது!

**மறுபிறப்பு :** சமாதானம் வந்த பிறகு தமிழ்ச் சேவை மீண்டும் புதிய நாடகங்களை தயாரித்து ஒலிபரப்பத் துவங்கியுள்ளது. அது தமிழ்ச் சேவைக்கு மறுபிறப்பு! எனக்கும் தான். தமிழ்ச் சேவைக்கு நாடகம் எழுதத் துங்கியதால் தானே என்னால் இந்த வயதிலும் புதுப்புது நாடகங்களை எழுத முடியும் என்பதை அறிந்து கொண்டேன்.! இதுவரை எனது 15 புதிய நாடகங்களை, ஒலிபரப்பிவிட்டார்கள். இலங்கையின் மூத்த எழுத்தாளர்களில் எனது நாடகங்களை மட்டுமே தயாரித்து ஒலிபரப்புகின்றனர்.! மற்ற மூத்த எழுத்தாளர்களும் எழுதிப் பார்க்கலாம் தானே? தமிழ் சேவை புதிய நாடகங்களுக்காகத் தவம் கிடக்கிறது. இப் பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் சேவை நாடகங்களை இணையத்தளத்தில் உலகம் முழுவதிலும் கேட்கிறார்களாம். படித்துப் பட்டம் பெற்ற இரண்டு தம்பியர் வெளிநாடுகளில் இருந்தும், நான் எந்த நாட்டிற்கும் போனதில்லை. இங்கிருந்து நாடகங்களும் நூல்களும் எழுதிக் கொண்டிருக்கிறேன்.! எனது நாடகங்கள் உலகம் முழுவதும் போகின்றன.! போதும் தானே?

**ஒரு அரச கூட்டுத்தாபனத்திற்கு தொடர்ந்து 32 ஆண்டுகள் சேவையாற்றியிருக்கிறேன். அதன் மூலம் இலங்கையர் எல்லோருக்கும் நாடக விருந்தளித்தேன். இலங்கை வானொலிக்கு இவ்வளவு நீண்ட காலம் தொடர்ந்து நாடகம் எழுதியவர் வேறு எவரும் இல்லை.! இவ்வளவு தொகையான நாடகங்களை எழுதியவனும் நான் மட்டும் தான்!.**

**தமிழ் Hons. படிக்கவில்லை :** நான் பல்கலைக்கழகம் சொல்லும் பொழுது தமிழ் மொழியைச் சிறப்புப் பாடமாகப் படிக்கும் நோக்கத்துடன்தான் சென்றேன். அங்கே நடந்த சில நிகழ்வுகள் எனது வாழ்க்கையைத் திசை திருப்பிவிட்டன. ஒன்று, பல்கலைக் கழக நாடகங்களில் நடித்தது. இரண்டு. தமிழ்ச் சங்கக் கூட்டங்களில் நான் பேசிய பேச்சுக்கள். கவனம் பல திசைகளிலும் செல்லவே தமிழ் Hons. செய்யும் எண்ணத்தைக் கைவிட்டு சாதாரண பொதுக் கலைமானி செய்தேன். அதற்காக அப்பொழுது நான் மனவருத்தப்பட்டேன்.

**எல்லா வகை இலக்கியங்களையும் படைத்த ஒரே ஒரு இலங்கைத் தமிழ் எழுத்தாளன்!**

இப்பொழுது அந்தத் தீர்மானம் எடுத்ததையிட்டு மகிழ்கிறேன். பல்கலைக்கழகத்தில் எங்களுக்கு பழந்தமிழ் இலக்கியங்களே கற்பிக்கப்பட்டன. தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்றிருந்தால், இன்னும் கொஞ்சம் கூடுதலாகப் பழந் தமிழ் இலக்கியங்களைக் கற்பித்திருப்பார்கள். அந்தப் பழந்தமிழ் இலக்கியங்களால் மூளையை நிரப்பிக் கொண்டால், இலக்கியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பது எப்படி? அந்தச் செய்யுள் இலக்கியங்கள் இந்தக் காலத்திற்கு அதிகம் பயன்படா. நான் பல்கலைக்கழகத்திற்கு வெளியே வந்து, எனக்குப் பிடித்த பல்வேறு வகை நூல்களையும் தமிழிலும் ஆங்கிலத்திலும் படித்தேன். அதனால்தான் என்னால் தமிழ் மொழியில் எல்லாவகை நூல்களையும் படைக்க முடிந்தது.!

**நூல்கள் :** நான் எழுதிய நூல்கள் 27. அவற்றில் நாடக நூல்கள் 18. "நாடகம் எழுதுவது எப்படி?" "வானொலி நாடகம் எழுதுவது எப்படி?" நூல்களும் இரண்டு நாடக விமர்சன நூல்களும் அவற்றில் அடங்கும். இது வரை நான் அச்சிட்டு வெளியிட்ட நாடகங்கள் 80! **அதன் மூலம் தமிழில் வானொலி நாடக இலக்கியம் என்றொரு புதிய இலக்கியத்தையே உருவாக்கியுள்ளேன்.** விளக்கங்களுடனேயே எனது நாடக நூல்களை வெளியிடுகிறேன். எனது நூல்களை வாசித்தால் மாணவர்களால் நிட்சயமாக இலங்கை மண்வாசனை நாடகங்களையும் வானொலி நாடகங்களையும் எழுத முடியும்!.

**இலக்கிய ஒப்பியல் :** பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எனது காலத்தில் படித்தவரும் அக்காலத்தில் எனது நண்பராக இருந்த-வருமாகிய பேராசிரியர் கைலாசபதி பர்மிங்ஹாம் பல்கலைக்கழ-கத்தில் Comparative Literature படித்துவிட்டு வந்து, தமிழ் மொழியில் முதன் முதலாக "ஒப்பியல் இலக்கியம்" என்ற நூலை எழுதி வெளியிட்டார். நான் வீட்டில் இருந்தவாறே அவரது நூலையும் அது போன்ற வேறு பல நூல்களையும் படித்து, இலங்கை நாவலான "வீடற்றவனை"யும் தென்னிந்திய நாவலான "நாகம்மாளை"யும் ஒப்பிட்டு ஆராய்ந்து, "இலக்கிய ஒப்பியல்" என்றொரு நூலை எழுதி வெளியிட்டேன். **இலங்கையில் தமிழ் மொழியில் எங்கள் இருவரையும் தவிர வேறு எவரும் இலக்கிய ஒப்பியல் நூல் எழுதவில்லை! இன்னும் இல்லை!**

**அந்த நூலுக்கும் இலங்கைச் சாகித்திய மண்டலம் பரிசளிக்க வில்லை!**

**இது தான் பொறாமை!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எனது லட்சியம் :** இலங்கைத் தமிழ் பேசும் பிள்ளைகளுக்கு தமிழ் மொழியைக் கற்பிப்பதற்காக அரசாங்கம் பாட நூல்களை எழுதி வெளியிடத் தொடங்கிய நாள் முதலாக, அவற்றில் புராண இதிகாச நாடகங்களையும் நாட்டுக்கூத்துகளையுமே போட்டு வந்திருக்கிறார்கள். பாட புத்தகங்களில் முதன் முதலாகப் புராண இதிகாச நாடகங்களை போட்டவர் பேராசிரியர் சிவதம்பி. அவருக்குப் பின்பு அந்தப் பணியைச் செய்த அவரது சீடர்களும் அந்தக் கொள்கையையே பின்பற்றி வந்தனர்.

பாட புத்தகங்களில் முதன் முதலாக நாட்டுக்கூத்துகளைப் போட்டவர் பேராசிரியர் மௌனகுரு. அவர் மட்டக்களப்புப் பகுதியில் ஒரு காலத்தில் ஆடப்பட்டுவந்த "வடமோடி தென்மோடி" நாட்டுக்கூத்துகளைப் பற்றிய கட்டுரைகளைப் பாட புத்தகங்களில் போட்டதுடன், மாணவர்களும் ஆசிரியர்களும் நாட்டுக்கூத்தாட வேண்டும் என்று பாட புத்தகங்களிலேயே எழுதி விட்டார்.

நான் 2000ம் ஆண்டு எழுதி வெளியிட்ட "இலக்கியக் கட்டுரைகள்" என்ற நூலில் மேலே கூறப்பட்ட விடயத்தைக் கண்டித்து இப்படி எழுதினேன்:

"கூத்துக்களிலும் எத்தனையோ வகை. அவற்றில் எந்தக் கூத்தை படிப்பதற்கும் கலந்துரையாடுவதற்கும் எடுத்துக் கொள்வது? இந்த "வடமோடி, தென்மோடி" என்ன உலகப் பிரசித்தமான நாடக வகைகளா? அல்லது வருங்கால தமிழ் நாடகம் வடமோ தென்மோடி பாணியிலா வளரப் போகிறது? நாட்டுக்கூத்துக்காரர்களே ஆடியில் ஒன்றும் அமாவாசைகளில் ஒன்றுமாக ஆடிக் கொண்டிருக்கும் இந்தக் கூத்துகளைப் படித்து, நடித்து, கலந்துரையாடி மாணவர்களுக்கு என்ன லாபம்? மாணவர்கள் படிப்பதற்கு எவ்வளவு இருக்கிறது?"

மௌனகுரு இதற்குப் பதிலளிக்கவில்லை. தொடர்ந்து நாட்டுக்கூத்துக்களையும் புராண இதிகாச நாடகங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருகங்களின் நாடகங்களையும் பாட புத்தகங்களில் போட்டுக் கொண்டிருந்தார். அரசியல் செல்வாக்குப் பிடித்து, பாடபுத்தகங்களை தொகுத்தளிக்கும் பதவிகளில் இருந்து கொண்டால், எதையும் செய்யலாம் தானே!

பாடசாலை தமிழ்த் தினப் போட்டிகளிலும் மாணவர்கள் நாட்டுக்கூத்துக்களையே ஆடப் பணிக்கப்பட்டனர். மாணவர்கள் நவீன நாடகங்கள் நடிக்க அனுமதிக்கப்படவில்லை.!

இவற்றை ஒருவரும் கண்டிக்கவில்லை.! ஏனைய பேராசிரியர்களும் இவற்றை ஆமோதித்தனர். அதிபர்களும் ஆசிரியர்களும் அவைதான் சரியான நாடகங்கள் என நினைத்து, அவற்றையே கற்பித்தனர். மாணவர்களும் அவற்றையே விழுந்து விழுந்து படித்தனர், பரீட்சைக்காக.

நான் மட்டுமே இதைக் கண்டித்தேன்.! தமிழ் மொழியை வாழ்க்கையுடன் தொடர்புபடுத்திக் கற்பிக்க வேண்டும். மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கும் அவர்களது வருங்கால முன்னேற்றத்திற்கும் ஏற்ற முறையில் அவர்களுக்குக் கல்வி போதிக்கப்பட வேண்டும் என்பது, எனது அறிவிலும் அனுபவத்திலும் பிறந்த கருத்து! அதையே லட்சியமாகக் கொண்டு மாணவர்களுக்கு நவீன நாடகமும் நவீன இலக்கியங்களும் கற்பிக்கப்பட வேண்டும் என்று நீண்ட காலமாகத் தீவிரமாகப் பிரசாரம் செய்து வந்திருக்கின்றேன், பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதியும், நூல்கள் வெளியிட்டும். அதற்காக **"நவீன இலக்கியங்களைக் கற்பித்தல்"** என்றொரு நூலையே எழுதி வெளியிட்டேன். எனது நூல்களை எனது செலவிலேயே இலங்கையின் எல்லாப் பாடசாலைக்கும் நூலகங்களுக்கும் அனுப்பிவைத்தேன். அதற்காக நான் செலவிட்ட பணம் லட்சக்கணக்கில்.!

பாடசாலை தமிழ்த்தினப் போட்டிகள் சம்பந்தமாக எனது "நவீன நாடகம்" என்ற நூலில் இப்படி எழுதினேன்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாடசாலை தமிழ்த்தினப் போட்டிகளில் நாட்டுக் கூத்துகளில் போட்டி வைக்கிறார்கள். நவீன நாடகத்தில் போட்டி வைப்பதில்லை! பாடசாலை மாணவர்களுக்கு நவீன நாடகமும் வானொலி நாடகமும் கற்பிக்கப்பட வேண்டும்!. வானொலி நாடகம் எழுதும் போட்டியும் வைக்கவேண்டும், பாடசாலை தமிழ்த்தினப் போட்டிகளில்!"

நான் பரப்புரை செய்துவந்த கருத்துக்களை. இது வரை எவரும் மறுத்துரைக்கவில்லை!

**மாணவர்களுக்கு விடுதலை!**

நான் எழுதியது வீண் போகவில்லை. 2011 ஆண்டு பாடசாலை தமிழ்த்தினப் போட்டிகள் சம்பந்தமாக, எங்கள் கல்வித் திணைக்களம் ஏற்கனவே அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கைக்கு - ஒரு பின்னிணைப்பை எல்லாப் பாடசாலைகளுக்கும் அனுப்பி வைத்தது. அதில் பாடசாலை நாடகப் போட்டிகளில் சமூக நாடகமே நடிக்கப்படவேண்டும் என்று • குறிப்பிட்டிருந்தது. குறு நாடக எழுத்தாக்கப் போட்டியிலும், நாடகங்கள் சமூகப் பிரச்சினைகளை மையப்படுத்தி எழுதப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தது.

2011 தமிழ்த்தினப் போட்டிளில் எல்லாப் பாடசாலைகளும் சமூக நாடகங்களையே எழுதி நடித்தன. குறு நாடக எழுத்தாக்கப் போட்டியிலும் சமூக நாடகங்களையே மாணவர்கள் எழுதியிருப்பார்கள். மேடை நாடகப் போட்டியில் பல பாடசாலைகள் பங்குபற்றின!.

நாட்டுக் கூத்துகள் பல வகையின. அவற்றை ஆடப் பழக்கக் கூடியவர்கள் அண்ணாவிமாரே. எல்லா அண்ணாவிமாருக்கும் எல்லா நாட்டுக்கூத்துகளும் தெரியாது. சிலருக்கு சிலது தெரியும். அண்ணாவிமார் எல்லோரும் இறந்து விட்டனர். அண்ணாவிமார் பழக்கிய கூத்துக்களைப் பார்த்தவர்களே மாணவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து ஆட்டிக் கொண்டிருந்தனர். தமிழ்த்தினப் போட்டிகளில் மிகக் குறைந்தளவு பாடசாலைகளே பங்கு பற்றி வந்திருக்கின்றன.

நவீன நாடகங்களை எல்லோரும் எழுதலாம். எல்லோரும் பழக்கலாம். எல்லோரும் நடிக்கலாம். சுதந்திரமாக விரும்பிய வண்ணமெல்லாம் நடிக்கலாம். போட்டிக்குப் பல பாடசாலைகள் நாடகங்கள் அனுப்பின. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் விடுதலை கிடைத்தது!. இலங்கைத் தமிழ் நாடகத்திற்கும் விடுதலை கிடைத்தது. தமிழ்த்தினப் போட்டிகளில் நாடக போட்டி நடத்தப்படும் நோக்கமும் நிறைவேறியது.!

**எனது லட்சியம் நிறைவேறியது! :**

எனது லட்சியமும் நிறைவேறியது! எனது காலத்திலேயே நிறைவேறியது! பாட புத்தகங்கள் திருத்தி எழுதப்படும் பொழுது அவற்றிலும் நவீன நாடகங்கள் அரங்கேறும்! இந்த விண்வெளி யுகத்தில், எவ்வளவு காலந்தான் பாரத இராமாயண காலத்து நாட்டுக்கூத்துக்களை வைத்து ஆட்டிக் கொண்டிருப்பது? நான் எனது லட்சியம் நிறைவேறியதே என்று மகிழவில்லை. தமிழ் மாணவர்கள் நல்லபடியாக நாடகங்கள் நடித்து முன்னேற சுதந்திரம் கிடைத்ததே என்று மகிழ்கிறேன்!

இந்த நல்ல பணியை வெற்றிகரமாகச் செய்து முடிக்க உதவியமைக்காக நான் இலங்கை வானொலியின் தமிழ் சேவைக்கும், வீரகேசரி, தினக்குரல், உதயன், ஞானம் பத்திரிகைகளுக்கும் இந்த இடத்தில் நன்றி கூறிக்கொள்கிறேன். அவைதானே நான் கூறிய கருத்துக்களைப் பரப்பின!

எல்லாவற்றிற்கும் மேலாக எனது கருத்துக்களை ஏற்று, இந்த மாற்றத்தை ஏற்படுத்திய கல்வித் திணைக்களத்தில் உள்ள அறிஞர்களை-யும் நான் பாராட்டுகிறேன்!. இலங்கைத் தமிழ் பேசும் பெற்றோர் எல்லோரும் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டவர்கள். அவர்கள் தமிழ் பேசும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிள்ளைகளது அறிவு வளர்ச்சிக்கும் வருங்கால முன்னேற்றத்திற்கும் வழிசமைத்திருக்கிறார்கள்!**

இந்த முன்னேற்றகரமான ஏற்பாட்டை இனியாரும் மாற்ற முடியாது! அப்படி யாராவது இதை மாற்றி, மீண்டும் மாணவர்களைக் கொண்டு போய் நாட்டுக்கூத்துச் சிறைக்குள் அடைக்க முற்பட்டால், விடயம் தெரிந்தவர்கள் அவர்களைப் பகிடி பண்ணிச் சிரிப்பார்கள்! **"தமிழ் மாணவர்களது விரோதி" என்ற பட்டமும் அவர்களுக்குக் கிடைக்கும்!**

**இறைவனே பணித்தான் - நாடகம் எழுதும்படி!**

இலங்கைத் தமிழ் மண்வாசனை நாடகங்களை எழுத இறைவனே என்னைப் பணித்தான் என உணர்கிறேன்! அந்த நம்பிக்கைக்கு பாத்திரமானவனாக நான் நடந்து கொண்டேன்!

இறைவன் பல வழிகளில் எனக்கு உதவியிருக்கிறான். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அந்த இரண்டு பேராசிரியர்களிடத்திலும் இலங்கை மண்வாசனை நாடகங்களின் சிறப்பை அறிய வைத்தான். அதன் பிறகு பேராசிரியர் நாடகங்கள் எழுதவே இல்லை. கலாநிதியும் நாட்டுக்கூத்துக்குப் பாயந்து விட்டார்.

நான் எங்காவது விலாசம் இல்லாது தொலைந்து போகாமல், மச்சாளைக் திருமணம் செய்து, யாழ்ப்பாணத்தில் இருந்து நாடகப்பணி செய்ய வாய்ப்பளித்தான்.

நாடகத்தை நடிப்பதற்கும் அவற்றை நடத்துவதற்கும் ஒரு திறமைமிக்க நண்பர் குழாமைத் தந்தான்.

எனது நாடக அறிவை வளர்த்துக் கொள்ள, யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தைத் தந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வானொலியையும் இறைவனே தந்தான், எனது தகுதியை அறிந்து! அதனால் நான் இவ்வளவு தொகை நாடகங்களை எழுதிக் குவித்தேன்.

எனது நாடகங்களை நூல்களாக அச்சிட்டு வெளியிடுவதற்கு பண உதவிபுரிய ஒரு தம்பியையும் தந்தான். இல்லையென்றால் எனது நாடகங்கள் எல்லாம் காற்றோடு கலந்திருக்கும். 80 நாடகங்களை அச்சிட்டு வெளியிட்டு, அவை தமிழ் மக்களுக்கு நிரந்தரமாகக் கிடைக்கச் செய்தேன். இலங்கையில் 80 நவீன நாடகங்களை அச்சிட்டு வெளியிட்ட இன்னும் ஒரு எழுத்தாளர் இருக்கிறாரா? இலங்கையில், இலங்கை மண்வாசனை தமிழ் நாடகங்களுக்கு இப்பொழுது ஒரு புதிய தேவை வந்திருக்கிறதே! அந்த நாடகங்களை எங்களது வருங்கால சந்ததியும் பயன்படுத்தும்!

இலங்கை மண்வாசனை நாடகம், இலங்கை வானொலி நாடகம் என்றொரு புதிய இலக்கிய வகையையும் தோற்றுவித்தேன். இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் உள்ளவரை இலங்கைத் தமிழும் வாழும். இலங்கைத் தமிழ் உள்ள வரை, எனது நாடகங்களும் வாழும்!

நான் எனது தம்பிக்கு நன்றி கூறத் தேவையில்லை.

"அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்று பாரதி பாடுகிறான்.

நான் 31 ஆண்டுகள் தமிழ், சிங்கள, முஸ்லீம் மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் பொழுதே, இலக்கியப் பணியும் செய்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் மூலம் எனக்குக் கிடைக்கும் புண்ணியத்தில் அரைவாசி தானாகவே எனது தம்பியைச் சென்றடையும் அவர் இப்பொழுதே பெரிய படிப்புக்காரன்!

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் Engineering செய்து வகுப்பிலேயே (Batch) முதல் மாணவனாகத் தேறினார். இலங்கை அரசாங்கம் அவருக்கு Scholarship கொடுக்கவில்லை. நாங்களே அவரை கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைத்தோம். அவரது திறமையைக் கண்ட அப் பல்கலைக்கழகம், அவருக்கு Scholarship வழங்கியது. அங்கே கலாநிதிப் பட்டம் பெற்றுக் கொண்டு கனடா போய், அங்கே ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமையாற்றினார். அங்கே மேலும் பல பட்டங்கள் பெற்றார். இப்பொழுது ஓய்வு பெற்று இருக்கிறார். அவர் தமது கல்வியை மேலும் தொடர இந்தப் புண்ணியம் உதவும்.

இன்னும் ஒரு பிறவி இருந்தால் இந்தப் புண்ணியம் அவரை நிழலாகத் தொடரும். எனக்கும் இன்னொரு பிறவி வேண்டாம். இந்தப் பிறவியிலேயே செய்ய வேண்டியது எல்லாவற்றையும் செய்து விட்டேனே! மீண்டும் ஒரு முறை வந்து என்ன செய்யப் போகிறேன்?. "நோயில் விழாமல், பாயில் படுக்க விடாமல், என்னை அழைத்துக் கொள்வாய்!" என்பதுதான் நான் இப்பொழுது இறைவனிடம் விடுக்கும் வேண்டுகோள். அப்படி நிர்ப்பந்தத்தில் இன்னும் ஒரு பிறவி எடுக்க வேண்டி வந்தால், மீண்டும் வந்து இந்த இலக்கியப் பணியைத் தொடரவே விரும்புகிறேன்.!

**குடும்பத்தையும் கவனித்தேன் :** நான் ஒன்றும் குடும்பத்தை ஒறுத்து இலக்கியப் பணிசெய்யவில்லை. வசதியான குடும்பத்தில் பிறந்தாலும் இளம் வயதிலேயே பெற்றோர் இறந்து விட்டனர். இருந்தாலும் உறவினர்களது ஆதரவு நிறையக் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் உத்தியோகமானதும் எனது சம்பளத்திலேயே எனது சகோதரங்களைப் படிப்பித்தேன். அவர்கள் எல்லோரும் படித்துப் பட்டம் பெற்று உத்தியோகமாகி வசதியாக வாழ்கிறார்கள். இப் பொழுது அவர்களது பிள்ளைகளும் படித்துப் பட்டம் பெற்று வசதியாக வாழ்கின்றனர், இலங்கையிலும் வெளிநாடுகளிலும். நான் தொட்டதெல்லாம் பொன்னாயுற்று!

நானே வீட்டைக் கட்டினேன். அதில் மனைவியை மட்டு மல்லாது மாமியையும் இருந்து வாழ வைத்தேன். மகன் கொஞ்சக் காலம் குடும்பமாக வாழ்ந்தான். ஒரு பட்டதாரி ஆசிரியரான அவன் இறந்து விட்டாலும், இப்பொழுது மருமகளும் பேரப்பிள்ளைகளும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பேரப்பிள்ளைகளும் தங்களுக்கான வாழ்க்கையை நல்லபடியாக அமைத்துக் கொண்டிருக்கும் நிலையில் இருக்கின்றனர்.

மச்சாளைக் கலியாணம் செய்ததால், குடும்பத்தில் நன்றாக வேர் விட்டு, இப்பொழுது எனது குடும்பம், மனைவியின் குடும்பம், இரண்டிற்கும் குடும்பத்தலைவனாக இருக்கிறேன்!

எனது உறவினர் பலர் வெளிநாடுகளுக்குப் போய்விட்டாலும் இங்கேயும் பலர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எல்லோரிடமும் போய் வருகிறேன், தேவை ஏற்படும் பொழுது.

ஊரில் உள்ள நண்பர்கள் தெரிந்தவர்கள் அழைத்தால், அவர்கள் வீட்டு விசேடங்களுக்கும் போகத் தவறுவதில்லை. மற்றவர்களது உதவியின்றி எல்லா இடங்களுக்கும் போய்வரக்கூடிய நிலையில் இறைவன் என்னை வைத்திருக்கிறார். எல்லோருக்கும் வயதில் மூத்தவனாக, மரியாதைக்கு உரியனாக வாழ்கிறேன்!

எல்லாம் இன்னும் கொஞ்சக் காலத்திற்கு, கொஞ்ச நாட்களுக்கு. இப்பொழுது விடைபெறும் நேரம் வந்துவிட்டது. இந்த **மாநிலம் பயனுற வாழ்ந்தேன் என்று விடைபெறுவேன்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாகித்தியப் பரிசு :** எனது நூல்களில் ஒரு நூலுக்கு மட்டுமே இலங்கைச் சாகித்திய மண்டலம் பரிசு தந்திருக்கிறது. அதையும் தற்செயலாகத் தந்துவிட்டார்கள். தராமலேயே விட்டிருக்கலாம். ஒரு வேளை இவ்வளவையும் எழுதியவனுக்கு நாங்கள் ஒரு பரிசு கூடக் கொடுக்காவிட்டால், எங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்று தங்களது மூஞ்சைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும், அந்தப் பரிசைத் தந்திருக்கலாம். அவர்கள் எனக்குப் பரிசே தரவில்லை என்றே கொள்ளவேண்டும்!

முன்பு வெளியிட்ட நூல்களைவிட்டுவிடுவோம். 2010 ஆம் ஆண்டு நான் "நவீன நாடகம்" என்ற நூலை எழுதி வெளியிட்டிருந்தேன். அதில் நவீன நாடகம் என்றால் என்ன? இலங்கை மண்வாசனை நாடகம் என்றால் என்ன? என்பவற்றை விளக்கிக் கூறியிருப்பதுடன், தமிழ் நாடகத்தின் சுருக்கமான வரலாற்றையும் தந்திருந்தேன். அவை எல்லாம் பத்திரிகைகளில் வந்த கட்டுரைகள்.

அதற்கு முன்பு, நாட்டுக்கூத்துகளே இலங்கை மண்வாசனை நாடகங்கள் என்றும், அவற்றைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்றும் சொல்லிக் கொண்டிருந்தார்கள், பல்கலைக்கழகங்களில் நாடகம் கற்பிப்பவர்கள் கூட!

நாட்டுக்கூத்துகள் புராண இதிகாசங்களில் இருந்து உதயமானவை. அவை இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்தவை. அவற்றில் இலங்கை அடையாளம் ஒன்றுகூட இல்லை. அவற்றை இலங்கை நாடகங்கள் என்று சொல்ல முடியாது. இலங்கை வாழ் மக்களது சமகால வாழ்க்கையைச் சித்திரிப்பவையே இலங்கை மண்வாசனை நாடகங்கள்!. அவற்றைப் பேராசிரியர் கணபதிப்பிள்ளையே முதன் முதலில் எழுதினார் என்று கூறும் பல கட்டுரைகளை இலங்கையின் பல பத்திரிகைகளுக்கு எழுதியிருந்தேன். அவை அவற்றைப் பிரசுரித்தும் இருக்கிறன்றன. அந்தக் கட்டுரைகளில் சொல்லப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களையோ, எனது நவீன நாடகம் நூலில் கூறப்பட்டுள்ள கருத்துக்களையோ கண்டித்து ஒரு நூலல்ல, ஒரு கட்டுரைகூட ஒருவரும் எழுதத்துணியவில்லை!.

நான் கூறியுள்ளவை பிழை என்னால், சாகித்திய மண்டலத்தில் உள்ளவர்கள் சரியான விளக்கங்களையும் வரலாறுகளையும் எழுதி வெளியிட்டிருக்கலாம் தானே? எழுதத் தெரியாவிட்டால், தாங்கள் இதுவரை நாடக நூல்களுக்காகப் பரிசுகள் கொடுத்தவர்களைக் கொண்டு எழுதி வெளியிட்டிருக்கலாம் தானே!

எனது நூல்களுக்கு இலங்கை சாகித்திய மண்டலம் பரிசளிக்காததற்கு இரண்டு காரணங்கள்:

1. அவர்களுக்கு எனது நவீன நாடகங்கள் சரியாக விளங்கவில்லை. அவர்கள் நாடகம் எழுத மாட்டாதவர்கள்.!
2. அவர்கள் என் மீது கொண்ட பொறாமை. இவன். இவ்வளவு நாடகங்களை எழுதிக் குவித்திருக்கிறானே! எங்களால் அந்த மாதிரி ஒரு நாடகத்தைக்கூட எழுத முடியவில்லையே என்ற பொறாமை!

இலங்கை சாகித்திய மண்டலத்தின் தமிழ் பிரிவினரின் வரலாறே இதுதான்! அங்கே தனிப்பட்டவர்களே செல்வாக்குச் செலுத்தினார்கள். வெவ்வேறு காலங்களில் அது வெவ்வேறு மனிதர்களது செல்வாக்கிற்குட்பட்டிருந்தது. அவர்கள் இலக்கியம் படைக்காதவர்கள். அரசாங்கச் செல்வாக்கைப் பயன்படுத்தி அதிகாரப் பதவிகளில் ஏறி அமர்ந்து கொண்டு, தங்களுக்குப் பிடித்தவர்களுக்கெல்லாம் பரிசுகளை வழங்கினர். இலங்கை சாகித்திய மண்டலத்தின் நேர்மையற்ற, நடத்தைக்கு இதுவே போதிய சான்று.

நான் எத்தனை நாடக நூல்களை எழுதினேன்!

மட்டக்களப்புப் பிரதேசத்தில் ஒரு காலத்தில் ஆடப்பட்ட "வடமோடி தென்மோடி" நாட்டுக்கூத்து பற்றி மௌனகுரு ஒரு நூல் எழுதினார். அந்த ஆண்டு நாடகத்திற்குரிய சாகித்தியப் பரிசை அதற்கு வழங்கினார் சிவத்தம்பி!

**இதுதான் அவர்களது நேர்மை! இலக்கிய அறிவு!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் எப்பொழுதும் பக்கச் சார்பே இருந்தது. இப்பொழுதும் புலிச்சார்பு இருக்கிறது. 2010 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நூல்களில் அவர்கள் பரிசு கொடுத்த நூல்களின் பட்டியலைப் பார்த்தால் இது தெரியும்! சிங்கள அரசாங்கத்திற்கு ஒன்றும் தெரியாது. இவர்கள் தங்கள் மனம் போனபடி கூத்தடிக்கிறார்கள் பொதுப் பணத்தில்!

**எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை !**

இலங்கையில் சிலருக்குச் "சாகித்திய ரத்தினா" விருது கொடுத்திருக்கிறார்கள். படைப்பு இலக்கியத்தை (Creative literature முன்பு இருந்திராத, ஒரு இலக்கியத்தைப் புதிதாகப் படைத்தல்) பொறுத்த வரை, அவர்களில் ஒருவர் தானும் எனது சாதனையை நிகழ்த்தவில்லை!. நான் சாகித்திய மண்டலத்தில் உள்ளவர்ளுக்குச் சவால் விடுகிறேன்! அப்படி ஒருவர் இருந்தால், அவரது பெயருடன் அவர் படைத்த நூல்களின் பட்டியலையும் பிரசுரித்து விடுங்கள்!

அவர்களில் யாராவது நிரந்தரமாக நிலைத்திருக்கக்கூடிய ஒரு இலக்கியத்தைப் படைத்திருக்கிறாரா? அவர்களது பெயர்கள் எல்லாம் மறக்கப்பட்டுவிடும்!

நான் இலங்கைத் தமிழ் பேசும் மாணவர்கள் எல்லோரும் இலங்கை மண்வாசனை நாடகத்தைப் படிக்கவும் எழுதவும் நடிக்கவும் வழிசமைத்தவன்;! இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் உள்ளவரை இலங்கைத் தமிழும் வாழும். இலங்கைத் தமிழ் உள்ளவரை இலங்கை மண்வாசனை நாடகமும் வாழும். இலங்கை தமிழ் மண்வாசனை நாடகம் உள்ளவரை, எனது பெயரும் வாழும்!

**விழாக்களும் விருதுகளும் :** இது விழாக்களின் காலம். பாராட்டு விழா, வெள்ளி விழா, பொன்விழா, பவள விழா, வைரவிழா என்று எதேதோ விழாக்களைக் கொண்டாடுகிறார்கள். இன்னார் இனியார் என்றில்லை. எல்லோருக்கும் விழாக்கள்! எல்லாம் அவரவரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்குபடுத்துபவை. தங்களுக்குப் பிடித்தவர்களை அழைத்துத் தங்களுக்கு பாராட்டு மலைகளும், மலர்மாலைகளும் அணிவிக்கிறார்கள்!

நான் ஒரு விழாகூடக் கொண்டாடவில்லை. எனது செலவில் நூல்களை அச்சிட்டு, பாடசாலைகளுக்கும் நூலகங்களுக்கும் நன்கொடையாக அனுப்புகிறேன்! நான் எனது நூல்களுக்கு வெளியீட்டுவிழாக்கள்கூட வைப்பதில்லை. நவீன நாடகமும் வானொலி நாடகமும் எழுதமாட்டாதவர்கள் வந்து, எனது நூல்கள் பற்றி என்ன சொல்லப் போகிறார்கள்? அவர்கள் என்ன சொன்னாலும் எனக்கு ஒன்றுதான்!

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 5 முறை கொழும்புக்கு அழைத்தது பரிசு தர. நான் போகவில்லை. ஒருமுறை மட்டும் கட்டாயமாக விமானத்தில் அழைத்துச் சென்று, பரிசும் தந்து அனுப்பி வைத்தார்கள். கலாபூஷண விருது வாங்கவும் நான் கொழும்புக்குப் போகவில்லை. வடக்கு கிழக்கு மாகாண சபை மூன்று முறை அழைத்து பரிசுதர. ஒரு முறை ஆளுநர் விருது தரவும் அழைத்தது. நான் போகவில்லை. வீரகேசரி நிறுவனமும் இரண்டு முறை அழைத்தது பரிசு தர. நான் போகவில்லை. என்னால் வர முடியாது. எனக்குத் தர இருப்பவை எல்லாவற்றையும் எனக்கே அனுப்பிவையுங்கள் என்று கடிதங்கள் எழுதினேன். எல்லாவற்றையும் அனுப்பி வைத்தார்கள்!

**நன்றிகள் :** இந்த நூலில் உள்ள நான்கு நாடகங்களையும் தயாரித்து ஒலிபரப்பிய **இலங்கை வானொலியின் தமிழ்சேவையினருக்கு** எனது நன்றிகள். இந்த நாடகங்களைத் தயாரித்த **திருமதி இராஜேஸ்வரி சண்முகத்திற்கும்** அவற்றை நடித்துச் சிறப்பித்த கலைஞர்களுக்கும் விசேட நன்றிகள்.

இந்த நூலில் உள்ள கட்டுரைகளைப் பிரசுரித்த **உதயன் பத்திரிகை நிறுவனத்திற்கும்** இதில் உள்ள சிறுகதையைப் பிரசுரித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகேசரிப் பத்திரிகை நிறுவனத்திற்கு எனது நன்றிகள்.

கொக்குவில் இந்துக்கல்லூரி நூற்றாண்டு விழா மலரில் என்னைப் பற்றியும் எழுதியிருக்கிறார்கள், கல்லூரியின் மூத்த மாணவன் என்று. எனது சாதனைகள் எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறார்கள்!. அந்த நூற்றாண்டு விழா மலர்க்குழு உறுப்பினர்களுக்கு எனது நன்றிகள்.

இந்து சமய விவகார கலாச்சார அமைச்சும் யாழ் பொதுசன நூலகமும் எனது ஒவ்வொரு நூலில் இருந்தும் சில பிரதிகளைக் கொள்வனவு செய்து வருகின்றன. அந்த இரண்டு நிறுவனங்களுக்கும் எனது நன்றிகள்.

குடும்பப் பொறுப்பு முழுவதையும் தானே ஏற்றுக் கொண்டு, என்னை இலக்கியப்பணி செய்ய அனுமதித்துள்ள எனது மருமகள், ஆசிரியை மணிவண்ணன் இராஜராஜேஸ்வரிக்கும் என்னை நன்றாகக் கவனித்துக் கொள்கின்ற எனது பேரப்பிள்ளைகள் மணிவண்ணன் திருமகள், மணிவண்ணன் சுபாஜினிக்கும் எனது நன்றிகள். அதனால் தான் என்னால் இலக்கியப் பணிசெய்ய முடிகிறது!.

எனது தம்பி பண உதவி புரிவதாலேயே என்னால் இவ்வளவு தொகையான நூல்களை வெளியிட முடிந்தது. எனது தம்பி பொறியியல் கலாநிதி நடராசா தெட்சணாமூர்த்திக்கும் எனது நன்றிகள்.

கடைச்சாமி வீதி, நீராவியடி, ந. சுந்தரம்பிள்ளை
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


பக்கம்

முன்னுரை

நாடகம்

01. ஓர் இடம்பெயர்வின் கதை........................................ 01

02. இருப்பதற்கு ஒரு இடம் ........................................ 17

03 ஒரு பாடசாலை முன்னேறுகிறது........................................ 36

04. அயலவர்கள் ........................................53

05. கடமையா? கவிதையா?........................................ 71

சிறுகதை

06. ஒரு நாடகாசிரியரின் கதை........................................ 89

கட்டுரை

07. சிறுகதை எழுதுவது எப்படி?........................................ 103

08. மேற்குலக நாடகத்தின் ஒரு சுருக்கமான வரலாறு ....... 110

09. நல்ல இலக்கியங்களை இனங்காண்பது எப்படி?........... 120

10. நாடகம் எழுதுவது எப்படி?........................................ 124

11. பல்கலைக்கழகக் கல்வி........................................ 133

12. நாடகங்கள் பற்றிய விளக்கங்கள்........................................ 136

13. நவீன நாடக நூல் விமர்சனம்........................................ 142

14. ஆசிரியர் எழுதிய நூல்கள்........................................ 143



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒரு நவீன நாடகம்**

# ஒரு இடம்பெயர்வின் கதை

## பாத்திரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கதிரவேலு | – | அப்பா |
| 2. | பரிமளம் | – | அம்மா |
| 3. | ரவி | – | மகன் |
| 4. | சுசீலா | – | மகள் |
| 5. | தம்பையா | – | குடும்ப நண்பர் |
| 6. | நாகம்மா | – | தம்பையாவின் மனைவி |

**(கதை நடக்கும் காலம் ஏழு மாதங்கள்)**

**காட்சி – 1**

**இடம் : யாழ்ப்பாணம். கதிரவேலு வீடு**

**காலம் : 1995ஆம் ஆண்டு (மழை பெய்து கொண்டிருக்கிறது)**

கதிரவேலு : பரிமளம் சாவகச்சேரிக்குப் போகேல்லையா?

பரிமளம் : ஏன் சாவச்சேரிக்கு?

கதிர : சனம் எல்லாம் ஓடுது நாவற்குழிப் பாலம் தாண்டி.

பரி : ஏனாம் ஓடுதுகள்?

கதி : இராணுவம் பலாலீலை இருந்து முன்னேறி வருதாம்.

ரவி : ஆமி நகரத் தொடங்கிய நாள் முதல் யாழ்ப்பாணக்குடா நாட்டுச்சனம் ஓடிக் கொண்டு தானே இருக்குதம்மா!

பரி : ஆமி வருவனா?

கதி : வரவெண்டுதானே வெளிக்கிட்டவன். வருவன் தானே?

சுசீலா : (பயந்து) வந்தா என்ன செய்வன் அப்பா?

கதி : எனக்கு எப்பிடித் தெரியும் பிள்ளை? எதுவும் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுசீ : (பயந்து) அதுக்கு முந்திப் போயிடுவம் அப்பா!

கதிர் : நான் இருக்கத் தயார், உங்களுக்காகத் தான் போகவேணும்!

பரி : ஓ வயது வந்த பிள்ளையளையும் வைச்சுக் கொண்டு இருங்கோ!

கதி : பரிமளம்! முந்தி இருந்தனாங்கள் தானே?

பரி : அது சும்மா நேரம். இப்ப போரல்லா நடக்குது! கோபத்திலை வாறவன் என்ன செய்வனோ?

சுசீ : (பரிதாபமாக) அதுக்கு முன்னம் போயிடுவமப்பா!

கதி : இப்ப எப்பிடிப் போறது? மழையல்லா கொட்டுது!

பரி : மளேக்கை தான் சனமும் ஓடுது!

ரவி : கிழடு கட்டை குழந்தையள். நோயாளரைக்கூட மோட்டச் சைக்கிளிலை ஏத்திக் கொண்டு ஓடுறாங்கள்!

சுசீ : நடந்து போற சனம்தான் அதிகம். தாய்மாருக்குப் பின்னாலை பிள்ளையள் அழுது கொண்டு ஓடுதுகள். பாக்கப் பரிதாபமாய், இருக்கு!

கதி : பாக்காதை. பாக்காதை சுசீ!

சுசீ : பிறவுண் வீதியாலையல்லோ ஓடுதுகள்! எங்கடை முன் விறாந்தேலை இருக்கப் பாக்கலாம்.

ரவி : தங்கச்சி! பிறவுண்றோட்டு, கே. கே. எஸ். வீதி அரசடி வீதி, நாவலர் வீதி, கண்டி வீதி எல்லாத்தாலும் சனம் ஓடுது!

சுசீ : அண்ணை! எங்கை போகுதுகள்?

பரி : ஒரு இலக்கில்லாமல் ஓடுதுகள்! பயத்திலை ஓடுதுகள்!

சுசீ : அப்ப நாங்களும் இலக்கில்லாமல்தான் ஓட வேண்டி வரும்?

பரி : புலியள் என்ன சொல்லூறாங்கள்?

கதி : அவங்கள்தான் சனங்களைத் துரத்தூறாங்களாம், ஆமி வரப்போறாள். வந்தா வெட்டுவன், கொத்துமுவன், கற்பழிப்பன் எண்டு!

பரி : (பயந்து) ஐயையோ! அப்ப நாங்கள் போகத்தான் வேணும்!

ரவி : முதல்லை இப்ப இவ்வளவு சனமும் போக றோட்டு அகலம் காணாதே!

கதி : சனங்கள் றோட்டு. நீளம் அரக்கூதுகள்!

பரி : எப்படியோ போய்ச் சேர வேணுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதி : இப்ப மழேக்கை எப்பிடிப் போறது? காலமை பாப்பம்!
பரி : அதுக்கிடேலை ஆமி வந்துடுவன்!
கதி : இல்லை பரிமளம். அவ்வளவு கெதியா வரமாட்டான்!
சுசீ : அப்பா! இப்ப ஆமி எங்கை நிக்குது?
கதி : நீர் வேலி போலை இருக்குபிள்ளை!
பரி : இரவு முழுக்க எனக்கு நித்திரை வராது!
கதி : மழேக்கை ரோட்டிலை நிண்டு அரக்கினா நித்திரை வருமோ? இரவு வீட்டிலை இருந்து நித்திரை கொண்டுட்டு, காலமை போவம்!
சுசீ : அப்பா! என்னென்ன சாமான்கள் கொண்டு போறது?
பரி : சுசீ! எனக்கெண்டா வீட்டிலை உள்ள சாமான்கள் எல்லாத்தையும் கொண்டு போக வேணும் போலை இருக்கு!
ரவி : அம்மா! கார், பஸ், லொறி எண்டும் கடையாது. எங்களிட்டை ஆக மூண்டு சைக்கிள்கள் தான் நிக்குது!
கதி : அதுகளுக்கு அளவாய், அத்தியாவசியமான துணிமணி, சாப்பாட்டுச் சாமான்கள்...
பரி : நகையள் காசுகள்...
கதி : காசு வேணும். என்னிட்டை ஆக ஆயிரம் ரூபாதான் இருக்கு. இப்ப ஒருத்தரிட்டும் கடனும் வாங்கேலாது!
பரி : இந்தாருங்கோ இந்தச் சங்கிலியை வித்துக் காசாக்கிக் கொண்டு வாருங்கோ!
(சங்கிலியைக் கொடுக்கிறாள்)
ரவி : சனமெல்லாம் ஓடுது! இப்ப ஆர் சங்கிலி வாங்கப் போறான்?
பரி : போய் முயற்சித்துப் பாருங்கோ!
சுசீ : இந்தாருங்கோ அப்பா! என்ரை சங்கிலியையும் தாறன்.
கதி : வேண்டாம். இளம் பிள்ளை... நீ வைச்சிரு சுசீ.
ரவி : பிறகு தேவை வந்தா, விக்கலாம்.
கதி : நான் இதை வித்துக் கொண்டுவாறன். நீங்கள் சாமான்களை எடுத்துக் கட்டி வையுங்கோ!
(சைக்கிளில் ஏறி ஓடுகிறார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி – 2

**இடம் : யாழ்ப்பாணம். கதிரவேலு வீடு**

**காலம் : அடுத்த நாள் காலை**

கதி : ராத்திரி நல்லா நித்திரை கொண்டம்.

பரி : இனி எப்ப நித்திரையோ?

கதி : எல்லாம் ரெடியோ?

பரி : நான் ஆயத்தம்.

ரவி : உடுபுடவையள் என்ரை மூட்டேலை.

சுசீ : சாப்பாட்டுச் சாமான்களும் புத்தகங்களும் என்ரை பெட்டீலை.

கதி : சமைக்க சட்டிபானை?

சுசீ : அலுமினியச் சட்டி ஒண்டு கொண்டாறம்.

கதி : சாவச்சேரிலை விறகு வாங்கலாம்.

பரி : தென்மராட்சீலை விறகிருக்கும்.

கதி : காசு ஆக ஆறாயிரம் ரூபாய்தான் இருக்கு. பத்தாயிரம் பெறுமதியான சங்கிலிக்கு ஐயாயிரம் தந்தான்.

பரி : அதாவது வந்தானே!

கதி : கொள்ளை அடிக்கிறாங்கள்!

பரி : இதையாவது தந்தானே. இது தான் எங்களுக்கு உயிர்!

சுசீ : எதையாவது வாங்கிச் சாப்பிடலாம்.

கதி : சனம், அரக்கி அரக்கித்தான் போகுது! நிக்கத்தான் வேண்டி வரும்!

பரி : பறவாய் இல்லை வெளிக்கிடுவம்.

சுசீ : வீட்டிலை நிக்கப் பயமாய் இருக்கப்பா!

கதிர் : பிள்ளை சுசீ பயபிடாதை! நிதானமாக வெளிக்கிடுவம்.

ரவி : தங்கச்சி உந்தச் சாமான்களை எடுத்து அடுக்கு. பயம் போயிடும்!

கதி : அம்மாவையும் ஒரு மூட்டையையும் நான் கொண்டாறன்.

ரவி : நான் உடுப்பு மூட்டையும் சாப்பாட்டு மூட்டையும்.

சுசீ : நான் சாப்பாட்டுச் சாமான்கள், புத்தகம் கொப்பியள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதி : கன புத்தகங்கள் கொப்பியள் கொண்டராதை சுசீ! அதுகளுக்குப் பதிலாக அரிசி சாமான்களைக் கொண்டரலாம். சமைச்சுச் சாப்பிட.

சுசீ : படிக்க வேண்டிய புத்தகங்களையும் நோட்சையும் கொண்டாறன் அப்பா. படிக்கத்தானே வேணும்?

பரி : என்ன நடக்கும் எண்டு தெரியாது. படிப்பைக் கைவிடக் கூடாது.

நவி : என்ரை நோட்ஸ் கொஞ்சத்தையும் கொண்டு வா தங்கச்சி.

சுசீ : சரி அண்ணை. எடுத்துத்தா!

(ரவி நோட்சை எடுத்துக் கொடுக்கிறான்)

கதி : வீட்டை என்ன செய்வம்?

பரி : பூட்டித் திறப்பை எடுத்துக் கொண்டு போவம்.

கதி : வேண்டாம் பரிமளம். திறந்து விட்டுட்டுப் போவம். பூட்டி விட்டா, கதவை உடைப்பங்கள். இப்பிடியே விட்டுட்டுப் போனா, விரும்பினவன் போய், விரும்பியதை எடுத்துக் கொண்டு போகட்டும்!

கதி : சரி, ஏறுங்கோ, புறப்படுவம்!

ரவி : உந்த நல்லூர் வரைதானே! பிறகு அங்காலை நடை! 12 மைல்.

சுசீ : அண்ணை அதெல்லாம் நான் நடப்பன்!

பரி : (தழுதழுத்து) வீடே! குடியிருந்த வீடே! போட்டு வாறம்! (எல்லாரும் போகிறார்கள்)

### காட்சி – 3

**இடம் : யாழ்ப்பாணம். தென்மராட்சி**

**காலம் : இரண்டாம் காட்சி நடந்து இரண்டு நாட்களின் பின்பு**

சுசீ : அப்பாடா! நாவற்றுகுழி தாண்டி வந்து சேந்துட்டம்!

ரவி : தங்கச்சி! நடந்து வந்து சேந்திட்டம்! (சிரிக்கிறான்)

பரி : நடக்க றோட்டிலை இடமில்லை. சனம் இடிச்சு இடிச்சுத் தள்ளுது!

சுசீ : அம்மா! சில சனம் விழுந்து போச்சு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதி : பசிக் களேலும் விழுந்திருக்குங்கள்!
சுசீ : விழுந்ததுகள் விழுந்தபடியே கிடக்குதுகள். ஒருத்தரும் திரும்பிப் பாக்கேல்லை!
கதி : பிள்ளை சுசீ. ஒருத்தரை ஒருத்தர் பாக்கேலாத நிலை!
ரவீ : சாப்பாடு தண்ணி ஒண்டுமில்லை, ரண்டு நாளாக!
சுசீ : அண்ணை! மழைத்தண்ணி குடிச்சம்!
பரி : ஏன் இந்த அவலம்?
கதி : பரிமளம்! ஆண்டவனைத் தான் கேக்க வேணும்!
பரி : (பரிதாபமாக) ஆண்டவா! ஏன் இந்த அவலம்? இன்னும் எவ்வளவு தூரம் நடக்க வேணும்? எவ்வளவு காலம் நடக்க வேணும்?
ரவி : அம்மா! ஆண்டவன் பதில் சொல்லமாட்டார் (சிரிக்கிறான்)
சுசீ : அம்மா! பசி! பசி!
பரி : அது தான் காச்சுறன். கறிகாச்சேலாது. கஞ்சி குடியுங்கோ!
ரவி : அதே தேவா அமிர்த்தம்!
கதி : இது ஒரு கோயில். நிக்க இருக்க இடமில்லை. பத்துக் குடும்பம் நிக்குது!....
பரி : வேறை இடத்துக்குத்தான் போக வேணும்.
கதி : பொறுங்கோ! கஞ்சியைக் குடிச்சு கொஞ்ச நேரம் ஆறி இருந்துட்டுப் போவம். இன்னும் கிழக்கை போனா, வீடு ஏதும் கிடைக்கும்!
(தம்பையா வருகிறார்)
பரி : தம்பையா அண்ணை வாறார்!
தம் : என்ன கதிரவேலு குடும்பத்தோடை?
கதி : நீயும் குடும்பத்தோடை தானே வந்து நிக்கிறாய் தம்பையா? (சிரிக்கிறார்)
தம் : ஓம், ஓம் வேறை வழி இல்லை. முழு யாழ்ப்பாணச் சனமும் தென்மராட்சிலை வந்து நிக்குது!
கதி : நீங்கள் எங்கை நிக்கிறியள்?
தம் : ஒரு கோயில்லை. வேறை இடம் பாக்க வேணும். இது கைதடி, உங்காலை சாவகச்சேரி, கொடிகாமம் எண்டு போகவேணும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதி : தம்பையா, நாங்களும் வேறை இடம்தான் பாக்கிறம்.

தம் : இது கைதடி, கிட்ட, ஷெல் அடிப்பன். தூரப் போயிட்டா நல்லது.

ரவி : அப்ப இன்னும் நடக்கவேணுமா அப்பா?

கதி : வேறை வழி இல்லை.

பரி : தனி வீடா எடுத்துட்டா வசதி!

தம் : அப்பிடிக் கிடையாது தங்கச்சி. யாழ்ப்பாணம் முழுக்க இஞ்சை. ஒரு வீட்டிலை ஐஞ்சு ஆறு குடும்பம்!

பரி : அது கூடப் பறவாய் இல்லை. இப்பிடி வெட்டவெளிலை எப்பிடி இருக்கிறது?

கதி : அப்ப வெளிக்கிடுவம். உன்ரை குடும்பத்தையும் கூட்டியா தம்பையா!

தம் : ஓம், ஓம் சேர்ந்து நடந்தா களை தெரியாது! வாறன் (போகிறான்)

காட்சி – 4

இடம் : யாழ்ப்பாணம், சாவகச்சேரி

காலம் : 1996 ஆம் ஆண்டு ஜனவரி மாதம்.

சுசீ : மூண்டு மாதங்களாக, இந்தக் கொட்டிலை சீவிக்கிறம்!

ரவீ : தங்கச்சி மாட்டுக் கொட்டில்! (சிரிக்கிறான்)

பரி : அதாவது கிடைச்சுதே எண்டு சந்தோஷப்படடா ரவி.

கதி : வீட்டுக்காறன் இராசசேகரத்துக்கு நாங்கள் நன்றி சொல்ல வேணும். தன்ரை மாடுகளை அவிட்டு வெளீலை கட்டீட்டு, எங்களை இருக்கவிட்டிருக்கு மனிசன்.

சுசீ : யாழ்ப்பாணத்திலை கல்வீட்டிலை இருந்தனாங்கள். இஞ்சை கொட்டில்லை சீவிக்கிறம்.

கதி : உதுகும் கிடைக்காத சனம் தான் அதிகம். சில சனம் தலைக்கு மேலை கிடுகுகளைக் கட்டீட்டு இருக்குது!

பரி : சில வீட்டிலை ஐஞ்சு குடும்பம். அதுக்கு இது பறவாயில்லை. நாங்கள் எங்கபாட்டிலை சுதந்திரமாயிருக் கிறம்!

சுசீ : சேறு சகதி, நுளம்புக்கடி....

ரவி : அதுகளைத் தவிர்க்கேலாது தங்கச்சி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரி : மழைபெய்யேல்லை. மழை எண்டா இருக்கேலாது!

கதி : கடவுளாப்பாத்து மழையை நிப்பாட்டியிருக்கிறார். (சிரிக்கிறார்)

சுசீ : கண்டதையும் சாப்பிடுறம்!

பரி : நிவாரணம் தாறானல்லே!

கதி : அரசாங்கம் எங்களுக்கு நிவாரணம் தருது!

பரி : இந்த நிவாரணம் இல்லாட்டா, கன சனம் செத்திருக்கும்.

கதி : கொம்மாவுக்குச் சம்பளமும் எனக்கு பென்சனும் வருது! நாங்கள் சமாளிக்கிறம்!

சுசீ : அப்பிடி இருந்தும் ரண்டு சங்கிலியும் வித்தாச்சே அம்மா!

பரி : என்ன செய்யிறது? எல்லாம் வாங்க வேணும்!

சுசீ : இப்பிடி எவ்வளவு காலம் எண்டு இருக்கிறது? (சிணுங்குகிறாள்)

பரி : சனம் எல்லாம் தென்மராட்சிக்கு வந்துட்டுது. இப்ப ராணுவம் வலிகாமத்தைப் பிடிச்சிருக்கும்.

ரவி : அதைப் பிடிச்ச பிறகு தென்மராட்சிக்கு வந்தாலும் வரும் ராணுவம்.

சுசீ : வருவங்கள்தானே அண்ணை!

ரவி : சண்டை மூண்டாலும் மூளும்.

சுசீ : சண்டை மூண்டா நாங்கள் எல்லாம் சரி!

கதி : எங்கும் செல் அடிப்பான்!

பரி : அப்ப நாங்கள் பளைப் பக்கமாத்தான் போக வேணும்!

ரவி : அம்மா! அங்கை ஆனையிறவிலை இருந்து செல் அடிப்பன்.

சுசீ : தப்பவழி இல்லை!

ரவி : அப்பா, கொஞ்சச் சனம் கிளிநொச்சிக்கும் போட்டுதல்லே, அங்கை பாதுகாப்பெண்டு!

கதி : அங்கை வீடுவாசல் குறைவு. இருக்க இடமில்லை. கொட்டில்கள்கூடக் கிடையாது!

பரி : நோய் நொடி.........

சுசீ : நோய் நொடிலையே சனம் செத்திருக்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவி : கிளிநொச்சீலை தங்காமல், சிலர் வவுனியாவுக்கும் போயிருப்பினம்.

சுசீ : சிலர் கொழும்புக்கும் ஓடியிருப்பினம்!

கதி : அது வெளிநாட்டுக் காசு உள்ளவை. கொழும்பு சிலவல்லே?

ரவி : இலங்கை ராணுவத்துக்குப் பயந்து இராணுவத் தலைமை இடத்துக்கு ஓடுது சனம்! இதுகும் நல்ல முஸ்பாத்திதான்!

கதி : எங்களுக்கு வெளிநாட்டிலை ஒருத்தரும் இல்லை. நாங்கள் சாவகச்சேரிலையே இருப்பம்!

பரி : வீட்டை போகும் வரையும்!

சுசீ : வீட்டுக்குப் போவமா அம்மா?

கதி : இப்போதைக்கு இல்லை. ராணுவம் வந்தாத்தான்!

ரவி : ராணுவத்துக்குப் பயந்து ஓடியந்துட்டு, இப்ப ராணுவம் வரவேணும் எண்டு எதிர்பாக்கிறம்! (சிரிக்கிறான்)

சுசீ : அண்ணை! ஆர் அப்பிடி எதிர்பாக்கிறது?

ரவி : சுசீ! ராணுவம் இஞ்சை வந்தாத்தானே நாங்கள் வீட்டை போகலாம்? (சிரிக்கிறான்)

சுசீ : போனா வீடிருக்குமோ?

கதி : ஏன் வீட்டுக்கு என்ன? இருக்கும்!

பரி : ஷெல்லடிலை, குண்டு வீச்சிலை உடைஞ்சு....

கதி : எல்லாரும் இஞ்சாலை வந்துட்டம். அப்ப அங்கை சண்டை பிடிக்க வேண்டி இராது! ஏன் குண்டு போடப் போறான்?

ரவி : அப்ப வீடு இருக்கும் எண்டு சொல்லூறியள் என்னப்பா?

சுசீ : சாமான்கள் எல்லாம் களவு போயிருக்கும்!

பரி : எல்லாரும் இஞ்சாலை வந்துட்டம். அப்ப ஆர் களவெடுக்கிறது?

சுசீ : எல்லா வீடுகளிலும் களவெடுக்கலாம். அப்ப களவெடுத்து என்ன செய்யிறது? (சிரிக்கிறான்) களவுக்குப் பெறுமதி இல்லை!

பரி : வீட்டிலை கறையான் புத்தும் வளந்திருக்கும்!

சுசீ : புற்றெடுத்தா?

பரி : நிலம் பிளக்கும். சுவர்கள் கதவுகள் விழும்!

சுசீ : கெதீலை திரும்பினா, எல்லாத்தையும் காப்பாற்றலாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதி : அப்ப கடவுளைப் பிரார்த்தியுங்கோ, கெதீலை வீட்டை அனுப்பெண்டு!

பரி : கடவுள்தான் எங்களைக் காப்பாற்ற வேணும்!

**காட்சி – 5**

**இடம் : யாழ்ப்பாணம். சாவகச்சேரி**

**காலம் : 1996 ஆம் ஆண்டு ஏப்றல்**

(ஷெல் வெடிக்கும் சத்தம் கேட்கிறது!)

பரி : என்ன ஷெல்லடிச் சத்தம்?

சுசீ : இன்னும் ஒரு சத்தம்!

ரவீ : என்னவாயிருக்கும்? சண்டை துவங்கீட்டுதோ?

சுசீ : (பயந்து) ஐயையோ! சண்டையா?

ரவீ : நாங்கள் மறுபடியும் ஓட வேணுமோ?

சுசீ : சாகப் போறம்! (அழுகிறாள்)

கதி : பொறுங்கோ! வெளீலை போய் பாத்தாறன்.

பரி : (பயந்து) பாத்துப் போங்கோ!

கதி : என்னண்டு அறிய வேணுமே பரிமளம்! தொழிற்பட வேணுமே!

ரவி : நான் போய்ப் பாத்தரட்டா அப்பா?

கதி : இரடா ரவி. நான் போறன். (போகிறார்)

பரி : (பயந்து) கடவுளே! கடவுளே!

ரவி : ஓடவேணுமோ?

சுசீ : சாக வேணுமோ?

ரவி : இப்ப ஓடுறது சுகம். கொண்டு போறதுக்கு சாமான்கள் இல்லை!

பரி : (எரிச்சலாக) என்ன நடக்குதெண்டு தெரியேல்லை. நீ சாமான்கள் கணக்குப் பாக்கிறாய்!

(மீண்டும் ஒரு ஷெல் சத்தம் கேட்கிறது)

பரி : தொடர்ந்து ஷெல்லடிக்கிறான். சண்டைதான் துவங்கீட்டுது போலை.

(கதிரவேலு வருகிறார்)

கதி : பரிமளம்! ஆமி சாவகச்சேரிக்கு வந்துட்டுதாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரி : வந்துட்டானா?

ரவி : நாங்கள் ஓடவேணுமா?

கதி : கைதடீலும், மட்டுவிலும் இருந்து ஷெல்லடிக்கிறான்.

பாஜ : ஏன் ஷெல் அடிக்கிறான்? எங்களை ஓடச் சொல்லியா?

சுசீ : (பயந்து) நாங்கள், எங்கை ஓடுறது?

கதி : அவசரப்படாதேங்கோ பயப்பிடாதேங்கோ! பாத்துச் செய்யலாம்!

பரி : இஞ்சை தம்பையா அண்ணையும் நாகம்மா அக்காவும் வருகினம்

(தம்பையாவும் நாகம்மாவும் வருகிறார்கள்)

கதி : வாருங்கோ தம்பையா அண்ணை!

பரி : வாருங்கோ நாகம்மா அக்கா. இருங்கோ!

தம் : கதிரவேலு நீ சங்கதி கேள்விப்படேல்லையா?

கதி : என்ன நடக்குது தம்பையா அண்ணை.?

தம் ஆமி தென்மராட்சிக்கு வந்துட்டுது.

பரி : கேள்விப்பட்டன் தம்பையா அண்ணை.

பரி : அப்ப ஏன் ஷெல் அடிக்கிறான்?

தம் : எங்களை யாழ்ப்பாணம் போகச் சொல்லி.

பரி : அப்ப சண்டை நடக்கேல்லை?

தம் : இல்லை!

சுசீ : நல்ல காலம் சண்டை நடவாதது. நடந்திருந்தா நாங்கள் எல்லாம் செத்திருப்பம்!

ரவி : அப்ப வெளிக்கிடுங்கோ அம்மா, யாழ்ப்பாணம் போவம்!

பரி : ரவியனுக்கு ஒரு அவதி!

ரவி : இந்த நரகத்துக்காலை தப்புவம். ஐஞ்சு குடும்பங்களோடை இருந்தது காணும். இனிப் போய் சொந்த விட்டிலை இருப்பம்!

கதி : பொறடா ரவி. நல்லா விசாரிச்சு, யோசிச்சு வெளிக்கிடுவம்!

தம் : கதிரவேலு இனி யோசிக்க ஒண்டுமில்லை. ஆமி வந்துட்டுது. எல்லாரையும் யாழ்ப்பாணம் போகச் சொல்லி ஒலிபெருக்கிலை அறிவிக்கிறானாம்!

ரவி : பிறகென்ன? வெளிக்கிடுவம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுசீ : அண்ணைக்கு அவசரம்!

ரவி : உனக்கு வீட்டை போக ஆசையாக இல்லையா தங்கச்சி?

சுசீ : போவம் போவம். அங்கை வீடிருக்கோ என்னவோ?

பரி : எல்லாம் இருக்கும் கடவுள் காப்பாற்றியிருப்பர்!

கதி : அப்ப சனம் என்ன செய்யுது?

நாக : சனத்துக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை. நிண்டு திகைக்குது!

தம் : சிலர் யாழ்ப்பாணம் திரும்புகினம். சிலர் கிளாலியாலை கிளிநொச்சிக்கு ஓடுகினம்.

நாக : நீங்கள் என்ன செய்யப் போறியள் எண்டு கேக்கத்தான் வந்தனாங்கள் பரிமளம்?

பரி : நாகம்மா அக்கா, நீங்கள் என்ன செய்யப்போறியள்?

நாக : நாங்கள் கிளிநொச்சிக்குத்தான் போக யோசிக்கிறம்!

ரவி : கிளிநொச்சீலை வீடுகள் இல்லை மாமா?

தம் : மரங்களுக்குக் கீழை தான் நிக்க வேணும். இருக்கிற சின்ன வீடுகளிலும் ஆக்கள் இருப்பினம். நாங்கள் ஏன் கிளிநொச்சீலை தங்கூறம்? அங்காலை வவுனியாவுக்குப் போவம்!

சுசீ : அங்கை ஆமி நிக்குதே மாமி.

நாக : அங்கை தமிழ் ஆக்களும் இருக்கினம் தானே பிள்ளை? (சிரிக்கிறாள்)

தம்: நாங்கள் அங்காலை கொழும்புக்கு போவம்!

ரவி : ஆமிக்குப் பயந்து ஆமீன்ரை தலைமைப் பீடத்துக்கே போறியள் மாமா? (சிரிக்கிறான்)

நாக : எங்கையோ ஓடவேண்டியதுதானே தம்பி, உயிரைக் காப்பாற்ற!

தம் : நீங்கள் என்ன செய்யப் போறியள் கதிரவேலு?

பரி : அதுதான் யோசிக்கிறம் அண்ணை! புலியள் என்ன சொல்லூறாங்கள்?

கதி : அவங்கள் கிளிநொச்சிக்கு ஓடீட்டாங்கள்!

கதி : இவங்கள் நல்லாக்களாக்கிடக்கு. எங்களைக் கொண்டந்து இஞ்சை விட்டுட்டு, அவங்கள் கிளிநொச்சிக்கு ஓடீட்டாங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவி : எங்களையும் வரச் சொல்லீட்டுத்தான் ஓடினாங்கள்!

கதி : உங்களை நம்பியோ?

ரவி : அங்கை வீடுகளும் இல்லை. நாங்கள் யாழ்ப்பாணம் போவம் அம்மா!

சுசீ : கெதியா வெளிக்கிடுவம் அப்பா!

சுசீ : யாழ்ப்பாணம் போவம் அம்மா.

ரவி : கெதியா வெளிக்கிடுவம் அப்பா!

பரி : சரி, பிள்ளையளின்ரை விருப்பப் படியே யாழ்ப்பாணம் போவம். கடவுளிலை பாரத்தைப் போட்டுட்டு. வீட்டையும் காப்பாற்றலாம்!

ரவி : மாமா! கிளிநொச்சிக்குப் போறதானா, கிளாலி தாண்டி அங்காலை சேத்துக்கையும் நடந்து தானே போக வேணும்? கஷ்டம்! (சிரிக்கிறான்)

தம் : தம்பி ரவி! இப்பவும் சேத்துக்கைதானே நிக்கிறம்! (சிரிக்கிறார்)

கதி : சரி தம்பையா நீங்கள் கிளிநொச்சிக்குப் போறதானா, கிளாலிக்கு ஓடுங்கோ! பிறகு ஆமி கிளாலியைப் பிடிச்சா, போகேலாது! ஓடுங்கோ!

தம் : சரி வாறம் கதிரவேலு. நாங்கள் கிளிநொச்சிலை நிக்க-மாட்டம். அதாலை கொழும்புக்கும் போவம்!

பரி : நாகம்மா அக்காவுக்கு தம்பியள் துரை, கனடாவிலை-யல்லே!

கதி : எங்களுக்கு ஒருத்தரும் வெளிநாடுகளிலை இல்லை! நாங்க யாழ்ப்பாணம் போறம்.

நாக : (கவலையாக) சரி வாறம் பரிமளம். (கவனமாக)

பரி : சரி போட்டு வாருங்கோ! இனி எப்ப சந்திப்பமோ நாகம்மா அக்கா?

நாக : (கவலையாக) சந்திக்காமலும் போகலாம் பரிமளம்! சரி வாறம்! (போகிறார்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காட்சி – 6

**இடம் : யாழ்ப்பாண நகர்.**
**காலம் : 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்.**

(மக்கள் யாழ் நகரை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். சன இரைச்சல். வாகனங்களின் இரைச்சல்கள் கேட்கின்றன.)

ரவி : அப்பாடா யாழ்ப்பாணம் வந்து சேந்துட்டம்.

சுசீ : போன மாதிரியே வந்து சேந்துட்டம்!

கதி : போன மாதிரி இல்லை பிள்ளை சுசீலா. அப்ப கனசனம் ஒரே நாளிலையல்லே போனது?

பரி : சனங்கள் கொஞ்சம் கிளிநொச்சிக்கு ஓடீட்டுது! நாங்கள் ஆறுதலாக வாறம்.

ரவி : ஆமிக்காரனுக்குப் பயந்து ஓடீட்டு, இப்ப ஆமிட்டையே திரும்பி வாறம் (சிரிக்கிறான்)

சுசீ : ஆமிக்காரர் சந்தியளிலை சும்மா பாத்துக் கொண்டு நிக்கிறாங்கள். எங்களுக்கு முன்னமே கன ஆக்கள் யாழ்ப்பாணம் வந்துட்டினம்.

கதி : ஆமி போங்கோ எண்டு சொன்னதும் ஓடியந்துட்டாங்கள். வந்து வீடுகள் சுத்தம் செய்யுங்கள்!

ரவி : ஆமிக்காறன் எங்களை ஒண்டும் செய்யேல்லையே!

சுசீ : சந்தியளிலை சும்மா பாத்துக் கொண்டு நிக்கிறாங்கள்.

பரி: எல்லாருமல்ல. சில வீடுகளிலைதான் ஆக்கள் நிக்கினம்.

கதி : மிச்சப் பேரும் வருவினம்!

பரி : கிளிநொச்சிக்கு ஓடாதவை.

கதி : ஆ! வந்து சேந்தாச்சு. நீராவியடி பிறவுண் வீதி, எங்களை வீட்டைப் பாப்பம்!

பரி : (மகிழ்ச்சியாக) ஆ! வீடு இருக்கு! நாங்கள் வாழ்ந்த வீடு இருக்கு! நாங்கள் இருந்து வாழ வீடு இருக்கு! கடவுள் வீட்டைக் காப்பாற்றீட்டார்!

சுசீ : எங்கும் கஞ்சல் குப்பை. (பரிமளம் ஓடுகிறாள்)

கதி : பரிமளம்! ஓடாதை! ஓடாதை! உந்தக் கஞ்சல் குப்பேக்கை ஏதும் கிடந்து வெடிக்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரி : வீட்டுக்குள்ளை போக வேணுமே!

கதி : ஒரு தடியை எடுத்துக் குப்பையைத் தட்டி விலக்கிக் கொண்டு போ!

(பரிமளம் சரி குப்பையைத் தட்டி விட்டு வீட்டுக்குப் போகிறாள்.)

கதி : நாங்களும் வாறம்.

(எல்லோரும் வீட்டுக்கு வந்து சேருகிறார்கள்)

பரி : கதவுகளெல்லாம் உடைச்சுக் கிடக்கு!

சுசீ: வீடு முழுக்க தூசி!

ரவி : தளபாடங்கள் எல்லாம் அப்பிடியே இருக்கு.

கதி : லாச்சியளை இழுத்து, கடுதாசியளைக் கும்பமாக் கொட்டிக்கிடக்கு!

ரவி : எதையோ, ஆரோ தேடியிருக்கிறாங்கள்!

பரி : குசினிச் சாமான்களும் அப்பிடியே இருக்கு!

ரவி : அம்மா! ஆர் களவெடுக்கிறது? களவெடுத்து என்ன செய்யிறது? (சிரிக்கிறான்)

சுசீ : எனக்குப் பசிக்குது!

ரவி : எனக்கும் தான் அம்மா!

கதி : எனக்கும் தான். முதல்லை சமைச்சுக் சாப்பிடுவம்! கொண்டு வந்த நிவாரண அரிசீலை மிச்சம் இருக்கல்லே?

பரி : முதல்லை தேத்தண்ணி வைக்கிறன். அதைக் குடிச்சுட்டுச் சமைப்பம்! தம்பி தண்ணி அள்ளியாடா!

ரவி : சரி அம்மா, வாளியைத் தா!

(கிணற்றடிக்கு வாளியுடன் ஓடுகிறான்)

சுசீ : நான் வீட்டைக் கூட்டட்டா அம்மா?

கதி : பொறு சுசீ. உந்தக் கடுதாசியளுக்கை ஏதும் வேண்டியதும் கிடக்கும். அதுகளைத் தெரிஞ்சு எடுத்துட்டுக் கூட்டுவம்?

ரவி : (வந்து) இந்தா அம்மா தண்ணி கிணறு முழுக்கக் கஞ்சல்!

கதி : ஆறு மாதம் புழக்கம் இல்லையல்லே! பிறகு இறைப்பம். தண்ணியைச் சுடவைச்சுப் பாவியுங்கோ!

ரவி : பேணியளையும் கழுவியாறன்! (போய் வருகிறான்)

பரி : இந்தாருங்கோ தேத்தண்ணி!

கதி : டக்கெண்டு, வைச்சுட்டாய் பரிமளம்! ஆறுமாதத்திப் பிறகு இண்டைக்குத் தான் வீட்டிலை ஆறுதலாய் இருந்து தேத்தண்ணி குடிக்கிறம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரி : குடிச்சுட்டுச் சும்மா இருக்கக்கூடாது! வீட்டைத் துப்பரவு செய்யிற வேலையைத் துவங்குங்கோ!

சுசீ : அதுக்குத்தான் ஆவலாய் இருக்கிறம் அம்மா! (எல்லோரும் சிரிக்கிறார்கள்)

**காட்சி – 7**

**இடம் : யாழ்ப்பாணம்.கதிரவேலு வீடு**

**காலம் : 1996 ஆம் ஆண்டு மே மாதம்.**

சுசீ : ஒரு சுற்றுலா போயிட்டு பழையபடியே வந்து வீட்டிலை இருக்கிறம்!

பரி : கொஞ்ச சாமான்களைக் காணேல்லை. சிறு சிறு இழப்புகள்!

கதி : சிலருக்குப் பெரும் பெரும் இழப்புக்கள் பரிமளம்!

ரவி : இடம் பெயர்ந்து போனவை அதிகமாக எல்லோரும் திரும்பி வந்துட்டினம் என்னப்பா?

கதி : முக்காவாசிப் பேரும் வந்துட்டினம்.

பரி : மிச்ச ஆக்களும் வருவினம்.

சுசீ : அம்மா வெளிநாடு போனவையைத் தவிர, மற்றவை எல்லாம் வருவினம்! (சிரிக்கிறாள்)

பரி : வந்ததாலை வீட்டைக் காப்பாற்றீட்டு, வீட்டிலை இருக்கிறம்.

சுசீ : கிளிநொச்சிக்குப் போயிருந்தா?

ரவி : கிளாலிச் சேத்துக்காலை போய், ஒரு மரத்தின் கீழை கிடப்பம்! (சிரிக்கிறான்)

கதி : எல்லாரும் இதிலை இருந்து ஒரு பாடம் படிக்க வேணும்!

சுசீ : என்ன பாடம் அப்பா?

கதி : இனிமேல் இந்த மாதிரி எடுபட்டு, ஆடுமாடுகள் போலை ஓடக்கூடாது! (எல்லாரும் சிரிக்கிறார்கள்)

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு நவீன நாடகம்

# இருப்பதற்கு ஒரு இடம்

## பாத்திரங்கள்

1. கந்தையா – கணவன்
2. பாக்கியம் – மனைவி
3. மஞ்சுளா – அவர்களது மகள்
4. ரவி – அவர்களது மகன்
5. சுப்பிரமணியம் – கணவன்
6. சிவலட்சுமி – மனைவி
7. சர்வேஸ்வரன் – அவர்களது மகன்

கதை நடக்கும் காலம் 15 ஆண்டுகள்

### காட்சி – 1

இடம்: யாழ்ப்பாண நகரம்

காலம்: 1996ஆம் ஆண்டு

கந்தையா: பாக்கியம், ஒரு வழியா யாழ்ப்பாணம் வந்து சேர்ந்திட்டம்.

பாக்கியம்: சாவச்சேரிலை இருந்து நடந்து நடந்து வந்து, களைச்சுப் போனம்!. (பெருமூச்சு விடுகிறாள்)

மஞ்சுளா: நீராவியடி பிறவுண் வீதி....

கந்: வீடு இருக்கோ எண்டு பாரடா ரவி!

ரவி: மதில் இருக்கு. ஓ வீடிருக்கு,

மஞ் எல்லாம் கஞ்சல், குப்பை, தூசி...

கந்: பொறுங்கோ பிள்ளையள் அவசரப்பட்டு உள்ளுக்குப் போகாதேங்கோ உந்தக் கஞ்சல் குப்பைக்கை ஏதும் கிடந்து வெடிக்கும்.

ரவி: அப்ப எப்படி உள்ளுக்குப் போறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்: ஒரு தடி எடு. நான் தடியாலை குப்பையை விலக்கி, விலக்கி உள்ளுக்குப் போறன், நீங்கள் பின்னாலை வாருங்கோ!

ரவி: ஏதும் வெடிச்சாலும் ஒரு ஆள்தான் சாகும்! (சிரிக்கிறான்)

மஞ்: ரவியனுக்கு இதுக்கும் சிரிப்பு.

ரவி: உள்ளது தானே அக்கா ஏன் எல்லாரும் சாவான்?

கந்: சரி வந்தாச்சு. முன் கதவு திறந்து கிடக்கு!

ரவி: இதென்ன வீட்டுக்கு லைற் பூட்டியிருக்கு! (சிரிக்கிறான்)

கந்: லைற் இல்லையாட ரவி, வீட்டுக்குக் கூரை இல்லை!

பாக்: முழுக் கூரையும் உடைஞ்சு போச்சு!

கந்: இந்த வீட்டிலை எப்பிடிக் குடி இருக்கிறது?

பாக்: (கவலையாக) சாவகச்சேரிலை ஒரு சின்ன வீட்டுக்கை ஐஞ்சு குடும்பம் கிடந்து அவிஞ்சுட்டு யாழ்ப்பாணம் வந்தா, எங்கடை வீடிருக்கு. ஆனா குடி இருக்க ஏலாது!

ரவி: மற்ற அறைக் கதவுகளும் திறந்து கிடக்கு.

மஞ்: தளபாடங்கள் எல்லாம் அப்பிடியே இருக்கு!

பாக்: தளபாடங்கள் கிடந்து என்னடி சுகம் மஞ்சுளா? குடியிருக்க வீடு இல்லையே!

கந்: இந்தக் கூரையைத்திருத்த கடைசி இரண்டு லட்சமாவது வேணும்!

மஞ்: ரண்டு லட்சத்துக்கு எங்கை போறது? இருந்த நகையையும் வித்துட்டம் சாவச்சேரிலை.

பாக்: நாங்கள் பக்கத்திலை ஒரு கொட்டிலைக் கட்டிக் கொண்டு, அதிலை இருப்பம்.

மஞ்: குப்பையைக் கூட்டி விடத் தும்புக் கட்டையும் இல்லை!

பாக்: கொட்டில் கட்டிக் குடியேறுறதெண்டா, இதை ஏன்ரி கூட்ட வெளிக்கிடுறாய்?

ரவி: அக்காவுக்குக் கூட்டிக் கூட்டிப் பழக்கம். கூட்டாமல் இருக்கேலாது. (சிரிக்கிறான்)

கந்: பொறுங்கோ பக்கத்திலை மணி அண்ணை வீட்டைப் பாப்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்: அந்த வீட்டை எங்களுக்கு ஏன்? இப்ப குடியேறுற வேலையைப் பாப்பம்!

கந்: பொறுக்கோ பக்கத்து வீட்டைப்பாத்துக் கொண்டு வாறன்!

ரவி: நாங்களும் வாறம் அப்பா.

(முழுக் குடும்பமும் பக்கத்து மணியம் வீட்டிற்குப் போகிறது)

கந்: மணி அண்ணை வீடு உடையேல்லை. அப்பிடியே இருக்கு!

பாக்: மணியண்ணையும் சிவலட்சுமியையும் காணேல்லை?

கந்: அவை கொழும்புக் கல்லா போனவை பாக்கியம்? அங்காலை கனடாவுக்கும் போனதாக கேள்வி.

பாக்: அல்லது ஜெர்மனிக்குப் போச்சினமோ இளையமகன் குகனிட்டை?

ரவி: உள்ளுக்குப் போய் பாப்பமா?

கந்: பொறடா ரவி. ஏதன் கிடக்கும். நான் தடியாலை குப்பையைத் தட்டிக் கொண்டு முன்னுக்குப் போறன்.

(எல்லோருக்கும் வீட்டுக்குள் போகிறார்கள்)

மஞ்: இந்த வீட்டுக் கதவும் திறந்து தான் கிடக்கு.

கந்: ஓடுகள் சிலது உடைஞ்சிருக்கு. கூரை அப்பிடியே இருக்கு.

ரவி: உடைஞ்ச துவாரங்களுக்காலை வெளிச்சம் கம்பி மாதிரி வருது!

மஞ்: பாருங்கோ எவ்வளவு தூசி எண்டு!

பாக்: இந்த வீட்டிலை குடியிருக்கலாம்.

ரவி: ஆற்றையன் வீட்டைப் பாத்து ஆசைப்படதை அம்மா!

பாக்: சும்மா சொல்லூறன்னரா ரவி.

கந்: இல்லை பாக்கியம், நாங்கள் இந்த வீட்டிலையே குடியேறுவம்.

பாக்: அவை வந்தா? சீ! ஆற்றையன் வீட்டிலை குடியேறவோ?......

கந் : வீடில்லையே!

கந்: அவை வராயினம். கனடாவுக்குப் போனவை உடனை திரும்புவினமே?

ரவி: அவை வரவே வராயினம்! (சிரிக்கிறான்)

கந்: மணியண்ணை சொந்தக்காரன், நண்பன், அவை ஒண்டும் சொல்லாயினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்: இருக்க வீடில்லை. ஆளில்லாத வீட்டிலை குடியேறினது குற்றமே? அம்மா?.

ரவி: குந்தி இருக்க இடமில்லை. அதுதான் குடியேறினானங்கள் எண்டு சொல்லுவம்! (சிரிக்கிறான்)

கந்: பாக்கியம் ஆர் வந்தா என்ன, நான் பதில் சொல்லுறன். குடியேறுவம்!

பாக்: வேறை வழிஇல்லை. சரி குடியேறுவம்!

மஞ்: முதல்லை வீட்டைக் கூட்ட வேணும். தும்புக்கட்டை கிடக்கோ எண்டு பாக்கிறன்.

கந்: வீட்டைக் கழுவ வேணும் மஞ்சுளா.

மஞ்: தும்புக்கட்டை கிடக்குது. முதல்லை கூட்டுவம். பிறகு கழுவுவம்.

ரவி: அம்மா எனக்குப் பசிக்குது. காலேலை சாவகச்சேரிலை சாப்பிட்டபடி!

பாக்: சரி சமைக்கிறன். கொண்டு வந்த அரிசி இருக்கு அடுப்படியைப் பாப்பம்.

மஞ்: சட்டி பானையள் எல்லாம் வைச்சபடி இருக்கு! அதிசயம் தான்!

கந்: எல்லா வீட்டிலும் தளபாடங்கள் இருந்தா, ஏன் ஆரன் களவெடுக்கப் போகினம்?

ரவி: களவெடுக்க ஆக்களும் இல்லை (சிரிக்கிறான்!)

பாக்: சமைக்கிறன்.

கந்: பாக்கியம் காலேலை சாப்பிட்டபடி. களை, தலைசுத்துது. முதல்லை ஒரு தேத்தண்ணிவை. குடிச்சிட்டு வேலை செய்வம்.

பாக்: சரி வைக்கிறன். வாளியும் கயிறும் கிடக்கு. தம்பி ரவி தண்ணி அள்ளியாடா!

ரவி: சட்டியையும் தா அம்மா. கழுவிப் போட்டு அள்ளியாறன்.

மஞ்: நான் கூட்டுறன்.

ரவி: சரி அம்மா தண்ணி கொண்டந்துட்டன் கிணத்துத் தண்ணி. முழுக்க மஞ்சளாக்கிடக்கு!

கந்: இறைக்க வேணும். இப்ப சுடவைச்சுப் பாவிப்பம்.

பாக்: சரி தேத்தண்ணி வைக்கிறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – ௨

### இடம் : யாழ்ப்பாணம் மணியம் வீடு

### காலம்: 1997ஆம் ஆண்டு

இந்தக் காட்சியில் வரும் கட்டங்களை வெவ்வேறு காட்சிகளாகவோ, நேர இடைவெளி விட்டு ஒரே காட்சியாகவோ ஒலி பரப்பலாம். நேர இடை வெளிவிட்டு ஒலி பரப்பினால், அது கால ஓட்டத்தையும் குறிக்கும்.

"அ"

கந்: ஓடுகள் மாத்தி கலர் பூசி, பூட்டுகளும் போட்டு விட்டாச்சு.

பாக்: பத்தையளையும் வெட்டி அழிச்சம்.

ரவி: அப்பா எங்கடை வளவுப் பத்தையளையும் வெட்ட வேணும்.இல்லாட்டாப் பாம்பு குடி கொண்டிடும்.

பாக்: கறையான் புத்தெடுத்துச் சுவர்களே விழுந்துடும்.

மஞ்: அப்பா இந்த வீட்டுக்கும் வெள்ளை அடிக்க வேணும்.

கந்: சரி பிள்ளை பத்தையளையும் வெட்டுவம். வெள்ளையும் அடிப்பம்.

"ஆ"

மஞ்: வீட்டுக்கு வெள்ளையும் அடிச்சாச்சு. இனி வயறிங் செய்ய வேணும்.

பாக்: செய்தாத்தானே லைற் எடுக்கலாம்.

ரவி: லைற் வந்தா படிக்க வசதி.

கந்: வீட்டிலை புழங்கவும் வசதி, செய்வம்.

இ

மஞ்: அப்பா லைற் வந்துட்டுது. இனிக் கிணத்துக்கு மோட்டார் பூட்ட வேணும்.

பாக்: சரி மோட்டர் பூட்டினா, தண்ணி எடுக்க வசதி.

கந்: சரி செய்வம்!

ரவி: இரவல் புடவேலை, இது நல்ல கொய்யகம் எண்டு. வேலை எல்லாம் நடக்குது! வீட்டுக்காரர் வந்தா? (சிரிக்கிறான்)

கந்: சிலவளிச்ச, காசுக்கணக்குகளைக் காட்டி வாங்கிக் கொண்டு, வீட்டை விடுவம்!

பாக்: அவை எங்கை வருகினம்? கனடா போனவை வருவினமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி – 5**

**இடம் : கனடா, சர்வேஸ்வரன் வீடு**

**காலம்: 2010 ஆம் ஆண்டு**

சுப்பிரமணியம்: தம்பி சர்வேஸ்வரன். நாங்கள் ஒருக்கா இலங்கையைப் பாத்துக் கொண்டு வரப்போறம்!

சர்: அப்பா! ஏன் இருந்தாப் போலை இலங்கைக்கு?

கந்: கனடாவுக்கு வந்து 15 வரியமல்லே? ஒருக்கா பிறந்த நாட்டைப் பாத்துக் கொண்டு வருவம்.

சர்: அங்கை சண்டையல்லா நடக்குது?

கந்: அங்கை இப்ப சமாதானம் வந்திருக்காம். போய் நாடு எப்பிடி இருக்கெண்டு பாப்பம்!

சர்: அப்பா நீங்கள் தனியவா போப்போறியள்?

சிவ: நானும் போறன், தம்பி. பிறந்த நாட்டையும் யாழ்ப்பாணத்தையும் பாக்க ஆசை ....................

சர்: வயது போன நேரத்திலை....

மணி: எனக்கு வயது 65 இது ஒரு பெரிய வயதா?

கந்: எங்களுக்கு அங்கை ஒண்டும் இல்லை!

சிவ: ஏன் வீடு வளவு இருக்கல்லே? இருந்தா அதுகளையும் வித்துக் கொண்டு வருவம்!

சர்: வீடு அழிஞ்சிருக்கும். வளவு ஒரு வேளை இருக்கும். அந்தக் காசு இங்கை வரவேண்டிய அவசியம் இல்லை. நான் உழைக்கிறன்!

மணி: அதுக்காக இல்லையடா சர்வேஸ். சும்மா நாட்டைப் பாக்க.

சர்: அப்ப கெதியாத் திரும்புங்கோ, ஒரு மாதத்திலை.

மணி: மூண்டு மாதங்களாவது நிக்க வேணும், இடங்களைப் பாத்து ஆக்களைச் சந்திச்சு.

சர்: உங்களைத் தெரிஞ்ச ஆக்களெல்லாம் இப்ப செத்திருப்பினம் அப்பா! (சிரிக்கிறான்)

மணி: இருக்கிற ஆக்களை சந்திப்பம். (சிரிக்கிறார்)

சர்: என்னத்தைப் பாக்கப் போறியள்? (சிரிக்கிறார்)

மணி: தம்பி இஞ்சை ரீவியைத்தானே திரும்பத்திரும்பப் பாக்கிறம்? அங்கை போய் நாடு முழுவதையும் பாப்பம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ: கோயில் குளங்கள், திரு விழாக்களைப் பாத்து.......

சர்: சரி சரி, வயது போன நேரத்திலை உங்கடை ஆசையை நிறைவேற்றி வைக்க வேண்டியது என்ரை கடமை!

**காட்சி – 4**

**இடம் : யாழ்ப்பாணம் மணியம் வீடு**

**காலம்: 2010ஆம் ஆண்டு**

கந்: பாக்கியம்! காசைச் சிலவழிச்சு ஆற்றையோ வீட்டைத் திருத்திட்டு இருக்கிறம்.

பாக்: குடியிருக்க ஒரு இடம் வேணுமே! பயந்து பயந்து, தயங்கி சிலவளிச்சனாங்கள். சிலவளிச்சதுக்கும் 15 வரியம் இருந்துட்டம்.

கந்: இப்பவும் பயந்து பயந்து தான் இருக்கிறம். மணியண்ணையும் சிவலட்சுமியும் எப்பவும் வரலாம்.

பாக்: நான் நினைக்கேல்லை அவை வருவினம் எண்டு. கனடாவுக்குப் போனவை வருவினமே, இப்ப 15வருயம் வராதவை?

கந்: இப்ப சண்டை முடிஞ்சு சமாதானம் வந்திருக்கு. உங்கை கனபேர் வந்து காணி பூமியை வித்துக் கொண்டு போயிருக்கினம்.

பாக்: பிள்ளை குட்டியும் வேலையாகியிருக்கும். அவேட்டைக் காசிருக்கும். இனி வயதும் போட்டுது!

கந்: எனக்கு இப்ப 65 வயது. மணியண்ணைக்கும் என்ரை வயது தான். படலேக்கை கார் ஒண்டு வந்து நிக்குது!.........

பாக்: ஆர் வாறது? பாருங்கோ!

கந்: (வியப்புடன்) மணி அண்ணையும் சிவ லச்சுமியும் தான் வருகினம்.

பாக்: (பயந்து) அவேன்ரை கதை பேச, அவையே வருகினம். கனகாலத்துக்குப் பிறகு!

மணி: பாக்கியம் தங்கச்சி! 15 வரியம். 1995ஆம் அண்டு இடம் பெயர்வோடையல்லோ போனனாங்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்: இருந்கோ, இருங்கோ, இப்பதான் வாறியளோ கனடாவிலை இருந்து?

சிவ: பாக்கியம் நாங்கள் கொழும்பிலை ரண்டு நாள் நிண்டுட்டு வாறம்.

பாக்: தண்ணி ஏதும் தரட்டோ?

சிவ: வேண்டாம் பாக்கியம். எல்லாம் குடிச்சிட்டுத்தான் வந்தனாங்கள்.

மணி: நாங்கள் கதை பேசுவம் கந்தையா! கன காலத்திற்குப் பிறகு.

பாக்: கனடாவிலை இருந்தாலும் ஆக்காள் நல்லா மெலிஞ்சு போனியள்! (சிரிக்கிறார்)

சிவ: வயதல்லே பாக்கியம்? நீங்களும் மெலிஞ்சுதானே போனியள்? ஏன் கஷ்டமே?

கந்: எங்களுக்கு ஒரு கஷ்டமும் இல்லை. எங்கடை வீடு வடிவா உடைஞ்சு போச்சு. அது தான் கஷ்டம்! அது தான் மணிஅண்ணை உங்கடை வீட்டிலை குடியேறினனாங்கள்.

பாக்: சிலவளிச்சுத்தான் இருக்கிறம் திருத்தி.

மஞ்: ஓடு போட்டு, வீட்டைத்தீருத்தி, வெள்ளை அடிச்சு, வயறிங் செய்து, மோட்டர் பூட்டி... லைட் பூட்டி...

சிவ: சொல்லாதை பிள்ளை. எல்லாம் பாக்கத் தெரியுது. இவ ஆர் பிள்ளை?

பாக்: எங்கடை மகள் மஞ்சளா!

சிவ: மஞ்சுளாவே? அப்ப சின்னப்பிள்ளை, இப்ப வளந்துட்டா!

கந்: அப்ப 15 வயது. இப்ப படிச்சுப் பட்டதாரியாகி ரீச்சர் ஆகிட்டா வயது முப்பது.

சிவ: காலம் நாட்டையும் மாற்றும், ஆக்களையும் மாற்றிப்போடும்.

கந் : தம்பி ரவி பி. ஏ. படிச்சுட்டு இருக்கிறான். இன்னும் உத்தியோகமாகேல்லை.

பாக்: சிவலட்சுமி அக்கா, நீங்கள் விக்கிறதெண்டா, நாங்கள் வீட்டை விடுறம்.

மஞ்: மாமி நாங்கள் சிலவழிச்ச காசு ரண்டு லட்சமாவது இருக்கும். அதைத்தந்தா, நாங்கள் எங்கடை வீட்டைத் திருத்துவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி: தருவம் பிள்ளை. கட்டாயம் தருவம்!

சிவ: பாக்கியம் நீங்கள் இந்த வீட்டிலை இருந்து கொண்டே உங்கடை வீட்டைத் திருத்தலாம்.

கந் : மணி அண்ணை எங்கடை வீட்டைத் திருத்த இன்னும் கன காசு வேணும். நாங்கள் ஓரளவு திருத்திக் கொண்டு போயிடுறம்.

மணி : இல்லை கந்தையா நீங்கள் இதிலை இருந்து கொண்டு வடிவாத் திருத்துங்கோ. நாங்கள் விக்க அவசரப்படேல்லை.

சில : நாங்கள் வீடு வளவு விக்கிவெண்டே வரேல்லை!

பாக் : பின்ன என்னதுக்கு அக்கா வந்தியள்?

சிவ : நாட்டுக்குச் சமாதானம் வந்திருக்கு. ஒருக்காப் பிறந்த நாட்டை, யாழ்ப்பாணத்தைப் பாத்துக் கொண்டு போவம் எண்டல்லோ வந்தனாங்கள்.

மணி : கந்தையா, வீடு இருக்குமெண்டே நாங்கள் எதிர் பாக்கேல்லை.

கந் : மணி அண்ணை நாங்கள் வந்து இருந்திராட்டா, உங்கடை வீடும் போயிருந்திருக்கும். ஓடு, மரம், கதவுநிலை எண்டு ஒவ்வொண்டாக் களவாடிக் கொண்டு போயிருப்பங்கள் எங்கடை ஆக்கள். உங்க கனவீடுகள் உப்பிடிப் போட்டுதுகள்! (சிரிக்கிறார்)

மணி : வீட்டைத்திருத்தியுமல்லோ விட்டிருக்கிறியள்? நன்றி நன்றி!

பாக் : நாங்கள் 15 வரியம் இருந்ததுக்கு வாடகை தாறம்.

சிவ : வேண்டாம் பாக்கியம், நீங்கள் வீட்டைப் பாதுகாத்துத் தந்ததே போதும். இது இப்ப பல லட்சங்கள் பெறும்!

மஞ்: மாமா! ஆக்கள் குடியிராட்டா, கறையான், பாம்பு, புத்தெடுத்து சுவர்கள் விழுந்திருக்கும். பத்தை வளந்து மூடியிருக்கும்.

மணி : நன்றி பிள்ளை நன்றி! நாங்கள் அதுக்கும் சேத்துக் காசு தாறம்.

கந் : மணியண்ணை நீங்கள் காசு தந்தா, நாங்கள் எங்கடை வீட்டைத் திருத்துவம்.

பாக் : நாட்டைப் பாத்துட்டியளா? எப்பிடி இருக்கு?

மணி : கொழும்பு மாறிப் போச்சு. மாடி வீடுகளும் கடையளும் அகலமான வீதியளும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ : யாழ்பாணம் அப்பிடியே இருக்கு!

மஞ் : போர் வடுக்கள் ஒண்டும் தெரியேல்லையா மாமி?

சிவ : ஒண்டும் தெரியேல்லை, பிள்ளை.

மஞ் : எல்லாம் திருத்தீட்டினம். திருத்தப்படாத இடங்களும் இருக்கு. போய்ப் பாக்க வேணும்.

மணி : நாங்கள் அங்கை போகேல்லை. இவ்வளவும் பாத்ததே போதும்!

பாக் : சிவலட்சுமி அக்கா, ஏன் பிள்ளையள் வரேல்லை.

சிவ : அதுகள் வேலைக்குப் போறதுகள். வர மனமில்லை. வேலைக்கும் ஒழுங்காப் போகவேணும்.

மணி : இனி அவைக்கு யாழ்ப்பாணம் வரவேணும் ஆக்களை இடங்களைப் பாக்க வேணும் எண்ட பற்றுப் பாசம், ஆசை இல்லை!

சிவ : இஞ்சை கொஞ்சக்காலம்தானே இருந்தவை?

மணி : நாங்கள் சும்மாதானே இருந்தனாங்கள். வீட்டுக்கை அடைஞ்சு கிடந்தனாங்கள். பொழுதும் போகாது. சும்மா உலாத்திக் கொண்டு போவம் எண்டு வந்தம்.

மஞ் : வாருங்கோ அப்பா எங்கடை வீட்டைப் பாத்துக் கொண்டு வருவம். இனி அதைத் திருத்தவும் வேணுமல்லா! (சிரிக்கிறாள்)

மணி : என்ன கந்தையா உங்கடை வீட்டையும் புழங்கூறியளா?

கந் : வளவைத் துப்பரவு செய்து வைச்சிருக்கிறம். 6 பரப்பு வளவல்லா?

மஞ் : மாமா, அதுக்கை தென்னை, மா, பிலா எல்லாம் நிக்குது. வரும்படியல்லா?

கந் : வீட்டை, இனித்தான் திருத்த வேணும்!

மணி : சரி கந்தையா, போய்ப் பாத்துக் கொண்டு வாருங்கோ!

கந் : நீங்கள் இருங்கோ அண்ணை. இப்ப வந்துடுவம்!

பாக் : நானும் சமைக்கத் துவங்கப் போறன்.

சிவ : எங்களுக்கும் சேத்துச் சமை பாக்கியம்.

பாக் : ஓம், ஓம். (சிரிக்கிறாள்)

சிவ : கனகாலத்திப் பிறகு இண்டைக்குத்தான் யாழ்ப்பாணத்துச் சாப்பாடு சாப்பிடப் போறம். (எல்லோரும் சிரிக்கிறார்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - ௫

**இடம் : யாழ்ப்பாணம் மணியம் வீடு**

**காலம்: *சில* நாட்களின் பின்பு**

மணி : சிவலட்சுமி! நாங்கள் இந்த வீடுவளவை உடனடியா விக்கவும் கூடாது!

சிவ : ஏன்?

மணி : வாங்கூறவன் என்ன செய்வனோ தெரியாது! உடனடியா எழும்புங்கோ எண்டு நிண்டாலும் நிப்பங்கள்.

சிவ : சரிதான் அப்பிடி நெருக்கினா, கந்தையா அண்ணை குடும்பம் எங்கை போறது?

மணி : அவை தங்கடை வீட்டைத் திருத்திச் சரி எண்டு சொன்ன பிறகுதான் விக்க வேணும்

சிவ : எங்கடை வீடுவளவைக் காப்பாற்றித் தந்ததுகளுக்கு, நாங்கள் இந்த உதவியாவது செய்ய வேணும்.

மணி : கொஞ்ச நாளைக்கு இஞ்சை இருந்து, வித்துட்டுப் போவம்.

சிவ : நீங்கள் விளம்பரம் போடேல்லையா?

மணி : போடேல்லை சிவலட்சுமி. போட்டா பாஞ்சு கொண்டு வந்துடுவங்கள் வாங்குறவங்கள்!

சிவ : ஓ, பாக்கியம் சரி எண்டு சொல்லட்டும்!

மணி : ஒரு காரியம் செய்தா என்ன சிவலட்சுமி?

சிவ : என்ன காரியம்?

மணி : விளம்பரம் போடாமமல், வீடு வளவை கந்தையா குடும்பத்துக்கே வித்துடுவமா?

சிவ : அவேட்டைக் காசிருக்கோ என்னவோ?

மணி : மலிவாக் குடுத்தா வாங்குவினம். அவை காப்பாற்றித் தந்த வீடுதானே?

சிவ : நாங்கள் இதை விக்க வெண்டோ வந்தனாங்கள்?

மணி : அல்லது கந்தையா தங்கடை வளவை வித்துட்டு, இதை வாங்கட்டன்.

சிவ : அதுக்கு அவை சம்மதிக்கினமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி : ரண்டும் ரவுண் வீடு வளவுதானே? தங்கடை வீட்டை உரிய விலைக்கு வித்துட்டு, இதை மலிவா வாங்கட்டன். எங்களுக்கு வாறது மிச்சம்! அவைக்கும் லாபம். எங்களுக்கேன் காசை?

சிவ : அதில்லை, குடி இருந்த வீடு வளவை விக்கச் சம்மதிக்குதுகளோ என்னவோ?

மணி : கேட்டுப் பாப்பம்!

சிவ : சரி நான் சம்மதம்.

**காட்சி – ௯**

**இடம் : யாழ்ப்பாணம் மணியம் வீடு**

**காலம்: அடுத்த நாள்**

மணி : கந்தையா!

கந் : என்ன மணி அண்ணை?

மணி : நாங்கள் இந்த வீடுவளவை உங்களுக்கே விக்கத் தீர்மானிச்சுட்டம்.

கந் : ஏன் எங்களுக்கு?

மணி : நீங்கள் தானே வீடு வளவைக் காப்பாற்றித் தந்தது? இல்லாட்டா எல்லாம் அழிஞ்சு போயிருக்கும். அதை உங்களுக்கே தாறது தான் பொருத்தமும் நியாயமும்! (சிரிக்கிறார்)

பாக் : எங்களிட்டை உதை வாங்கக்கூடிய காசில்லையே அண்ணை!

சிவ : இருக்கிற காசைத் தந்து வாங்குங்கோ பாக்கியம்.

பாக் : இருந்த காசெல்லாத்தையும் இந்த வீட்டிலை சிலவளிச்சுட்டம். வேறை காசில்லை!

மணி : அந்தக் காசைக் கழிச்சுட்டு மேலதிகமாகவும் கொஞ்சக் காசைத் தந்து வாங்குங்கோ!

கந் : மேலதிகமாக ஒரு சதம்கூட இல்லை மணி அண்ணை!

மணி : அப்ப அந்தக் காசுக்கே வாங்குங்கோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந் : மணி அண்ணை இந்த வீடு வளவின்ரை பெறுமதி என்ன தெரியுமா? நிலம் மட்டும் பரப்பு 25 லட்சம்!. சண்டேக்கை விலை இல்லை. சண்டை முடிஞ்ச பிறகு நிலத்தின் விலை றொக்கெட் வேகத்திலை ஏறிக் கொண்டு போகுது! அதை நாங்கள் அமத்தக் கூடாது!

மணி : நாங்கள் இந்த நிலத்தை விக்கவெண்டே வரேல்லை.

சிவ : இது இருக்குமெண்டே எங்களுக்குத் தெரியாது.

மணி : வாற காசு எங்களுக்கு மிச்சம்! (சிரிக்கிறார்)

பாக் : என்னவாக இருந்தாலென்ன நிலத்தின்ரை பெறுமதியை நாங்கள் தரவேணும்!

மாணி: அப்பிடியெண்டா கந்தையா, உங்கடை வீடுவளவை வித்துட்டு, இதை வாங்குங்கோ! அதுகும் ரவுண் நிலம்தானே? விக்கும்!

பாக் : அது 6 பரப்பு இது 4 பரப்பு....

சிவ : பாக்கியம் ரண்டு பரப்பை வைச்சுக் கொண்டு வில்லுங்கோ!

மாணி : முழுக்காசும் தர வேண்டாம். மிச்சக் காசையும் நீங்கள் வைச்சிருங்கோ!

பாக் : (யோசித்து) குடியிருந்த வீட்டை விக்கிறதா?

மாணி: ஒரு அவசரமும் இல்லை. யோசிச்சுச் சொல்லுங்கோ!

கந் : பிள்ளையள் தானே இருக்கப் போறது? அதுகளோடும் யோசிக்க வேணும்!

மாணி : நாங்கள் எங்கடை பிள்ளையளோடை யோசிக்கவே தேவைஇல்லை. அதுகளுக்கு இது பற்றிக் கவலை இல்லை! (சிரிக்கிறார்)

சிவ : அதாலை தானே அவை வரேல்லை! (சிரிக்கிறார்)

மாணி : நாங்கள் கொண்டு போய்க்குடுக்கிறதை அவை சந்தோசமாய் வாங்குவினம்! நீங்கள் நல்லா யோசிச்சுச் சொல்லுங்கோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி – 7**

**இடம் : கந்தையா வீடு**

**காலம்: அடுத்த நாள்**

கந் : பாக்கியம், மணியண்ணையும் சிவலட்சுமியும் எங்களை அந்த வீடு வளவை வாங்கட்டாம்!

பாக் : ஏன் அப்பிடி சொல்லுகினம்?

கந் : நாங்கள் பாதுகாத்துத் தந்தபடியால் எங்களுக்குத்தான் விக்க வேணுமாம்?

பாக் : நீங்க சொல்லேல்லையா, எங்களிட்டைக் காசில்லை எண்டு.

கந் : சொன்னன். அவை இந்த வீடு வளவை வித்துட்டு அதை வாங்கட்டாம்!

பாக் : அதெப்பிடி?

கந் : அங்கை அவைக்கு முன்னாலை எப்பிடிப் பேசித் தீர்மானிக்கிறது எண்டுதான், எல்லாரையும் எங்க வளவுக்கு வரச் சொன்னனான்.

பாக் : குடியிருந்த வீடு வளவை விக்க நான் சம்மதம் இல்லை. அதெவ்வளவு கதையள் சொல்லும்?

மஞ் : எங்கடை பற்றுப் பாசங்கள் உணர்ச்சியளோடை கலந்த வீடு!

பாக் : அப்ப 96லை வந்து சேர்ந்த பொழுதே எனக்கு எங்கடை வீட்டிலை இருக்கத்தான் விருப்பம், என்ன செய்யுறது கூரை இல்லாத வீட்டிலை எப்பிடி இருக்கிறது எண்டு போனனான்!

மஞ் : நான் இருந்து படிச்ச வீடு!

ரவி : நான் சினேகிதரோடை சேர்ந்து விளையாடின வளவு!

மஞ் : ஏன்ரா, ரவி நீ படிக்கேல்லையா?

ரவி : படிச்சன். படிச்சன். அதைவிட எனக்கு விளையாடினதுகள் தானக்கா நினைவிலை நிக்குது! (சிரிக்கிறான்)

பாக் : எல்லாருக்கும் இந்த வீட்டிலை இருந்து தானே சமைச்சுப் போட்டடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந் : உங்களையெல்லாம் ஆளாக்கினன். பாக்கியம் ஒண்டை மறந்து போனாய். நானும் நீயுமாகக் கட்டின வீடு.

பாக் : எவ்வளவு பாடுபட்டுக் கட்டினம். அதிலை இருந்து வாழ ஆசைப்பட்டுக் கட்டினம்.

கந் : அப்பிடியே வாழ்ந்தும் விட்டம்.

பாக் : நீங்கள் அவைக்குச் சொல்லிவிடுங்கோ நாங்கள் வாங்கேல்லை எண்டு.

கந் : இனி அந்த வளவே பரப்பு 25 லட்சம் போகும். அதை நங்கள் ஏன் கெடுப்பான்?

ரவி : அக்காவுக்கு உத்தியோகம் வந்துட்டு. எனக்கும் வரும். எங்களுக்கேன் ஆற்றையன் காசை?

மஞ் : உங்களுக்கு ஏலாதெண்டா, நாங்களும் வாறம். அப்பா சொல்ல!

கந் : இல்லைப்பிள்ளை மஞ்சுளா. நானே சொல்லுறன்!

கந் : தூற காசைத் தாட்டாம் மணி அண்ணை!

பாக் : அந்தப்பிடி எங்களுக்கும் ஒரு மனச்சாட்சி வேணும்!

மஞ் : ஆரன் குறை சொல்லுவினம்! அவேன்ரை தூரத்துச் சொந்தக்காறர் சினேகிதர் ஆரும் வாங்க ஆசைப்படுவினம். நாங்கள் ஏன் அவையைக் கெடுப்பான்?

ரவி : அக்கா மற்றவைக்கு முன்னம் எங்களுக்கேன் அவேன்ரை பொருளை?

கந் : சரி சரி நான் சொல்லிவிடுறன்.

**காட்சி - உ**

**இடம் : மணியம் வீடு**

**காலம்: அடுத்த நாள்**

கந் : மணி அண்ணை நாங்கள் எங்கடை வீட்டை விக்கவும் விரும்பேல்லை. இதை வாங்கவும் விரும்பேல்லை! (சிரிக்கிறார்)

மணி : (வியப்புடன்) ஏன்? ஏன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக் : அது நாங்கள் கட்டி இருந்து வாழ்ந்த வீடு. அதை நாங்கள் விக்க விரும்பேல்லை!

மஞ் : நாங்கள் இருந்து படிச்ச இடம்.

ரவி : நாங்கள் விளையாடின வளவு.

மஞ் : எங்கடை உணர்வுகளோடை அது கலந்திருக்கு மாமா! மாமி!

கந் : மணி அண்ணை நல்ல விலை போகும். நீங்கள் வித்துக் காசாக்குங்கோ!

மஞ் : நாங்கள் சிலவளிச்ச காசைத் தந்தா, நாங்கள் அந்த வீட்டைத் திருத்திடுவம்!

சிவ : தாறம் பிள்ளை, தாறம். எங்கடை வீட்டைப் பாதுகாத்துத் தந்ததுக்கு வாடகையைக் கழிச்சு விட்டுட்டு, நீங்கள் சிலவழிச்ச காசு முழுக்கத் தாறம்!

மணி : நாங்கள் வீடுவளவை விக்கிறம்.

சிவ : பாக்கியம், நீங்கள் வீட்டைத் திருத்திச் சரி எண்டு சொன்ன பிறகுதான் விப்பம்!

**காட்சி – ௭**

**இடம் : கந்தையா வீடு**

**காலம்: மூன்று மாதங்களின் பின்**

ரவி : எங்கடை வீட்டைப் பழையபடி கட்டிட்டம்.

மஞ் : முந்தி இருந்ததையும்விடத் திறமாக கட்டிட்டம். வீட்டுக்கு வெள்ளை அடிச்சு கதவு யன்னல்களுக்கு வானிஸ் போசி!

ரவி : எல்லாம் வெய்யிலுக்கு மினுங்குது அக்கா!

கந் : மணி அண்ணை செலவழிச்ச காசைத் தந்ததாலை-யல்லோ?

பாக்ட : நல்ல சனம். வாட்கைகூடக் கேக்கேல்லை. கேட்டிருந்தா.....?

கந் : குடுத்திருக்கத்தானே வேணும் பாக்கியம்? 15 வரியம் இருந்தனாங்களல்லே? எங்கடை வளவை வித்தாவது குடுத்திருக்க வேணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ் : நல்ல சனம். மூண்டு மாதம் தந்திருக்கே வீடு திருத்த.

பாக் : நாங்கள் இனி மணி அண்ணைக்கும் சிவலட்சுமிக்கும் சொல்லுவம் வீட்டை விடுறம் எண்டு.

கந் : ஓ சொல்லுவம். அவை வித்துக் கொண்டு போகட்டும்!

**காட்சி - 10**
**இடம் : மணியம் வீடு**
**காலம்: அடுத்த நாள்**

சிவ : பாக்கியமவை வீடு திருத்தி முடிச்சுட்டினம். போய்ப் பாத்தனான். அடுத்த நாளுக்கு அவை வீடு மாறீடுவினம்!

மணி : நாங்கள் வீட்டை வித்துக் கொண்டு போகலாம்.

சிவ : ஓம். எனக்கு வித்துக் கொண்டு போறதெண்டு நினைக்க கவலையாய் இருக்கு!

மணி : ஏன் சிவலட்சுமி.

சிவ : இஞ்சை மூண்டு மாதங்கள் இருந்து எல்லாரோடும் பழகீட்டமே!

மணி : சண்டையும் இல்லை. பயமில்லாமல் எங்கும் திரிஞ்சு எல்லாரோடும் பழகினம்.

சிவ : நாட்டிலும் சமாதானம். நாங்களும் சுதந்திரமாப் பழகினம்.

மணி : எங்கடை வயதுக்காறார் குறைவு எண்டாலும், எல்லாரோடும் பழகினம்.

சிவ : நானும் கோயில் குளத்துக்குப் போற வேளை, எல்லாப் பெண்டுகளோடும் பழகீட்டன். இதுகள் எல்லாத்தையும் விட்டுப் போறதெண்டா....?

மணி : காலாற ஊர் முழுக்க நடந்தம்.

சிவ : பக்கத்து ஊர்களுக்கும் போனம்.

மணி : இனி அங்கை போய், போத்துக் கட்டிக் கொண்டு அறேக்கை அடைஞ்சு இடக்க வேணும்!

சிவ : T.V யளைப் பாக்கலாம். அல்லது ஆளை ஆள் தான் பாத்துக் கொண்டு இருக்க வேணும்! அதாலைதான் கனபேர் பிள்ளையளிட்டைப் போகாமல் இஞ்சையே இருக்கினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி : சிவலட்சுமி! நாங்களும் இருந்துடுவமா?

சிவ : எப்பவோ ஒரு நாள் போகத்தான் வேணும்?

மணி : இருக்கக்கூடிய வரையும் இருப்பம்.

சிவ : ஓராளுக்காவது சுகவீனம் வந்தாப் போக்கத்தான் வேணும். இஞ்சை எங்களுக்கு ஒருத்தரும் இல்லை!

மணி : அதுவரையும் சுதந்திரமாக சந்தோஷமாக இருப்பம்.

சிவ : பிள்ளையள் கவலைப்படாதே? அழைக்காதுகளே?

மணி : நாங்கள் வந்ததுக்கே அவை சம்மதம் இல்லை. கொஞ்ச நாட்கள் இருந்திட்டு வாறம் எண்டு எழுதுவம்.

சிவ : சரி சந்தோசம், பாக்கியத்துக்கும் கந்தையாவுக்கும் சொல்லுவம்.

(கந்தையா, பாக்கியம் மஞ்சுளா ரவி நால்வரும் வருகின்றனர்.)

கந் : மணிஅண்ணை நாங்கள் வீட்டைத்திருத்தி முடிச்சுட்டம்.

ரவீ : முன்னையையும்விட அழகாய் இருக்கு வீடு!

பாக் : எல்லாம் நீங்கள் தந்த காசிலை! அதுக்கு நன்றி!

சிவ : பாக்கியம், நீங்கள் சிலவழிச்ச காசைத் தரத்தானே வேணும்?

பாக் : வாடகைக்கூட வாங்கேல்லை. 15 வரியத்துக்கு!

மணி : நீங்கள் வீட்டையும் வளவையும் பாதுகாத்துக் தந்திருக்கிறியளே! எவ்வளவு பெறுமதி? அதுக்கு நாங்களல்லோ நன்றி சொல்ல வேணும்.

கந் : கேட்டிருந்தா வித்தெண்டாலும் தந்திருப்பம்!

மஞ் : எங்க வீட்டை வந்து பாருங்கோ மாமி!

சிவ : பாத்தனான், பாத்தனான்....

ரவி : இன்னும் ஒருக்கா வந்து பாருங்கோ!

கந் : மணி அண்ணை நாங்கள் அடுத்த நாளுக்கு வீடு குடிபூருறம்! நீங்கள் இனி வீடுவளவை வித்துக் கொண்டு போகலாம்.

மணி : கந்தையா, நாங்கள் விக்கவும்மில்லை, போகவும்மில்லை! (சிரிக்கிறார்)

பாக் : (வியப்புடன்) ஏன் அப்பிடி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ : 3 மாதங்கள் இஞ்சை இருந்து பழகினது எங்களுக்கு ஊரையும் பிடிச்சுப் போச்சு, ஆக்களையும் பிடிச்சுப் போச்சு! எங்கடை ஊர்தானே? விட்டுட்டுப் போக மனமில்லை! (சிரிக்கிறாள்)

மணி : அங்கை அறேக்கை அடைஞ்சு கிடக்க வேணும். இஞ்சை சண்டையும் இல்லை. பயமில்லாமல் சுதந்திரமாய் உலாவினம். எல்லாரோடும் கொண்டாடினம்!

மஞ்: எண்டாலும் மாமா, வயது போன நேரத்திலை.......?

சிவ : பிள்ளை மஞ்சுளா! இருக்கக்கூடுமளவும் இருப்பம்! பாக்காத இடங்களையும் பாப்பம்!

கந் : உப்பிடிக் கன தம்பதியர் இருக்கினம். பிள்ளையளை, வெளிநாட்டிலை விட்டுட்டு!

மணி : சுதந்திரம்! சுதந்திரம்! (சிரிக்கிறார்)

பாக் : அப்ப பிள்ளையள் ஒண்டும் சொல்லாதோ?

சிவ : நாங்கள் இலங்கைக்கு வந்ததே அவைக்கு விருப்பமில்லை. கொஞ்சக் காலம் இருந்துட்டு வாறம் எண்டு எழுதினா, பேசாமல் இருப்பினம்.

மணி : அவை காசையும் எதிர்பாக்கேல்லை. கொண்டு போற காசை சந்தோசமாய் ஏற்பினம்!

**நாடகம் சொல்லும் கருத்து:**

ஒருவர் செய்யும் உதவிக்கு நன்றியாய் இருந்தால் எங்களுக்கு எல்லாச் செல்வமும் வரும்!

இலங்கை வானொலி 10.09.2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு நவீன நாடகம்

# ஒரு பாடசாலை முன்னேறுகிறது

### பாத்திரங்கள்

1. அரசரத்தினம் – மகாவித்தியாலயத்தின் அதிபர்
2. தனபாலன் – ஒரு ஆசிரியர்
3. கருணாகரன் – ஒரு ஆசிரியர்
4. விஜயா – ஒரு ஆசிரியை
5. சரோஜினி – ஒரு ஆசிரியை

**(கதை நடக்கும் காலம் சில மாதங்கள்)**

**காட்சி – 1**

**இடம் : கிளிநொச்சியிலுள்ள நீள்குளம் பாடசாலை**

**காலம் : 2010 ஆம் ஆண்டு**

தனபாலன் : அரசரத்தினம்! நீ அதிபராய் இருக்கலாம் எண்டு ஓடியந்துட்டாய் போலை? (சிரிக்கிறார்)

அரசரத்தினம் : தனபாலன்! நான் யாழ்ப்பாணத்திலை உள்ள ஒரு பாடசாலேலை சாதாரண வாத்தியாராத்தான் இருந்தனான். இஞ்சை வாறதை விட அது எவ்வளவோ வசதி! கட்டாயம் வரவேணும் எண்டு நிர்ப்பந்தம் செய்ததிலை வந்தனான்.

தன : நானும் வவுனியாவிலை ஒரு பாடசாலேலை சாதாரண ஆசிரியராகத்தான் இருந்தனான். நிர்ப்பந்திச்ச படியால்தான் கிளிநொச்சிக்கு வந்தனான்.

அர : யாழ்ப்பாணத்திலை இருந்து பஸ்ஸிலை வந்து, A.9 வீதிலை இருந்து ஐஞ்சு மைல் உள்ளுக்கு நடக்க வேணும்!

தன : எனக்கும் அப்பிடித்தான் அரசர். வந்து சேரச் செண்டு போகுது! மன்னிச்சுக்கொள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர : இதிலை என்ன மன்னிப்பு தனபாலன்? நாங்கள் இப்பிடியாவது வாறமே. முந்தி 600 பிள்ளையளும் 15 வாத்திமாரும் இருந்தவை. மற்றவை எட்டியும் பாக்கேல்லையே!

தன : வருவினம், வருவினம்! தயங்குகினம். அரசாங்கம் கட்டாயம் போக வேணும் எண்டு சொல்லீட்டுது!

அரச : வருவினம், வராட்டாச் சம்பளமில்லை! செத்திருப்பினமோ போரிலை?

தன : அதிகமானவை எல்லாம் தப்பி ஓடீட்டினம்.

அரச: செத்தவை போக மிச்ச வாத்திமார் வருவினம்.

தன : காயப்பட்டவை, கர்ப்பிணிகள், குழந்தைப் பிள்ளைத் தாய்மாரைத் தவிர, எல்லாரையும் அரசாங்கம் அனுப்பும்.

அரச: முந்தி 15 பேரும் கிளிநொச்சீலைதான் இருந்தவை. பத்துப்பேர் கிளிநொச்சி. மற்றவை வீடுகளிலை வாடகைக்கு இருந்தவை.

தன : இப்ப நிரந்தரமாக குடியேறினவைக்குத்தான் அரசாங்கம் வீடுகள் குடுத்திருக்கு. வாடகைக்கு வீடே இல்லை!

அரச: வசதி ஏற்படும் வரையும் வந்து போகட்டும். முதல்லை பள்ளிக்கூடத்தை நடக்கச் செய்ய வேணும்!

தன : பள்ளிக்கூடத்துக்குப் பிள்ளையள் இல்லை. 600 பிள்ளையள் படிச்ச இடத்திலை இப்ப அறுபது பிள்ளையள்தான் வருது!

அரச : தனபாலன் மாஸ்ரர் அறுபது பிள்ளையளைத்தானே இந்தக் கட்டிடத்திலை அடக்கலாம்? (சிரிக்கிறார்)

தன : அரசு! இருக்கவே இருக்கு மரநிழல்கள்!

அரச: தளபாடங்களும் காணாது. வெறும் நிலம்தான்!

தன : பிள்ளையள் கூடுதலா வந்தா எழுதிக்கேப்பம். அரசாங்கம் தரத்தானே வேணும்?

அரச : தரும், தரும். முதல் பிள்ளையள் வரட்டும்! பிள்ளையளுக்கு என்ன நடந்தது? எல்லாம் செத்துக் கெட்டுப் போச்சுதுகளோ?

தன : சீச்சீ! எல்லாம் பல வழியாலும் ஓடித் தப்பீட்டுதுகள். கடைசீலை கொஞ்சம் தான் கப்பல்லை ஏறி வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதி முகாமுக்கு வந்ததுகள். எல்லாரையும் கொண்டந்து குடியேற்றியாச்சு. வருங்கள்!

அர : சிலருக்குப் படிப்பிலை அக்கறை இல்லாமல் இருக்கலாம்.

தன : சிலருக்கு வீடுகளிலை வேலை இருக்கும். புதுக்கக் குடியேறினதுகளல்லோ?

அரச : கமப் பிராக்கு, தோட்டப் பிராக்கு! சிலருக்கு இஞ்சை பாடசாலை துவங்கினது தெரியாது!

தன : அரசு! நான்கூட அரசாங்கம் இவ்வளவு கெதியா பாடசாலையை துவங்கும் எண்டு எதிர்பாக் கேல்லை!

அரச : அப்பிடியே வவுனியாவிலை குஷியாகப் படிப்பிச்சுக் கொண்டிருக்கலாம் எண்டு நினைச்சுக் கொண்டிருந் திருப்பாய்! (சிரித்து) சனத்தைக் குடியேத்தினா, பள்ளிக்கூடங்களையும் துவங்கத் தானே வேணும்?

தன : பிள்ளையள் சிலது படிப்பையே மறந்திருக்கும். படியாமல் இருந்ததுகளல்லே?

(இருவரும் சிரிக்கிறார்கள்)

அரச : ஓம், ஓம் தனபால் மாஸ்ரர்! நாங்கள் கற்பித்தலைத் துவக்க பிள்ளையளும் வரும்!

தன : மெள்ள மெள்ள வருங்கள்!

**காட்சி – 2**

**இடம் : கிளிநொச்சியிலுள்ள நீள்குளம் பாடசாலை.**

**காலம் : 2010 ஆம் ஆண்டு**

அரச : தனபால் மாஸ்ரர், என்னையும் உன்னையும் தவிர ஒரு வாத்திமாரும் திரும்பேல்லை!

தன : ஆ இஞ்சை வாறார் கருணாகரன்! முந்தி இஞ்சை இருந்தவர்.

(கருணாகரன் ஆசிரியர் வருகிறார்)

அரச: வா, வா கருணாகரன்! இன்னும் ஒரு வாத்தியார் வந்தாச்சு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரு : இன்னும் நாலைஞ்சு பேர் வர இருக்கினம், அரசரத்தினம் சேர். சந்திச்சுக் கதைச்சனான். வருகினம், வருவினம்!

தன : தட்டிக் கழிக்கலாமோ எண்டு பாக்கினம்! (சிரிக்கிறார்)

கரு: தனபால் மாஸ்ரர், வந்தே ஆக வேணும்!

தன : நான் யாழ்ப்பாணத்திலை இருந்து வாறன்?

அரச : அது சரி, எப்ப யாழ்ப்பாணம் போனனீர்?

கரு : நான் சண்டை துவங்க முன்னமே போட்டன். வாடகைக்கு இருந்தனான். சைக்கிள் வைச்சிருந்தனான். அதை விட்டுட்டு பஸ்ஸிலை போனன். சண்டை துவங்கிச்சுது. நிண்டுட்டன்.

தன : அப்ப இவ்வளவு காலமும் வேலை இல்லை?

கரு : நான் அங்கை படிப்பிச்சனான், ஒரு நல்ல பள்ளிக்கூடத்திலை.

அரச: நானும் சண்டை துவங்க முன்னமே ஓடீட்டன்!

தன : நான் தான் அகப்பட்டுப் போனன்!

கரு : என்ன நடந்தது தனபால்?

தன : அதை ஏன் பேசுவான்? காட்டுக்காலை நடந்து போய், கப்பல்லை ஏறி.....

கரு : ஏன் நேரத்தோடை தப்பப் பாக்கேல்லை?

தன : குடும்பமல்லா கருணாகரன். மனைவி பிள்ளையள், வீடு, பொருள் பண்டம்!

அரச : கடைசியாக எல்லாத்தையும் விட்டுட்டுத்தான் ஓடினது?

தன : வேறை என்ன செய்யிறது? காட்டுக்காலை நடந்து போய், முல்லைத்தீவுக்குப் போய், கப்பல்லை புல்மோட்டைக்குப் போய், பிறகு வவுனியா வந்தனான்.

அரச : என்ரை குடும்பம் யாழ்ப்பாணத்திலை. அதாலை இழப்புக்கள் குறைவு!

தன : வவுனியாவிலை எங்கை தங்கின்னி? முதல் அகதி முகாமிலை. பிறகு ஆளை அடையாளம் காட்டின பிறகு, ஒரு ஸ்கூலுக்கு அனுப்பிசசினம். முகாமிலை இருந்துதான்!

கரு : இப்பவும் முகாமிலையா?

தன : இப்ப ஒரு வீட்டிலை வாடகைக்கு இருந்து வாறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரு : தனபாலன்! எனக்கு குடும்பம் இல்லை. தனிக்கட்டை. ஆனா இஞ்சை இருக்கேலாது!

அரச : இஞ்சை நிரந்தரமாகக் குடியேறினவைக்குத்தான் வீடு குடுக்கிறாங்கள். வாடகை வீடு எண்ட பேச்சுக்கே இடமில்லை!

கரு : யாழ்ப்பாணத்திலை இருந்துதான் சேர் வரவேணும். மன்னிச்சுக் கொள்ளுங்கோ!

அரச : கருணாகரன்! நானே யாழ்ப்பாணத்திலை இருந்ததுதானே வாறன்!

தன : நான் வவுனியாவிலை இருந்து வாறன். இனி வாறவையும் அப்பிடி ஆக்களாத்தான் வருவினம்.

அரச: வீடுள்ளவையும் வரக்கூடும்.

கரு : அது சரிசேர். நீங்கள் என்ன, செய்யிறியள்?

அரச : தெரியேல்லையா? இருக்கிறம். (சிரிக்கிறார்)

கரு : படிப்பிக்கிறதில்லையா?

தன : கருணாகரன், கொஞ்சப் பிள்ளையள். அதுக்கு ஏத்த அளவாக் கொஞ்சமாப் படிப்பிக்கிறம்!

கரு : கனக்கப் படிப்பிக்க வேணும் தனபால் மாஸ்ரர்.அப்பதான் மிச்சப் பிள்ளையளும் வரும்.

அரச : இப்ப கிட்டத்தட்ட 100 பிள்ளையள் வருது. அவ்வளவையும் தான் இந்த மண்டபத்திலை அடக்கலாம்! அதிகம் வந்தா, இருக்க இடமில்லை! (சிரிக்கிறார்)

கரு : ஏன் சேர் இல்லை? மர நிழல்கள் இருக்கே சுற்றிவர?

தன : இளந்தாரி கடுமையாப் படிப்பிக்கிறம் எண்டு நிக்கிறீர். படிப்பியும்!

கரு : எல்லாருமாச் சேந்து தான் படிப்பிக்க வேணும். அப்பதான் படிப்பித்தல் நடக்கும்! இது பின்தங்கிய இடம். கல்வியே இல்லாமல் இருந்த இடம். இஞ்சைதான் கடுமையாப் படிப்பிக்கவேணும்!

அரச : சரி சேர் படிப்பிப்பம்!

கரு : முதல் இந்த பாடசாலை வளவைத் துப்பரவு செய்ய வேணும்! எல்லாம் பத்தையும் கல்லும் முள்ளுமாக கிடக்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச : பெரும் பத்தை! உடைதை எப்பிடி அகற்றுறது?

கரு : அதிபர் சேர். கூலி ஆள் கிடையாது! அவனவனே தன்தன் வீடுவளவைத் திருத்துறான். நாங்கள் தான் பாடசாலை வளவைத் துப்பரவு செய்யவேணும்!

தன : கண்ணிவெடி அகற்றினது போலை, இதையும் அரசாங்கம் செய்து தரட்டன்.

கரு : அரசாங்கம் எல்லாத்தையும் செய்து தராது. அதோடை அதுக்கு காவல் இருக்கவேணும். நாங்கள் பாடசாலை நடத்த வேணும்!

அரச: பாம்பு, பூச்சி, மிருகங்கள் இருக்கும்.

கரு : மாணவர்களைக் கொண்டு செய்விப்பம்!

தன : கண்ணிவெடியள் ஏதும் கிடந்தா?

கரு : அதெல்லாம் அகற்றித்தானே தந்தது அரசாங்கம். மாணவர்கள் ஆடி ஓடி விளையாடவும் இடமில்லை!

அரச : பிள்ளையள் பயப்பிடுங்கள் இறங்க!

கரு : நாங்களும் சேந்து செய்தா, பிள்ளையளும் பயமில்லாமல் வருங்கள்! வாறியளா?

அரச: கருணாகரன் இளந்தாரி. உசாராய் நிக்கிறார். சரி வாறம்.

கரு : நீங்கள் உத்தரவு தாருங்கோ, நான் மாணவர்களைக் கொண்டு செய்விக்கிறன்!

அர : சரி உம்மடை உற்சாகத்தை ஏன் கெடுப்பான்? செய்வியும்!

கரு : வாருங்கோ பிள்ளையள்! பள்ளிக்கூடத்தைச் சுத்திப் பத்தையளும் கல்லும் முள்ளுமாக் கிடக்கு. இதுகளைத் துப்பரவு செய்யவேணும்!

(மாணவர்கள் வருகிறார்கள்)

ஒருகுரல் : கண்ணிவெடிகள் ஷெல்லுகள் இருக்கும் சேர்!

கரு : எல்லாம் அகற்றியாச்சு! அகற்றித்தான் அரசாங்கம் படசாலையைத் திறந்தது.

குரல் : இன்னும் இருக்கும் சேர்!

தன : கிடந்தா போய் ஆமிக்குச் சொல்லுவம். வந்து எடுப்பங்கள்!

கரு : உங்கடை பள்ளிக்கூடம்தானே? நீங்கள் தானே இதைத் துப்பரவு செய்யவேணும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச: செய்தா, நீங்களே ஓடி ஆடி விளையாடலாம்.

கரு : மரநிழல்களிலும் வகுப்புகள் வைக்க வேணும். அதுகளை யும் துப்பரவு செய்ய வேணும்!

குரல் : பயம் சேர்!

தன : நாங்களும் வாறம். எல்லாருமாகச் சேந்து இறங்கி துப்பரவு செய்வம்!

பிள்ளைகள் : அப்ப நாங்களும் வாறம் சேர்!

(எல்லோரும் சேர்ந்து வேலைகள் செய்கிறார்கள்)

**காட்சி – 5**

**இடம் : கிளிநொச்சியிலுள்ள நீள்குளம் பாடசாலை.**

**காலம் : 2010 ஆம் ஆண்டு**

அரச : இஞ்சை வாறா மிஸ் விஜயா ரீச்சர்

தன : நீள்குளம் பாடசாலைக்கு வாற முதலாவது லேடி ரீச்சர்!

கரு : அவ கிளிநொச்சி ஆளல்லலோ? எங்கை இருந்து வாறா?

அரச: வாருங்கோ விஜயா ரீச்சர்!

விஜயா : எல்லாருக்கும் வணக்கம்!

கரு : எங்கை இருந்து வாறியள் மீளக் குடியேறீட்டியளா?

விஜ : நாங்கள் கிளிநொச்சீலை குடியேறீட்டம்.

அரச : அப்பேன் வரேல்லை? ஆறுதலாவாறியள்? இது வரை ஐஞ்சு வாத்திமார் வந்துட்டினம்!

விஜ: ஐஞ்சு மைல் காட்டுக்காலை நடந்து வரவேணும். பயமல்லா பிறின்சிப்பல்சேர்? இஞ்சை நிலைமை எப்பிடி இருக்கோ தெரியாது. அது தான் நிண்டு பாத்து வாறன்!

கரு : எங்கை இருந்தியள் இவ்வளவு காலமும்?

விஜ : நாங்கள் நேரத்தோடையே ராணுவத்திட்டைச் சரணடைஞ்சு, வவுனியாவுக்குப் போயிட்டம்.

தன : அப்ப புது மாத்தலனுக்குப் போய் கப்பல் ஏறேல்லை?

விஜ : இல்லை. வவுனியாவிலை அகதி முகாமிலை இருந்தம். பிறகு அங்கை இருந்து திருமலை போய், கப்பல்லை யாழ்ப்பாணம் போனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச: அங்கை ஆர் இருக்கிறது?

விஜய : அங்கை சொந்தக்காறற்றை வீட்டிலை இருந்து நல்ல பள்ளிக்கூடத்திலை படிப்பிச்சன். இப்பவும் தம்பி தங்கச்சி அங்கைதான் படிக்கினம்.!

கரு : ஓ இஞ்சை படிப்பித்தல்கள் ஒண்டும் முளுசா தொடங் கேல்லைத்தானே?

விஜ : அப்பா அம்மாவும் நானும் வந்து குடியேறினம். தம்பி தங்கச்சி பிறகு வருவினம்!

கரு : அப்ப போகேக்கை ஒண்டும் கொண்டு போகேல்லை?

விஜ : இல்லை கருணாகரன் மாஸ்ரர். வீட்டுச்சாமான்கள், வாட்டர்பம், சைக்கிள், மோட்டச் சைக்கிள் எல்லாம். இஞ்சைதான்!

தன : நகையள்?

விஜ : நகையளைக் கொண்டு போட்டம் தனபால் மாஸ்ரர், நேரத்துக்கு சரணடைஞ்சதாலை!

கரு : இப்ப எங்கை இருக்கிறியள்?

விஜ : அரசாங்கம் வீடு கட்டித் தந்திருக்கு. ஒரு சின்ன வீடு!

கரு : சின்ன வீடோ, பெரிய வீடோ, இருக்க ஒரு வீடிருக்கே!

தன : அப்ப உங்கடை பழைய வீடு?

விஜ : அது உடைஞ்சு கிடக்கு அதை மெல்ல மெல்லத் திருத்துவம்.

கரு : அரசாங்கம் காசும் தந்ததல்லா மீளக் குடியேறினவைக்கு?

விஜ : ஓம் கருணாகரன் மாஸ்ரர். முதல் இருபத்தையாயிரம் ரூபா. இப்ப ஐம்பதாயிரமாக்கியிருக்கு!

அதி : நல்ல காசு! (சிரிக்கிறார்)

விஜ : அதிபர் சேர்! அது சிலவுக்குத்தான் காணும்.

அதி : ஓம் ரீச்சர். எங்களுக்கே எடுக்கிற சம்பளம் முடிஞ்சு போகுதே! நீங்கள் புதிசாக் குடியேறினனீங்கள்!

கரு : அப்ப பழைய வீடு?

விஜ : அதை நாங்கள் உழைச்சுத்தான் திருத்த வேணும்!

அரச : 150 பிள்ளையள் வருது. கொஞ்சப் பொம்பிளைப் பிள்ளையளும் வருது. நீங்கள் வந்தது அதுகளைப் பாக்க நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜ : படிப்பிக்கிறதில்லையா அதிபர் சேர்?

அர : சும்மா பொதுவாப் படிக்கிறம். ரைம்ரேபிள் போட்டு ஒழுங்கா வேலை செய்ய வாத்திமார் காணாது.

விஜ: பிள்ளையளை ஏமாத்தக்கூடாது. இருக்கிற வாத்திமாரோடை படிப்பிப்பம் சேர்!

அரச: முந்தி மூண்டு லேடி ரீச்சேர்ஸ் இருந்தவை. மற்றவை என்ன ஆச்சினமோ தெரியாது!

விஜ : தேவி ரீச்சரும், சறோஜினி ரீச்சரும் அங்கை யாழ்ப்பாணத்திலை நிக்கினம். சந்திச்சனான். வாறம் எண்டு சொன்னவை.

கரு : உச்சிப் பாக்கினம். சரிவராட்டா வருவினம்! (எல்லோரும் சிரிக்கிறார்கள்)

அரச : இஞ்சை இடம் காணாது ரீச்சர். மரநிழல்களிலும் இருந்துதான் கற்பிக்க வேணும்!

விஜ : படிப்பிக்க வந்தனாங்கள் எங்கை இருந்தெண்டா என்ன? கற்பிப்பம்! (சிரிக்கிறாள்)

கரு : உங்களுடைய பள்ளிக்கூடம்தானே ரீச்சர்?

விஜ : கருணாகரன் மாஸ்ரர் உங்களுடையபள்ளிக்கூடம் எண்டு சொல்லாதேங்கோ! எங்களுடைய பள்ளிக்கூடம் என்று சொல்லுங்கோ! (சிரிக்கிறாள்)

கரு : ஓம் விஜயா ரீச்சர். எங்களுடைய பள்ளிக்கூடம்! (சிரிக்கிறான்)

**காட்சி – 4**

**இடம் : கிளிநொச்சியிலுள்ள நீள்குளம் பாடசாலை.**

**காலம் : 2010 ஆம் ஆண்டு**

(அரசரத்தினமும் மகாவித்தியாலய ஆசிரியர்களும் இருக்கிறார்கள்)

அரச : இப்ப 200 பிள்ளையளும் 6 வாத்திமாரும் இருக்கிறம் நீள்குளம் மகாவித்தியாலயத்திலை.

கரு : அது நல்ல வரவு. ஒரு மாதத்திலை.

தன : பிள்ளையள் வரவு கூடக் கூடும். வாத்திமார் வரவு அப்பிடித்தான்! (சிரிக்கிறார்)

விஜ : பிள்ளையளுக்கு படிக்க ஆசைதானே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன : வீட்டிலை சும்மா இருக்கிறது தானே எண்டும் வருகுதுகள்! (சிரிக்கிறார்)

அரச : முந்தி 600 பிள்ளையள் படிச்ச பள்ளிக்கூடம். மிச்சப் பிள்ளையள் ஏன் வரேல்லை?

விஜ : தெரியாதே சேர். வீடுகளிலை வேலை இருக்கும். வீடு திருத்துற, வளவு துப்பரவு செய்யிற வேலை. தோட்டம் வைக்குங்கள். வருங்கள்!

கரு : ரீச்சர்! சிலது படிக்கிறதை மறந்தும் இருக்குங்கள்!

விஜ : உள்ளது தான் மாஸ்ரர். சண்டைக் காலத்திலை இஞ்சை படிப்பே இல்லையே!

அர : நான் ஒரு தந்திரம் செய்யப் போறன்.

விஜ : என்ன தந்திரம் சேர்?

அரச: ஒரு விளையாட்டுப் போட்டி வைப்பம். விளையாட்டெண்டா, பிள்ளையளுக்கு விருப்பம் தானே? வருங்கள்!

விஜ : ஓம் சேர் வரக்கூடும்!

கரு : படிப்பிலை ஆர்வம் உள்ள பிள்ளையளைவிட, விளையாட்டிலை ஆர்வமுள்ள பிள்ளையள் தானே அதிகம்? வருங்கள்!

தன : இந்தக் கல்லுக்கையும் முள்ளுக்கையும் பத்தேக்கையும் என்ன சேர் விளையாட்டுப் போட்டி? மனிசர் வந்து போகவே பயமாய் இருக்கு!

சரோஜினி : அதெல்லாம் துப்பரவு செய்விக்கலாம். இவ்வளவையும் பிள்ளையள் தானே துப்பரவு செய்தது?

கரு : நல்லாச் சொன்னியள் சரோஜினி ரீச்சர். மிச்சத்தையும் நானே துப்பரவு பண்ணுவிச்சுத்தாறன்!

விஜ: கருணாகரன் மாஸ்ரர், வளவைத் துப்பரவு செய்த பெருமையை தானே எடுத்துக் கொள்ளப் பாக்கிறார்! (சிரித்து) எல்லாருமாச் சேந்து தானே மாஸ்ரர் துப்பரவு செய்தம்?

கரு : ஓம் விஜயா ரீச்சர், நான் எனக்கே எடுக்கேல்லை. உங்களுக்கும் பங்கு தாறன்! (சிரிப்பு)

சரோ : இனி விளையாட்டுப் போட்டி எண்டா பிள்ளையள் தாங்களே முன்வந்து துப்பரவு செய்வங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர : நல்லாச் சொன்னியள் சரோஜினி ரீச்சர்! இதிலை கனலாபம் இருக்கு. வளவு துப்பரவாகுது! பிள்ளையள் கூடுதலாகப் பள்ளிக்கு வரும். பாடசாலேலை நடத்த வேண்டிய விளையாட்டுப் போட்டியும் நடத்துறதாகுது! கல்விக் கந்தோரும் எங்களுக்குத் தரவேண்டியதுகளைத் தரும்.

தன: கஷ்டப்படுற தெண்டே நிக்கிறியள்! (சிரிக்கிறார்)

அரச: கஷ்டம் இல்லை தனபால் மாஸ்ரர். இது எங்களுடைய கடமை. பள்ளிக்கூடத்தை முறையா நடத்த வேண்டியது எங்களுடைய கடமை! கல்வி, அதிகாரியளிட்டையும் தேவையானதைக் கேப்பம். ஸ்போட்ஸ் மீற் வைச்சாத்தானே? கேக்கலாம்.

சரோ : ஆரைச் சேர் பிரதமவிருந்தினராக அழைக்கிறது?

அரச : ஒரு விருந்தினரும் வேண்டாம், சரோஜினி ரீச்சர். நாங்கள் ஸ்போட்சை நடத்துவம்!

சரோ : நீங்களே இருங்கோ சேர் பிரதம விருந்தினராக!

அரச : வேண்டாம். எல்லாருமாகச் சேந்து ஸ்போட்சை நடத்தி முடிப்பம். நான் வேணுமெண்டா கடைசி நேரத்திலை. சேட்டிபிக்கேற்றுகளைக் குடுக்கிறன்!

விஜ : சேட்டிபிக்கேற்றுகளும் குடுத்திறதா சேர்!

அரச : குடுக்கத்தானே வேணும் விஜயா ரீச்சர்? அப்ப தானே பிள்ளையளுக்கு ஒரு உற்சாகம்.

கரு : வாழ்நாள் முழுக்க வைச்சிருந்து பாக்குங்கள். தங்கள் வெற்றிக்குக் கிடைச்ச பரிசெண்டு!

விஜ : கருணாகரன் மாஸ்ரரிட்டை அப்பிடியான பரிசுகள் இருக்கு போலை?

கரு : இருக்கு ரீச்சர். ஆனா நான் அதுகளை எடுத்து பாத்து மினைக்கெடுறதில்லை?

விஜ : ஏன் சேர் அப்பிடி?

கரு : என்னிட்டை அதையும் விடச் சிறந்த சாதனையள் இருக்கு! (சிரிக்கிறார்)

விஜ : அப்பிடியா? (சிரிக்கிறாள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரு : விஜயா ரீச்சர்! இப்ப இந்த ஸ்போட்சை நடத்தி பள்ளிக்கூடத்தை நல்லபடியா நடத்தினா, இதுவும் ஒரு சாதனைதானே?

விஜ : நிட்சயமாக! பிள்ளையளுக்கு உற்சாகம் அளிக்கிறம். பள்ளிக்கூடத்தை திருத்துறம்!

தன : எல்லாரும் ஒண்டை மறந்துட்டியள்?

அரச : என்ன தனபால் சேர்?

தன : இஞ்சை விஜயா ரீச்சரைத் தவிர, மற்றவை எல்லாரும் யாழ்ப்பாணத்திலை இருந்தும் வவுனியாவிலை இருந்தும் வாறவை. மூண்டு மணி பஸ்ஸை விட்டா பிறகு பஸ் இல்லை!

அரச : பாடசாலை நேரத்திலையே விளையாட்டுப் போட்டியை நடத்தீட்டு, மூண்டு மணிக்கு வீட்டை போவம்!

தன : அப்ப சரி!

கரு : இப்பவே வளவைத் துப்பரவு செய்ய துவங்க வேணும்.

அரச : கருணாகரன் மாஸ்ரர் நீரே அந்தப் பொறுப்பை எடும்.

கரு : நான் தனிய எப்படி சேர்?

விஜ : நானும் வாறன் மாஸ்ரர்!

சரோ: நானும் வாறன் மாஸ்ரர்!

கரு : பிள்ளையள் எல்லாரும் இஞ்சை வாருங்கோ! (பிள்ளைகள் வருகிறார்கள்) இந்தப் பாடசாலேலை விளையாட்டுப் போட்டி நடத்தப் போறம். உங்களுக்கு விருப்பம்தானே?

பலகுரல்கள் : விருப்பம் சேர்! நடத்துவம் சேர்!

கரு : சரி முதல்லை வளவைத் துப்பரவு செய்ய வேணும்!

(பலகுரல்கள்) : நாங்கள் ஆயத்தம்! நாங்கள் செய்யிறம் சேர்!

கரு : சரி துவங்குங்கோ வேலையை!
(பிள்ளைகள் உற்சாகமாக வேலை செய்யத் துவங்குகிறார்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 5

**இடம் : கிளிநொச்சியிலுள்ள நீள்குளம் பாடசாலை.**

**காலம் : 2010 ஆம் ஆண்டு**

அரச : (உற்சாகமாக) வெற்றி! வெற்றி!

கரு: அதிபர் சேர் என்ன வெற்றி!

அரச : இந்த விளையாட்டுப் போட்டியை வெற்றிகரமாகச் செய்து முடிச்சதுதான்! 100 மாணவர்கள் கூடீட்டுது! ஒரு ஆசிரியரும் கூடுதலாக வந்திருக்கிறார். ஒரு புதுக் கட்டிடமும் வந்திருக்கு.

கரு : சாதனைதான் சேர்!

அரச: தளபாடங்களும் கொஞ்சம் அனுப்பியிருக்கு கல்வித் திணைக்களம்.

தன : தளபாடங்களை வைச்சுப் பாதுகாக்க இடங்கள் தான் இல்லை!

அரச : அரசாங்கம் தாறம் எண்டு சொல்லியிருக்கு! ஒரு மாடிக்கட்டிடம் வரும் எண்டு நம்பூறன்.

கரு : கட்டாயம் வரும் சேர்!

சரோ: வளவு முழுக்கத் துப்பரவு செய்தாச்சு. இனிப் பிள்ளையள் பயமில்லாமல் ஓடி ஆடி விளையாடலாம்! மரங்களுக்குக் கீழை இருந்தும் படிக்கலாம் பயமில்லை!

விஜ : சரோஜினி ரீச்சர் பிள்ளையள் உற்சாகமாக ஒத்துழைச்சுதுகள்?

அரச: நீள்குளம் பாடசாலை இருக்கெண்டு எல்லாருக்கும் தெரியப்படுத்தீட்டம்!

சரோ : கல்விக் கந்தோருக்கும் தெரியப்படுத்தியிருக்கிறம். இனிக் கவனிப்பங்கள்!

கரு : இவ்வளவு வசதி இல்லாத இடத்திலை இந்த விளையாட்டுப் போட்டியை நடத்தி முடிச்சது தான் சேர் பெரிய பெருமை!

அரச: ஓம், ஓம் அது பெரிய பெருமை தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன : எல்லாரும் மூண்டரை மணி பஸ் எடுத்து யாழ்ப்பாணமும் வவுனியாவும் போனாலும், விளையாட்டுப் போட்டியையும் நடத்தி முடிச்சது இன்னும் பெருமை!

(எல்லோரும் சிரிக்கிறார்கள்)

விஜ : கருணாகரன் மாஸ்ரருக்குத் தான் பெரிய பாராட்டு! அவர்தான் எல்லாப் பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டு உற்சாகமாய் உழைச்சது!

கரு : விஜயா ரீச்சர்! நீங்களும் கடுமையாத்தானே உழைச்சனீங்கள்?

சரோ : நாங்கள் வீட்டை போனபிறகு நிண்டு, பிள்ளையளைப் பழக்கி.........

அரச: எல்லாரும் தான் உழைச்சவை! நீங்கள் தந்த உற்சாகத்திலை மற்றவையும் கூடுதலாக உழைச்சினம்!

விஜ : நான் ஊர் ஆசிரியை எண்டதிலை ஆறுதலா நிண்டு உழைச்சன்!

கரு : இனி இது எங்கடை ஊரும் தானே விஜயா ரீச்சர்?

தன: பிள்ளையள் தொகை இன்னும் கூடப் போகுது! அதுக்கும் ஆயத்தமாய் இருங்கோ! (சிரிக்கிறார்)

அரச: ஒரு கட்டிடம் கூடீட்டுது! இருக்கவே இருக்கு மரநிழல்கள்! அரசாங்கம் இன்னும் ஒரு கட்டிடம் போட்டுத் தரும் கெதீலை!

கரு : நாங்கள் தேவை எண்டு காட்டீட்டம். அவை தரத்தானே வேணும்?

அரச: வரும், எல்லாம் தரும்! நாங்கள் பள்ளிக்கூடத்தை வழமைபோலை நடத்துவம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 6

**இடம் : கிளிநொச்சியிலுள்ள நீள்குளம் பாடசாலை.**

**காலம் : விளையாட்டுப் போட்டி முடிந்த சில நாட்களில்**

கரு : விஜயா ரீச்சர்!

விஜ : என்ன கருணாகரன் மாஸ்ரர்?

கரு : நான் உங்களை விசேடமாகப் பாராட்ட வேணும், விளையாட்டுப் போட்டியின் வெற்றிக்காக!

விஜ : ஏன் அப்பிடிப் பாராட்டுறியள்?

கரு : கடுமையாக உழைச்சியள். களைக்கக் களைக்க உழைச்சியள்!

விஜ : நீங்களும் அப்பிடித்தானே உழைச்சியள்!

கரு : நீங்கள் கடுமையாக உழைச்சதைப் பாக்கத்தான், எனக்கும் உற்சாகம் வந்தது. உழைச்சன்! (சிரிக்கிறான்)

விஜ : அதுதான் அதிபர் பாராட்டீட்டாரே எல்லாரையும்?

கரு : கடுமையாக உழைச்சதுக்காகவும், என்னை உற்சாகப்-படுத்தினதுக்காகவும் எனது விசேட பாராட்டு!

விஜ : எல்லாம் பள்ளிக்கூடத்துக்காகவும் பிள்ளையளுக்காகவும் தானே?

கரு : உங்கடை பள்ளிக்கூடமும் உங்கடை பிள்ளையளும்!

விஜ : உங்கடை எண்டு சொல்லாதேங்கோ மாஸ்ரர். எங்கடை எண்டு சொல்லுங்கோ!

கரு : ஓம் ஓம் எங்கடை பள்ளிக்கூடம்! எங்கடை பிள்ளையளும்! அதுகள் வளந்துட்டுதுகள்!

விஜ : வளரச் செய்துட்டம்! (சிரிக்கிறாள்)

கரு : இனி அரசாங்கம் தரும் தேவையானதுகளை!

## காட்சி – 7

**இடம் : கிளிநொச்சியிலுள்ள நீள்குளம் பாடசாலை.**

கரு : விஜயா ரீச்சர்! கிளிநொச்சீலை வாடகைக்கு ஒரு அறை எடுக்கலாமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜ : கருணாகரன் மாஸ்ரர் என்ன நிலைமை தெரியாமல் பேசூறியள்? இஞ்சை புதிசா குடியேறினவைக்கு மட்டும் தான் வீடுகள் இருக்கு. வாடகைக்கு எங்கை? (சிரிக்கிறாள்)

கரு : உங்க வீட்டிலை?

விஜ : எங்க வீட்டிலை ஒரு அறேலை குடியிருக்கிறம்! தெரியாதா?

கரு : பக்கத்திலை ஒரு பத்தியை இறக்கி..........

விஜ : அப்பிடியெல்லாம் வாடகைக்கு குடுக்க கூடாது! குடுத்தா வீடாகக் குடுக்கவேணும்! இல்லாட்டா இல்லை!

கரு : அப்ப உங்க வீட்டிலையே எனக்கொரு இடம் தாருங்கோ!

விஜ : இதென்ன கேள்வி மாஸ்ரர்? ஒரு அறேலை இருக்கிறம்! (சிரிக்கிறாள்)

கரு : அந்த அறைக்குத்தான் நான் வர விரும்பூறன்!(சிரிக்கிறான்)

விஜ : (விளங்காமல்) ஏன் மாஸ்ரர்?

கரு : விளங்கேல்லையா? (உருக்கமாக) விஜயா ரீச்சர்! நான் உங்களைக் காதலிக்கிறன்!

விஜ : (வியப்புடன்) இதென்ன திடீர்க் காதல்?

கரு : திடீர் காதல் இல்லை. கொஞ்சக் காலமாகக் காதலிக்கிறன்!

விஜ : முந்தி எவ்வளவு காலம் ஒண்டாப் படிப்பிச்சனாங்கள்? அப்ப இல்லாமல், இப்ப ஏன் காதல் வந்தது?

கரு : அப்ப சும்மா வந்து போனன். இப்ப இந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்காக ஒன்றாக தீவிரமாக உழைச்சம். அதாலைதான்....! (சிரிக்கிறான்)

விஜ : அப்ப பாடசாலைக்காகத்தான் காதல் வந்தது? (சிரிக்கிறாள்)

கரு : பாடசாலைக்கு நன்றாக உழைச்சதாலை, உங்களிலும் காதல் வந்தது!

விஜ : என்னுடைய நிலைமை தெரியும் தானே மாஸ்ரர்! எல்லாத்தையும் இழந்துட்டு, அரசாங்கம் தந்த ஒரு சின்ன வீட்டிலை இருக்கிறம்!

கரு : நான் காதலிக்கிறது உங்களை! வீட்டை இல்லை! (சிரிக்கிறான்)

விஜ : தம்பி தங்கச்சியும் இருக்கினம்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரு : தோட்டம் வயல் நிலங்கள் இருக்குதானே? அதுகளைச் செய்து தம்பி தங்கச்சியையும் ஆதரிப்பம்! என்ன சொல்லுறியள் ரீச்சர்?

விஜ : இப்பிடித் திடீரெண்டு கேட்டா எப்பிடி மாஸ்ரர்? எனக்கு நீங்கள் கொஞ்சம் நாள் தர வேணும்!

கரு : சரி வேண்டிய நேரம் தாறன். யோசிச்சுச் சொல்லுங்கோ!

**காட்சி – 8**

**இடம் : கிளிநொச்சியிலுள்ள நீள்குளம் பாடசாலை.**

கரு : என்ன செல்லுறியள் விஜயா ரீச்சர்?

விஜ : கருணாகரன் மாஸ்ரர். இப்ப அவசரப்பட்டு முடிவெடுத் துட்டு...

கரு : அவசரப்படேல்லை ரீச்சர்! நல்லா யோசிச்சுத்தான் முடிவெடுத்தன்!

விஜ : பிறகு கவலைப்பட மாட்டியளே மாஸ்ரர்?

கரு : ரீச்சர்! நீங்கள் என்னுடைய காதலை ஏற்றுக் கொண்டா, நான் சந்தோசப்படுவன்!

விஜ : (நாணத்துடன்) சரி மாஸ்ரர். நான் உங்களுடைய காதலை ஏற்றுக் கொள்ளுறன்!

கரு : சந்தோஷம் விஜயா ரீச்சர்! இனி இது எங்கள் குடும்பம்! எங்கள் குடும்பத்தின் முன்னேற்றத் திற்காகவும் எங்கள் பாடசாலையின் முன்னேற்றத்திற்காகவும் நன்றாக தீவிரமாக உழைப்பம்!

விஜ : இந்தப் பிள்ளையளின்ரை முன்னேற்றத்திற்காகவும் உழைப்பம்!

கரு : ஓம் ரீச்சர், இந்தப் பிள்ளையளின்ரை முன்னேற்றத்திற்காக வும் நன்றாக உழைப்பம்!

இது கிளிநொச்சி மீள்குடியேற்றம், அதன் கல்வி வளர்ச்சிபற்றிச் சொல்லும் ஒரு யதார்த்ததமான நாடகம்!

இலங்கை வானொலி 3.7.2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு நவீன நாடகம்

# அயலவர்கள்

## பாத்திரங்கள்

1. சிவராசா – கணவன்
2. பார்வதி – மனைவி
3. சுஜீவன் – அவர்களது மகன்
4. தங்கராசா – கணவன்
5. சிவக்கொழுந்து – மனைவி
6. ராகுலன் – அவர்களது மகன்
7. தியாகராசா – ஊர்ப் பெரியவர்

**கதை நடக்கும் காலம் சில வாரங்கள்**

### காட்சி – 1
**இடம் : சிவராசா வீடு**

சிவராசா : பார்வதி! அங்கை பார், அங்கை பார்!

பார்வதி : என்ன பாக்கிறது?

சிவ : வேலிக்கு மேலாலை குப்பையைக் கொட்டுதுகள் இஞ்சாலை!

பார் : ஓமப்பா. ஆராக்கும்?

சிவ : தங்கராசா, சிவக்கொழுந்து ரண்டு பேரும் தான்!

சுஜீவன் : சில வேளை கூட்டி வேலிக்காலை இஞ்சாலை தள்ளி விடுங்கள் குப்பையை. நான் பாத்திருக்கிறன். ஒண்டும் சொல்லூறதில்லை.

பார் : நீ அதுகளோடை பேசாதையடா ராசா. வீண் சண்டை வரும்!

சிவ : கொண்டு போய் ரோட்டிலை போடலாமே!

சுஜீ : அதை மியூனிசிப்பல் லொறி வந்து ஏத்திட்டுப் போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார் : அதுக்குப் பஞ்சி!

சிவ : வேலியடிக்குப் போகேலாது! கஞ்சல், குப்பை, தகரங்கள் போத்தில் ஓடுகள்....

பார் : நீங்கள் வேலியடிக்குப் போகாதேங்கோ!

சிவ : என்ன பார்வதி, எங்கடை வேலிப் பக்கத்தையும் அவையோடை விடவோ? (சிரிக்கிறார்)

சுஜீ : இதைத் தானே அப்பா சொல்லூறது சூழல் மாசடையிறது எண்டு?

சிவ : ஓமடா சுஜீவன். சரியாச் சொன்னாய்!

சுஜீ : பள்ளீலை வாத்தியார் படிப்பிச்சவர். இதாலை தான் நோய் நொடி பரவூறதாம்!

பார் : நண்டைத் திண்டுட்டு கோதை இஞ்சாலை போடுறது. மீனைத் திண்டுட்டு, பழுதான மீனை கருவாட்டை எங்கடை வளவுக்கை போடுறது!

சுஜீ : எல்லாம் நாறுது. எங்கடை வளவுக்கை உற்பத்தியாகிற கிருமியள், அவேன்ரை வளவுக்கையும் போகும்தானே அப்பா?

பார் : பிறகு அதுகளுக்கும் வருத்தம் வரும்!

சிவ : அதைப் பற்றி அதுகளுக்குக் கவலை இல்லை. கழிவுப் பொருள்களை இஞ்சாலை கொட்டினாச் சரி!

சுஜீ : மீன் வாங்கியாற பொலித்தீன பையளை இஞ்சாலை போடுறது! அதுகள் எங்கடை வளவு முழுக்கப் பறக்குதுகள்!

பார் : பொறுங்கோ! பொறுங்கோ! நான் சொல்லூறன் சிவக்கொழுந்து விட்டை.

சிவ : பார்வதி! சிவக்கொழுந்து புருஷன் ரண்டு பேருமாத்தான் கொட்டுதுகள்! நான் சொல்லிச் சொல்லி அலுத்துப் போனன். இப்ப பாத்ததை உடனை சொல்லீட்டு வாறன்!

பார் : பொறுங்கோ! பொறுங்கோ!

சிவ : என்ன வளவு குப்பையாலை நிறையும் வரையும் பொறுக்கிறதோ? (சிரிக்கிறார்)

சுஜீ : நான் பொறுக்கூறன் அப்பா பொலித்தீன் பையளை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ : சுஜீவன்! உனக்கு வேறை வெலை இல்லையேடா? நான் சொல்லத்தான் போறன்.
(போக எத்தனிக்கிறார்)

பார் : வீண் சண்டை வரப் போகுது!

சிவ : சொல்லாட்டா, வளவு நிறையும். குப்பையாலை! நான் வாறன் (போகிறார்)

பார் : சொல்லுறதைச் சமாதானமாகச் சொல்லுங்கோ!

சுஜீ : அப்பா நானும் வாறன்.

பார் : ஏன்ரா நீயும் கொப்பரோடை சேர்ந்து சண்டையைத் துவக்கப் போறியே?

சுஜீ : இல்லை அம்மா சண்டை வந்தா, அப்பாவைப் பிடிச்சு இழுத்தர! (சிரிக்கிறான்)

சிவ : நீ இரடா, நான் போறன்.
(போய் வேலியடியில் நின்று)
தங்கராசா! தங்கராசா!

சிவக்கொழுந்து! இஞ்சாருங்கோ, சிவராசா அண்ணை கூப்பிடுறார்.

தங் : ஆர் சிவராசா அண்ணையே? வாறன் வாறன். (வந்து) என்ன விசேஷம்?

சிவ : தங்கராசா இந்தக் கஞ்சல் குப்பையளை எங்கடை வளவுக்கை போடாதேங்கோ! உன்ரை பேர் தங்கராசா. உங்கடை வளவுக் கஞ்சல் குப்பை எல்லாம் இஞ்சாலை வருகுது! (சிரிக்கிறார்)

தங் : ஆர்? நாங்கள் போடுறதில்லை. உது வேலி மரங்களிலை இருந்து விழுந்த இலையள், மரங்கள் நிண்டா இலையள் விழும்தானே அண்ணை? (சிரிக்கிறார்)

சிவ : உங்கடை வளவுக்கை இப்பிடி கஞ்சல்களைக் காணேல்லை?

தங் : அது நாங்கள் கொண்டு போய் றோட்டிலை போட்டுட்டம்.

சிவக் : சிவராசா அண்ணை! நாங்கள் கஞ்சல் குப்பையளை வளவுக்கை சேரவிடுறதில்லை!

சிவ : தங்கச்சி சிவக்கொழுந்து! நீங்கள் சாப்பிட்ட நண்டுக் கோதுகள் இஞ்சாலை. மிஞ்சின கருவாட்டுத் துண்டுகளும் எங்கடை வளவுக்கை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங் : அது காகங்கள் எடுத்தந்து போட்டிருக்கும். காகங்களுக்குக் காவல் இருக்க முடியுமே?

சிவ : மணக்குது! மணக்குது!

தங் : மீன், நண்டு மணக்கும் தானே? (சிரிக்கிறார்)

சிவ : நீங்கள் சாமான் வாங்கியாற பொலித்தீன் பையள் எல்லாம் எங்கடை வளவுக்கை பறக்குதுகள், வெற்றிக் கொடியள் மாதிரி!

சிவக் : அது காத்து! காத்து அள்ளி வீசுதண்ணை!

சிவ : அப்ப உங்கடை வளவுக்கை பொலித்தீன் பையளைக் காணேல்லை?

சிவக் : அது நாங்கள் எல்லாத்தையும் பொறுக்கிக் கொண்டுபோய் ரோட்டிலை போட்டுட்டம். நீங்களும் பொறுக்கிக் கொண்டு போய் போடுங்கோ

தங் : வளவு சுத்தமாய் இருக்கும். நோய் நொடி வராது.

சிவ : இந்தத் தகரங்கள் போத்தில் ஓடுகளையும் காகங்களே கொண்டந்து போட்டது?

தங் : போட்டிருக்கும்! போட்டிருக்கும்!

சிவ : வெலியடிலை நடக்கேலாமலிருக்கு!

தங் : வேலியடிக்கு வராதேங்கோ! வந்தா, செருப்பைப் போட்டுக் கொண்டு வாருங்கோ!

சிவ : இந்தத் தகரங்களிலை தண்ணி நிக்குது! இதுகளிலை இருந்து தானே நுளம்பு உற்பத்தியாகிறது?

தங் : ஓம் அண்ணை தண்ணீலை இருந்துதான் நுளம்பு உற்பத்தியாகிறது.

சிவ : நுளம்புகள் கடிச்சா வருத்தம் வரும். அதுகள் உங்களை-யும் கடிக்கும். பிறகு உங்களுக்கும் வருதங்கள் வரும்!

சிவக் : என்ன சிவராசா அண்ணை திட்டுறியளோ?

சிவ : தங்கச்சி! நான் நடக்கக்கூடியதுகளைச் சொல்லுறன்!

தங் : அண்ணை தகரங்களைப் பாத்து தண்ணியை தட்டி ஊத்திவிடுங்கோ!

சிவ : (கோபமாக) நான் இனி ஒவ்வொரு தகரமாப் பாத்து தண்ணியை தட்டி ஊத்தட்டோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங் : தண்ணி நிண்டா நுளம்பு உற்பத்தியாகும். நுளம்பு உற்பத்தியாகிக் கடிக்கும் எண்டு பயப்பிட்டியள். அதுதான் அதிலை இருந்து தப்ப வழி சொன்னன்!

சிவ : என்ன பகிடி விடுறியா தங்கராசா? (கோபமாக) நீங்கள் தகரங்களைக் கொண்டந்து போடுவியள். அதுகளிலை தண்ணி நிக்கிறதுகளைப் பாத்துத் தட்டி ஊத்துறதா எனக்கு வேலை?

தங் : நாங்கள் போடேல்லை எண்டு சொல்லுறம். திரும்பத் திரும்ப, நாங்கள் போட்டது எண்டு சொல்லிக் கொண்டு நிக்கிறியள்! வீண் கதை பேச வேண்டாம்!

சிவ : இது வீண் கதை இல்லை. உள்ளதைச் சொல்லுறன்!

தங் : சொன்னா கேக்க வேணும். வீண் கதை பேசப்படாது!

சிவ : எது வீண் கதை?

தங் : நீ இப்ப பேசுறதுதான்!

சிவ : குப்பையைக் கொட்டுறியள்! நோய் நொடி வரப்போகுது! இது வீண்கதையா?

சிவக் : சிவராசா அண்ணை நாங்கள் இனிமேல் ரோட்டிலை கொட்டுறம். சண்டை வேண்டாம். நீங்கள் போங்கோ அண்ணை. நீங்களும் வாருங்கோ!

சிவ : பாத்தியா, பாத்தியா, உன்ரை மனிசி சொல்லுறததை!

தங் : என்ன சொன்னது மனிசி?

சிவ : ரோட்டிலை கொட்டுறம் எண்டு! முந்திப் போட்டதை ஒத்துக் கொண்டுட்டுதே!

தங் : சிவக்கொழுந்து! நீ ஏன் இதுக்கை வந்தனி? அங்காலை போ!

பார் : சண்டை வேண்டாம். நீங்களும் வாருங்கோ இஞ்சை!

சிவ : இதுக்கொரு முற்றில்லாமல் நான் வரன்!

தங் : வீண் கதை பேசினா என்ன நடக்கும் தெரியுமே?

சிவ : (கோபமாக) என்ன நடக்கும்? வெருட்டுறாய் (கோபமாகச் சிரிக்கிறார்)

சுஜீ : (சுஜீவன் வந்து சிவராசாவின் கையைப் பிடித்து இழுக்கிறான்) வாருங்கோ அப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ : விடா சுஜி! இவர் எதோ செய்யப் போறாராம்!

ராகுலன் : (ராகுலன் வந்து) அப்பா வாருங்கோ வீட்டை! (தங்கராசாவின் கையைப் பிடித்து இழுத்துச் செல்கிறான்)

தங் : சிவராசாவுக்கு இந்த தங்கராசனைப்பற்றித் தெரியேல்லை! (போகிறார்)

சிவ : தெரியாட்டாத் தெரியப்படுத்துமன்! (சுஜீவன் தகப்பனை இழுத்துக் கொண்டு போகிறான்)

சிவ : (வீடு போய் சேர்ந்ததும்) அதுகளுக்கு மரியாதையா வாயாலை சொன்னா விளங்காது! நான் செயலிலை, காட்டுறன்!

பார் : நீங்கள் ஒண்டும் காட்ட வேண்டாம். பேசாமல் இருங்கோ! இப்ப தப்பினதே போதும்!

**காட்சி – உ**

**இடம் : சிவராசா வீடு**

**காலம் : சில நாட்களின் பின்பு**

சிவ : பார்வதி! இஞ்சைதா உந்தக் குப்பைப் பெட்டியை! (அதைத் தூக்கிக் கொண்டு போகிறார்)

பார் : எங்கை கொண்டு போறியள் குப்பையை?

சிவ : தெரியேல்லையா? கொட்ட!

பார் : இஞ்சை எங்கடை வளவுக்கை கொட்டலாமே!

சிவ : பக்கத்திலை தங்கராசா வளவுக்கை கொட்டப் போறன்!

பார் : பிலத்துப் பேசாதேங்கோ! வீண் கொளுவல் வரப் போகுது!

சிவ : எங்கை வரப் போகுது? அது வந்துட்டுது!

சுஜி : அப்பா கொளுவல் எடுக்கிறது எண்டே நிக்கிறார்!

சிவ : அதுகளுக்கு அறிவு வரப்பண்ண. அதுகளின்ரை வளவுக்கையும் குப்பையை கொட்டினாத் தான் அதுகளுக்கு அறிவு வரும்!

பார் : அதுகளுக்கு அறிவு வராது!

சுஜீ : அப்பா நான் குப்பை பொலித்தீன் எல்லாம் பொறுக்கி ரோட்டிலை போடுறன். நீங்கள் அங்காலை கொட்டாதேங்கோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ : அப்பிடிச் செய்தா, நாங்கள் பயந்து பணிஞ்சு போறம் எண்டு நினைச்சுடுங்கள்!

பார் : அதுகள் எதையும் நினைக்கட்டன். நாங்கள் கரைச்சல் இல்லாமல் இருக்கலாம்.

சிவ : அப்ப அதுகளைத் திருத்த வேண்டாமா? பாவங்கள்! (சிரிக்கிறார்)

சுஜீ : அப்பா உலகத்தைத் திருத்தப் போறார்!

சிவ : சுஜீவன்! அதுகள் திருந்தினா நல்லது தானேடா? குப்பை வராது! நோய் ரொடி வராது! சண்டை வராது! சொன்னா கேக்கேல்லை. செயலிலை காட்டுறன்!

பார் : சும்மா இருங்கோ பேசாமல்!

சிவ : பார்வதி இது முதல் முறை இல்லை. பல முறை கொட்டிட்டன்! (சிரிக்கிறார்)

பார் : என்ன வெல்லாம் கொட்டினியள்?

சிவ : குப்பை, தகரம், போத்தில் ஓடு, பொலித்தீன் பேப்பர்.... அதுகள் போடுறதெல்லாம் நானும் போட்டுட்டன்! (சிரிக்கிறார்)

பார் : பிலத்துப் பேசாதேங்கோ! அதுகள் இப்ப எல்லாத்தையும் பொறுக்கிக் கொண்டு போய், றோட்டிலை போட்டிருக்குங்கள்.

சுஜீ : தங்கடை குப்பையை இஞ்சாலை போட்டதுகள், இப்ப எங்கடை குப்பையைக் கொண்டு போய் றோட்டிலை போடுதுகள்! (சிரிக்கிறான்)

பார் : போட்டது காணும். இனி வேண்டாம். விடுங்கோ!

சிவ : நீ சத்தம் போடாதை பார்வதி! (குப்பையைக் கொட்டிவிட்டு வந்து) சரி கொட்டிட்டன்!

**(பக்கத்து தங்கராசா வீட்டில்)**

தங் : சிவக்கொழுந்து!

சிவக் : என்ன? ஏன் கூப்பிடுறியள்?

தங் : சிவராசா வந்து குப்பையை எங்கடை வளவுக்கை கொட்டிட்டுப் போறார்!

சிவக் : கண்டனீங்களே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங் : இப்ப கண்டனான்

சிவக் : நீங்கள் செய்ததை அவரும் செய்யிறார்! (சிரிக்கிறாள்)

தங் : நீ சந்தீலை முடிச்சவிள்கிறாய்!

சிவக் : அங்காலை போட்டனீங்கள்தானே குப்பை?

தங் : ஏன் நீ போடேல்லையா?

சிவக் : ஓ நானும் போட்டனான்தான். இப்ப திருந்தீட்டன்!

ராகு : அப்பா! உங்களைப் பாத்து அவரும் பழகீட்டார்! (சிரிக்கிறான்)

தங் : எங்கடை வளவுக்கை குப்பையளைக் காணேல்லை!

ராகு: அப்பா! அதெல்லாம் நான் பொறுக்கிக் கொண்டு போய் றோட்டிலை போட்டுட்டன்! (சிரிக்கிறான்)

தங் : ஏன்ரா அப்பிடிச் செய்தனி?

ராகு: இதாலைதான் சூழல் மாசடையிறதெண்டு பள்ளிக் கூடத்திலை சொல்லித் தந்தவை!

தங் : பக்கத்து வளவுக்கை போட்டிருக்கலாமேடா!

ராகு: அங்காலை போட்டா, பிறகு அதுகள் காத்துக்கு இஞ்சாலை வரும் தானே? நோயளும் வரும்!

தங் : அதுகள் வரட்டும். சிவராசாவுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும்!

சிவக் : என்ன செய்யப் போறியள்?

தங் கூப்பிட்டுக் கேக்கப் போறன்!

ராகு: இப்ப சண்டை வரப்போகுது!

தங் : அது வரட்டும். உவற்றை சண்டித்தனத்துக்கு விடப்படாது! (போகிறார்)

சிவக் : நாங்கள் தானே சண்டித்தனத்தைத் துவக்கினது? சண்டையை விட்டுட்டு சமாதானமாக் கேளுங்கோ!

தங் : சிவராசா அண்ணை! சிவராசா அண்ணை!

சிவ : ஆர் தங்கராசாவே? வாறன். வாறன் (வந்து) என்ன விசேஷம்?

தங் : சிவராசா அண்ணை! உங்கடை கஞ்சல் குப்பையளை எங்கடை வளவுக்கை போடாதேங்கோ!

சிவ : ஆர்? நாங்கள் போடுறதில்லை. உது வேலீலை இருந்து விழுந்த இலையள்! வேலீலை உள்ள இலையள் விழும் தானே தங்கராசா? (சிரிக்கிறார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங் : நீங்கள் திண்ட ரண்டுக் கோதுகள், மீன் தலைய்ள், கருவாட்டுத் துண்டுகள் எல்லாம் இஞ்சாலை.

சிவ : அது காகங்கள் கொண்டந்து போட்டிருக்கும். காகங்களுக்குக் காவல் இருக்க முடியுமே?

தங் : எல்லாம் மணக்குது! மணக்குது!

சிவ : மீன், நண்டு மணக்கும் தானே தங்கராசா?

தங் : நீங்கள் சாமான்கள் வாங்கியாற பொலித்தீன் பையளெல்லாம் எங்கடை வளவுக்கை பறக்குது, வெற்றிக் கொடியள் மாதிரி!

சிவ : அது காத்து! காத்து அள்ளி வீசுது தங்கராசா!

தங் : இந்தத் தகரங்கள், பேணியள், போத்தில் ஓடுகளையும் காகங்களே கொண்டந்து போட்டது? அல்லது காத்தோ? (சிரிக்கிறார்)

சிவ : போட்டிருக்கும்! போட்டிருக்கும்!

தங் : வேலியடிலை நடக்கேலாமல் இருக்கு!

சிவ : வேலியடிக்கு வராதேங்கோ! வந்தா செருப்பைப் போட்டுக் கொண்டு வாருங்கோ!

தங் : இந்தத் தகரங்களிலை தண்ணி நிக்குது! இதுகளிலை இருந்துதானே நுளம்புகள் உற்பத்தியாகிறது?

சிவ : ஓம், ஓம் தண்ணீலை இருந்து தான் நுளம்புகள் உற்பித்தியாகிறது!

தங் : நுளம்புகள் கடிச்சா, பிறகு டெங்கு வரும். அதுகள் பிறகு உங்களையும் கடிக்கும்! பிறகு உங்களுக்ககு டெங்கு வரும்!

பார் : என்னண்ணை திட்டுறீயளோ?

தங் : இல்லை பார்வதி தங்கச்சி, நான் நடக்கக் கூடியதைச் சொல்லுறன்!

சிவ : தங்கராசா! தண்ணி உள்ள தகரங்களை தட்டி ஊத்தி விடுங்கோ!

தங் : (கோபமாக) என்ன, எனக்கு வேறை வேலை இல்லையா?

சிவ : தண்ணி நிண்டா, நுளம்பு பெருகும் எண்டாய்! (சிரிக்கிறார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங் : நீங்கள் போடுற தகரங்கள் எல்லாத்தையும் பாத்து, நான் தண்ணி ஊத்தவா?

சிவ : நாங்கள் போடேல்லை எண்டு சொல்லூறன், திரும்பத் திரும்ப போட்டன் எண்டு சொல்லிக் கொண்டு... (கோபமாக) வீண் கதை பேச வேண்டாம்!

தங் : எது வீண் கதை?

சிவக் : நீ இப்ப சொல்லூறதுதான்! வீண் கதை பேசிக் கொண்டு நிண்டா, என்ன நடக்கும் தெரியுமே?

சிவ : (கோபமாக) என்ன வெருட்டூறாய்? என்ன நடக்கும்?

பார் சண்டை வேண்டாம்! நீங்கள் வாருங்கோ வீட்டை!

சுஜி : அப்பா வீட்டை வாருங்கொ!

சிவக் : நீங்களும் வாருங்கோ போவம்!

ராகு: சண்டை பிடியாமல் போவம் அப்பா! (கையைப் பிடித்து இழுக்கிறான்)

தங் : விடடா ராகுலன்! என்ன நடக்கும் எண்டு இவருக்கு ஒருக்காக் காட்டீட்டு வாறன்!

சிவக் : நீங்கள் ஒருத்தருக்கும் ஒண்டும் காட்ட வேண்டாம். வாருங்கோ!

சிவ : என்னவோ கனக்கத் துள்ளுறார். பாப்பம்

சுஜீ : அப்பா நீங்கள் துள்ள வேண்டாம். வாருங்கோ வீட்டை! (கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போகிறான்)

ராகு: அப்பா நீங்களும் வாருங்கோ! (தகப்பனை இழுத்துக் கொண்டு போகிறான்)

**காட்சி – 3**

**இடம் : தங்கராசா வீடு**

சிவக் : எங்கை கொண்டு போறியள் குப்பையை?

தங் : கொட்ட! (சிரித்துக் கொண்டு போகிறார்)

சிவக் : அங்காலை சிவராசா அண்ணை வளவுக்கையே கொட்டப் போறியள்? (பயந்து) சண்டை வரப் போகுது!

தங் : சிவக்கொழுந்து, சண்டை வந்தாப் பிடிக்கிறதுதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவக் : வீண் சண்டை.

ராகு : இஞ்சை தாருங்கோ அப்பா நான் கொண்டு போய் றோட்டிலை கொட்டிட்டு வாறன்!

தங் : அவைக்குப் பயந்தோ, விட்டா ராகுலன்!

சிவக் : இண்டைக்கு சண்டை வரப் பாத்தது அருந்தப்பிலை தப்பினது!

ராகு : இப்ப அவை சண்டைக்கு வந்தா?

தங் : வேலீலை கதியால் இருக்கு, பிடுங்கி விளாசி விடுறன்!

**(பக்கத்து வீட்டில்)**

சிவ : பார்வதி! தங்கராசா குப்பை கொண்டந்து இஞ்சாலை கொட்டப் போகுதோ?

பார் : எங்கையாவது கொட்டட்டும் நீங்கள் பேசாமல் இருங்கோ!

சிவ : என்ன பார்வதி எங்கடை வளவுக்கை அவர் குப்பை கொட்ட, நான் பேசாமல் இருக்கிறதோ?

பார் : வீண் சண்டை வேண்டாம்!

சிவ : தடுக்காட்டா, வளவு நிறைஞ்சுபோம்!

பார் : நான் கூட்டி அள்ளுறன்.

சுஜிவன் : அப்பா தாருங்கோ! நான் கொண்டு போய் றோட்டிலை கொட்டுறன்!

சிவ : பொறடா சுஜீவன்! தங்கராசா கொட்டுறது போலை நானும் கொட்டிட்டு வாறன்!

சுஜி : நுளம்பு பெருகி ரண்டு வளவுக்கையும் பறக்கும்!

பார் : பிறகு டெங்கு வரும்! ரண்டு பகுதிக்கும்!

சுஜீ : சண்டை வந்தா?

சிவ : வேலியடிலை பொல்லு வைச்சிருக்கிறன். எடுத்து வெளுத்து விடுறன் தங்கராசாவின்றை தலேலை!

பார் : (பயந்து) கடவுளே! கடவுளே!

சிவ : அவர் தங்கடை பக்கத்திலை கொட்டிட்டுப் போறார். அப்ப நானும் எங்கடை பக்கத்திலை கொட்டிட்டு வாறன்!

சுஜீ : ரண்டு வளவும் குப்பையாலை நிறையப் போகுது!

**(தங்கராசா வீட்டில்)**

தங் : சிவக்கொழுந்து கொட்டிட்டு, வந்துட்டன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுஜீ : டெங்கு வரப்போகுது

பார் : சண்டையும் வரப்போகுது!

சிவக் : நல்ல காலம் ஒண்டும் நடக்கேல்லை!

தங் : என்ன பயப்பிடுறாய்? சிவராசா வந்திருந்தா வேலீலை கதியாலை முறிச்சு அவற்றை தலையைப் பிளந்திருப்பன்!

சிவக் : இனி நுளம்பு பெருகப் போகுது!

ராகு: அம்மா டெங்குவரப் போகுது ரண்டு குடும்பத்தாருக்கும்! டெங்கு வந்தா? (சிரிக்கிறான்)

சிவக் : பிறகு ஆசுப்பத்திரிக்குப் போக வேண்டும்.

ராகு : அம்மா ஆசுப்பத்திரிக்குப் போனா பிறகு திரும்ப முடியாமலும் போகலாம்! (சிரிக்கிறான்)

**காட்சி – 4**

**இடம் : சிவராசா வீடு**

**காலம் : சில நாட்களின் பின்பு**

சிவ : பார்வதி! தங்கராசாவும் சிவக்கொழுந்துவும் குப்பையைக் கொண்டந்து வேலியடிலை குவிக்கினம்.

பார் : அவை தங்கடை வளவுக்கை தானே போடுகினம்? நல்லாப் போடட்டும்!

சிவ : நானும் எங்கடை வேலியடிலை போடப் போறன். போறன்.

சுஜீ : ஏனப்பா போடுறியள்?

சிவ : அவன் போட்டா நானும் போடுவன்!

சுஜீ : அப்ப கிருமியள் பெருகப் போகுது!

பார் : ரண்டு பக்கமும் பரவும். நான் அள்ளிக் கொண்டு போய் றோட்டிலை போட்டு விடுறேன்!

சிவ : சுஜீவன்! வேண்டாம்! வேண்டாம்! நான் கொளுத்திவிடுறன் குப்பையை!

சுஜீ : அப்பா கொளுத்தினா புகை சாம்பல் பரவும் வளவு முழுக்க. அதுகளை நாங்கள் சுவாசிக்க வேண்டிவரும்!

சிவ : சுஜீவன்! அது பறவாயில்லை!

பார் : அப்ப தங்கராசா அண்ணையும் தங்கடை குப்பையைக் கொளுத்திவிட்டா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ : அந்தக் குப்பையும் எரியட்டும்! (சிரிக்கிறார்)

சுஜி : குப்பை இல்லாமல் போயிடும்! புகையும் சாம்பலும் ரண்டு வளவுக்குள்ளும் பரவும்!

சிவ : எல்லாரும் இருமட்டும். வாறன்! (போய் குப்பையைக் கொளுத்திவிட்டு வந்து ஆனந்தமாக) கொளுத்தீட்டன். எல்லாம் எரியுது எரியுது! முளாசி எரியும்! புகையும் சாம்பலும் அங்காலை போகுது! தங்கராசா வளவுக்கை!

சுஜி : எங்கடை வளவுக்கையும் பரவுது அப்பா!

**(தங்கராசா வீட்டில்)**

தங் : சிவக்கொழுந்து சிவராசா வேலியடியில் குப்பையளைக் கொளுத்தி விட்டிருக்கு புகையும் சாம்பலும் இஞ்சாலை வருகுது!

சிவக் : ஓம் ஓம் நல்லா முளாசி எரியுது!

ராகு : குப்பை எரியுதப்பா!

தங் : நானும் போய், எங்கடை பக்கத்துக்குப்பையை கொளுத்திவிடப் போறன்.

சிவக் : வேண்டாம்! நான் அள்ளி [illegible]ண்டு போய் ரோட்டிலை போடுறன்!

தங் : கொளுத்திவிட்டாத் தானே புகையும் சாம்பலும் அங்காலை போகும்! (சிரிக்கிறார்)

ராகு : எங்கடை வளவுக்கையும் பரவும் அப்பா!

தங் : அதைப் பற்றிப் பறவாயில்லை ராகுலன்! சிவராசா வளவுக்கையும் போனாச் சரி! (போகிறார்)

சிவக் : கொளுவூறதெண்டே நிக்கிறியள்!

தங் : எங்கடை குப்பையை, எங்கடை வளவுக்கை நான் கொளுத்தினா, ஆர்கேக்க?

ராகு: அப்பா இந்தப் புகை மேலை போய், வான மண்டலத்தையும் தாக்குமாம்!

தங் : இவன் ராகுலன் சூழல் மாசடைதலைப் படிச்சுட்டு எல்லாத்-துக்கும் ஒவ்வொண்டு சொல்லிக் கொண்டு நிக்கிறான். நான் வாறன்!

(போய் குப்பையைக் கொளுத்தி விட்டுவருகிறார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ எரியுது! முளாசி எரியுது! புகையும் சாம்பலும் சிவராசா வளவுக்கை போகுது!

ராகு : எங்களை வளவுக்கையும் பரவூதப்பா!

தங் : பரவட்டும்! நல்லாப் பரவட்டும்!

சிவக் : ஐயோ! நெருப்பு வேலிலை பிடிச்சுட்டுது! வேலி எரியுது! முளாசி எரியுது! நெருப்பு வீட்டிலை பிடிக்கப் போகுது!

தங் : (பதறி) ஓடியாருங்கோ! தண்ணி அள்ளி யாருங்கோ! தம்பி ராகுலன் தண்ணி அள்ளியாடா! ஊத்து ஊத்து! வேலிக்கு ஊத்து சிவக்கொழுந்து

**(சிவராசா வீட்டில்)**

பார் : ஐயையோ! வேலி எரியுது! வேலி எரியுது! நெருப்பு வீட்டிலை பிடிக்கப் போகுது! ஓடியாருங்கோ! ஓடியாருங்கோ!

சுஜீ : அப்பா வேலிக்குத் தண்ணி ஊத்துங்கோ!

சிவ : அள்ளியாடா தம்பி! சுஜீவன்!

சுஜீ : இந்தாருங்கோ! ஊத்துங்கோ!

சிவ : ஐயோ! கிட்டப் போக முடியேல்லையே! வெக்கை அடிக்குது! வெக்கை! நெருப்பு வெக்கை!

பார் : தண்ணியை எத்துங்கோ! அது நிக்கேல்லை. முளாசி எரியுது! வீட்டிலை பிடிச்சா வீடு போயிடும்! ஐயோ எத்தினை சாமான்கள் இருக்கு!

சிவ : உதுகளைப் பற்றிப் பேசுறாய். தண்ணியை எத்து! எத்து!

தங் : அது நூரேல்லை! எரிஞ்சு கொண்டு போகுது!

சிவக் : வீட்டிலை பிடிச்சா எல்லாம் போச்சு! கத்துங்கோ! அயலட்டையும் வந்து தண்ணி அளிளி ஊத்தட்டும்! ஐயோ வீடெரியுது! வேலி எரியுது!

**(சிவராசா குடும்பமும் தங்கராசா குடும்பமும் உரத்துக் கத்துகிறார்கள் மாறி மாறி)**

சிவ : ஐயோ வேலி எரியுது!

பார் : வீட்டிலை பிடிக்கப் போகுது!

சிவ : ஓடியாருங்கோ. அயலட்டை எல்லாம் ஓடியாருங்கோ

பார் : நெருப்பு! நெருப்பு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ : நூருங்கோ நூருங்கோ!

தங் : ஐயோ வேலி எரியுது. நிக்கேல்லை எரியுது!

சிவக் : வீட்டிலை பிடிக்கப் போகுது!

ராகு : புகை கண் எரியுது! வெக்கை!

தங் : அயலுக்கு அங்காலை நிக்கிறவையும் ஓடியாருங்கோ! நெருப்பு! நெருப்பு!

சிவக் : வீட்டிலை பிடிச்சா எவ்வளவு சாமான்கள்! காசு நகை நட்டு!

தங் : T.V கொம்பியூட்டர் அதுகள் கிடக்கட்டு! இப்ப கத்துங்கோ, சிவக்கொழுந்துவும், ராகுலனும்!

ராகு : ஓடியாருங்கோ! ஓடியாருங்கோ!

சிவக் : ஐயோ! நெருப்பு! நெருப்பு!

தங் : ஊத்துங்கோ தண்ணீயை!

ராகு: அப்பா! கிட்டப் போக முடியேல்லை. வெக்கை!

(பலர் ஓடி வந்து தண்ணீர் ஊத்தி நெருப்பை அணைக்கும் சத்தங்கள்)

(பல குரல்கள்! தண்ணி! தண்ணி! ஊத்து ஊத்து! வேலிக்கு எத்து! வீட்டுக்கு எத்து! இதார் நெருப்பு வைச்சது?

சிவ : நாங்கள் தான்! ஊத்துங்கோ அண்ணை!

தங் : நாங்களும் தான்! தயவு செய்து நெருப்பை நூருங்கோ!

தியா : வேலிக்கு நெருப்பு வைச்சுட்டுக் கத்தூறியள்! என்ன?

தங் : ஐயோ தியாகராசா அண்ணை தண்ணீயை ஊத்துங்கோ!

சிவக் : உதுகளைப் பிறகு பேசுவம்! இப்ப தண்ணியை ஊத்துங்கோ!

சிவக் : எல்லாம் எரியப் போகுது! ஐயோ! ஐயோ!

ராகு: நெருப்பு தணியுது

(குரல்கள்)சரி நூத்தாச்சு! நூத்தாச்சு! வேலி தப்பீட்டுது! வீடு தப்பீட்டுது!

வேலி எரிஞ்சு போச்சு! வீடு தப்பீட்டுது!

நாங்கள் வாறம்!

சிவ : நீங்கள் எல்லாரும் வந்த தாலை தான், வீடு தப்பினது. எல்லாருக்கும் நன்றி!

தங் : என்ரை வீடும் தப்பீட்டுது. நாங்களும் எல்லாருக்கும் நன்றி சொல்லூறம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார் : வேலி முழுக்க எரிஞ்சு போச்சு!

சுஜீவன் : அம்மா குப்பையளும் எரிஞ்சு போச்சு!

சிவ : வேலி மரங்களும் எரிஞ்சு போச்சு!

தங் : சிவராசா அண்ணை, பக்கத்திலை நீண்ட பழ மரங்களும் எரிஞ்சு போச்சு!

சிவ : வீடு தப்பினதே போதும்! நன்றி! நன்றி!

தங் : என்ரை வீடும் தப்பீட்டுது நன்றி! நன்றி! எல்லாருக்கும் நன்றி!

சிவ : அப்பாடா! வீடு தப்பீட்டுது!

தங் : ஒரு வழியா நெருப்பை நூத்துட்டம்!

தியாகராசா : வேலியைக் கொழுத்தியிராட்டா, நெருப்பை நூக்கிற வேலையும் இருந்திராதே? (சிரிக்கிறார்)

சிவ : ஓம் தியாகராசா அண்ணை!

பார் : சும்மாவா? தண்ணி அள்ளி ஊத்தி.......

சிவக் : நாரி முறிஞ்சு போச்சு பார்வதி அக்கா! (பெருமூச்சு விடுகிறாள்)

ராகு : அம்மா நீ மட்டுமா? நானும் களைச்சுப் போனன்! கிணறும் வத்திப் போச்சு! (சிரிக்கிறான்)

தியா : ஊர்ச் சனம் முழுக்க வந்து தண்ணி அள்ளி ஊத்தினா, கிணறு வத்தாமல் என்ன செய்யும்? (சிரிக்கிறார்)

சிவ : நீங்களுமல்லோ அண்ணை களைச்சுப் போனியள்?

தியா : நான் மட்டுமா? வந்த சனமெல்லாம் களைச்சுப் போச்சு!.... என்ன நடந்தது சிவராசா?

சிவ : தியாகராசா அண்ணை, தங்கராசா தங்கடை வளவுக்குப் குப்பையளைக் கொண்டந்து வேலியடிலை போட்டுது! அப்ப நானும் எங்கடை குப்பையளை அள்ளிக் கொண்டு போய் எங்கடை பக்கத்திலை போட்டன்.

தியா : குப்பையளை ஏன் வேலியடிலை போட்டனீங்கள்? ரோட்டிலை போட்டிருக்கலாமே?

பார் : நான் சொன்னனான், நானே கொண்டு போய் ரோட்டிலை போடுறன் எண்டு. இவர் கேக்கேல்லை!

சிவக் : நானும் அப்பிடித் தான் சொன்னனான் அண்ணை, இவரும் கேக்கேல்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுஜீ : நானும் சொன்னனான்!

ராகு: நானும் சொன்னனான்!

தியா : குப்பையை வளவுக்கை குவிச்சா, கிருமியள் அல்லோ பரவும்?

ராகு : நுளம்பு பரவ முன்னம் குப்பை எரிஞ்சு போச்சு.

சுஜீ : இனி டெங்கு வராது! (சிரிக்கிறான்)

ராகு : நானும் சொன்னனான் என்ரை அப்பாவுக்கு!

தங் : சிவராசா தங்கடை பக்கத்துக் குப்பையை கொளுத்தி-விட்டுது! அப்ப நானும் எங்கடை பக்கத்துக் குப்பையை கொளுத்தினன்!

தியா : தங்கராசாவும் சிவக்கொளுத்துவும் கொளுத்திவிட அது கொளுந்து விட்டெரிஞ்சுது! இஞ்சாலை சிவராசாவும் பார்வதியும் கொளுத்திவிட, அது சொக்க பானையாய் எரிஞ்சுது!

சிவக் : நான் இல்லை அண்ணை!

பார் : நானும் எரிக்கேல்லை அண்ணை!

தியா : ரண்டு பேற்றை சண்டையாலை....

பார் : ரண்டு வீடுகளும் எரியப் பாத்துது!

தியா : ரண்டு வீடுகள் மட்டுமா? வேலீலை பிடிச்சு, கூரேலை பிடிச்சு, மரங்களிலை பிடிச்சு ஊர் முழுக்க எரிஞ்சிருக்கும்! இப்ப ஊர் முழுக்க வந்து நூத்திருக்கு! எல்லாரும் களைச்சுப் போச்சினம்!

சிவ : எல்லாத்துக்கும் ............. காரணம்!

தங் : சிவராசா தான் காரணம்!

தியா : சிவராசா! தங்கராசா! இப்ப நீதான், நீதான் எண்டு குற்றம் சாட்டிப் பயனில்லை. பிறகும் பகைமை வளரும்!

பார் : ஓம் அண்ணை! பகைதான் வளரும்!

சிவக் : நல்லாச் சொன்னியள் அண்ணை!

தியா : உங்கடை வீடுகள் தப்பீட்டுதுகளே எண்டு சந்தோஷப்படுங்கோ! நாங்கள் ஊர் தப்பீட்டுதே எண்டு சந்தோஷப் படுறம்! (சிரிக்கிறார்) நீங்கள் அயலுக்கை இருக்கிறவர்கள் ஒற்றுமையாய் இருக்க வேணும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ : நாங்கள் இனி ஒற்றுமையாய் இருக்கிறம் தியாகராசா அண்ணை!

தங் : நாங்கள் நல்ல பாடம் படிச்சுட்டம். இனி ஒற்றுமையாய் இருப்பம் தியாகராசா அண்ணை!

தியா : பகை, போட்டி பொறாமை, பேராசை தான் சண்டையளுக்குக் காரணம். அதுகளை விட்டா, சண்டை வாரது!

சிவ : நாங்கள் இனிமேல் ஒற்றுமையாய் இருக்கிறம் அண்ணை!

தங் : நாங்கள் அதுகளை விட்டுட்டு, ஒற்றுமையாய் இருக்கிறம் அண்ணை!

தியா : சரி சிவராசா தங்கராசா ரண்டு பேரும் கை குடுங்கோ பாப்பம்!

(சிவராசா தங்கராசா இருவரும் கைகொடுக்கிறார்கள்)

சிவ : சரி

தங் : சரி

சுஜீ : நாங்களும் கைகொடுப்பம் ராகுலன்

ராகு : சரி சுஜீவன் நாங்களும் கைகுடுப்பம்!

பார் : அப்ப நாங்களும் கை குடுப்பம், சிவக்கொழுந்து அக்கா.
(எல்லோரும் சிரிக்கிறார்கள்)

இலங்கை வானொலி 5.2.2011

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 30 நிமிட நவீன நாடகம்

# கடமையா? கவிதையா?

## பாத்திரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கவிஞர் கதிரேசர் | – | கணவன் |
| 2. | ரத்தினம் | – | மனைவி |
| 3. | ராஜினி | – | அவர்களது மகள் |
| 4. | ரவீந்திரன் | – | அவர்களது மகன் |
| 5. | தம்பர் | – | கல்யாணத் தரகர் |
| 6. | மாணிக்கம் | – | கதிரேசரின் நண்பன் |

நாடகம் நடக்கும் காலம் *சில மாதங்கள்*

### காட்சி – 1

**இடம் : யாழ்ப்பாணம் கதிரேசர் வீடு.**

ரத்தினம் : இஞ்சாருங்கோ, பிள்ளை ராஜனிக்கும் வயது 29 ஆச்சுது

கதிரேசர் : அதுக்கென்ன ரத்தினம்?

ரத் : கலியாணம் பேசிப் பொருத்த வேண்டாமே?

கதி : கலியாணம் பேசிக் கொண்டுதானே இருக்கிறன்?

ரத் : எங்கை பேசூறியள்? நீங்கள் உங்கபாட்டிலை திரியிறியள்!

கதி : ரத்தினம்! எத்தினை புறோக்கர் மாரிட்டைச் சொல்லி வைச்சிருக்கிறன். எத்தினை கலியாணங்கள் பேசீட்டன்!

ரத் : பேசி என்ன சுகம்? பொருத்தவல்லோ வேணும்?

கதி : பொருந்த ஆமானதா வரவேணுமே?

ரத் : எத்தினை நல்ல இடங்கள் வந்தது! நீங்கள் ஏதாவது நொட்டை சொல்லிச் சொல்லி குழப்பிப் போடுவியள்!

கதி : ஆக்கள், இடங்கள், உத்தியோகம் எல்லாம் பாக்கத்தானே வேணும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத் : இஞ்சாருங்கோ, எல்லாம் நூறு வீதம் சரிவராது. பிள்ளைக்கு வயது ஏறிக் கொண்டு போகுது. பொருந்தினாச் செய்ய வேண்டியதுதான்!

கதி : சரி, இனி வாறதை அப்பிடிச் செய்வம்!

ரத் : நெடுக உப்பிடித்தான் சொல்லிக் கொண்டு திரியிறியள்!

கதி : புறோக்கர்மார் ஆமானதாக் கொண்டந்தாலல்லோ?

ரத் : நீங்கள் கவிதை இயற்றிக் கொண்டு திரியிறியள். உப்பிடிப்பட்டவர் பிள்ளை பெத்திருக்கக் கூடாது! கவிதையே பாடிக் கொண்டு திரிஞ்சிருக்க வேணும்! (சிரிக்கிறாள்)

கதி : பேசுறன் தானே ரத்தினம்!

ரத் : (கோபமாக) கண்டறியாத கவிதை! உந்தக் கவிதையை விட்டுட்டுப் பிள்ளைக்குக் கலியாணத்தைப் பேசிப் பொருத்துங்கோ!

கதி : கவிதையை ஏளனமாகப் பேசுறாய்! உனக்குத் தெரியுமா, என்ரை கவிதேன்ரை அருமை?

ரத் : ஓ தெரியும். உள்ள கோயில்கள் எல்லாத்தின் மீதும் ஊஞ்சல் பாடி வைச்சிருக்கிறியள்! வானம், நிலவு, தென்றல். மரங்கள், மனிதர்கள்...

கதி : ஊஞ்சல் பாடினா, கோயில்களிலை பாடுவடுவங்களல்லா?

ரத் : கோயில்களை இவ்வளவு காலமும் ஊஞ்சல் பாடாமலா இருக்கிறாங்கள்? அவங்கள் அந்தப் பழைய ஊஞ்சல்களையே பாடுவங்கள்.

கதி : அதோடை என்ரை புது ஊஞ்சல்களையும் பாடுவங்கள்!

ரத் : அவங்கள் பாடட்டும். நீங்கள் கலியாணத்தைப் பேசுங்கோ?

கதி : ரத்தினம் அதோடை நான் தமிழ் கவிதையை வளர்க்கிறன்! தமிழை வளர்க்கிறன்!

ரத் : (ஏளனமாக) நீங்களோ? உங்கடை கவிதையாலையோ (சிரிக்கிறாள்)

கதி : ரத்தினம்! உனக்குக் கவிதையைப் பற்றித் தெரியாது! நீ அது பற்றிப் போசாதை!

ரத் : எனக்குக் கவிதை நல்லாத் தெரியும். சங்ககாலத்திலை இருந்து தெரியும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதி : அந்தக் காலக் கவிதை தெரியும். நான் இயற்றுற புதுக் கவிதை பற்றி உனக்கு ஒண்டும் தெரியாது!

ரத் : நல்லாத் தெரியும். உங்கினை பத்திரிகையளிலை வருது!

கதி : ரத்தினம் உனக்கு என்ரை, கவிதை பகிடியாய் இருக்கு! நான் தமிழ்க் கவிதையை வளர்க்கிறன். தமிழை வளர்க்கிறன்!

ரத் : தமிழ்க் கவிதையை ரண்டாயிரம் ஆண்டுகள் வளத்துட்டாங்கள் புலவர்கள். நீங்கள் கவிதை பாடேல்லை எண்டு ஒருத்தரும் அழேல்லை! இப்ப பெத்த பிள்ளைக்கு கலியாணம் செய்து வையுங்கோ!

கதி : பாத்துக் கொண்டுதான் இருக்கிறன்? நான் குடும்பத்தையும் பாப்பன், கவிதையையும் வளர்ப்பன்! ஒண்டையும் விடன்!

தரகர் தம்பு: (வந்து) ரண்டைத்தா ஒண்டை விடத்தான் வேணும். கதிரேசர் அண்ணை! (சிரிக்கிறார்)

கதி : ஓ தரகர் தம்புவே? வா, வா, இரு!

ரத் : தம்பு அண்ணை! உங்களைத் தான் எதிர்பார்த்துக் கொண்டு இருந்தனாங்கள்!

கதி : தம்பு, நான் கலியாணத்தையும் பொருத்துவன், கவிதையும் இயற்றுவன்! (சிரிக்கிறார்)

ரத் : எல்லாம் வாயாலை! இன்னும் பிள்ளைக்கு கலியாணம் பொருத்தேல்லையே!

கதி : நானே தேடிப் பிடிக்கிறது? தரகர்மார் கொண்டந்தாவல்லோ?

தம்: கதிரேசர் அண்ணை! எத்தினை கொண்டந்தன்? நீங்கள் தட்டிக் கழிச்சுப் போட்டியள்!

ரத்: நொட்டை சொல்லுவர்!

தம் : இப்ப ஒண்டு கொண்டந்திருக்கிறன்!

கதி : நல்ல இடமோ?

தம்: நல்ல இடம். பொடியன் என்ஜினியர்.

கதி : உள்நாடா? வெளிநாடா?

தம் : இலங்கேலை தான் வேலை!

கதி : ஆர் பகுதி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத் : தம்பு அண்ணை! பாத்தியளா? தொடங்கீட்டார். உப்பிடிப் பகுதி விகுதி பாத்தாக் கலியாணம் பொருந்தின மாதிரித் தான்!

கதி: சும்மா, அறியக் கேக்கிறன் ரத்தினம்.

தம்: எல்லாம் உங்களுக்குத் தோதான இடம்தான்!

கதி : சீதனம்?

தம் : இருபது லட்சம், சீதனம். ஐஞ்சு லட்சம் இனாம்!

கதி : அப்பாடா! கடும்பிடி!

ரத் : பேசாமல் இருங்கோ! தம்பி ரவீந்திரனல்லோ எவ்வளவானாலும் அனுப்பூறன் எண்டு எழுதியிருந்தவன். அனுப்புவன்!

கதி : இனாம் ஏனாம்?

தம் : சகோதரிமாருக்குக் குடுக்க.

கதி : பொறுப்புகளும் இருக்கா? பிறகு அவன் சீதனத்தையும் எடுத்துச் சகோதரியளுக்குக் குடுத்துடுவன்! உது சரிவராது!

தம் : இல்லை, இல்லை. அப்பிடி நடவாது! சீதனம் சீதனம்தான், இனாம் இனாம் தான்!

ரத் : இவரைப் போலை கவிதை பாடிக் கொண்டு திரியாமல், சகோதரிமாரையும் கவனிக்கிறவன், நல்ல பொடியனாத்-தான் இருப்பன். நீங்கள் பேசுங்கோ அண்ணை!

தம்: எனக்கு பத்து வீதம்

கதி : ரண்டரை லட்சம்!

தம் : ஓம். என்ரை மினைக்கேட்டுக்கு!

ரத் : சரி, நீங்கள் பொருத்துங்கோ!

கதி : எல்லாம் தம்பி ரவீந்திரன் அனுப்பினாத்தானே? அவனுக்கு எழுதூறன். அவன் சம்மதிச்சா, நானே வந்து சந்திக்கிறன்!

ரத் : உவர் சந்திக்க வரார். கவிதை பாடிக்கொண்டு போயிடுவர். நீங்கள் பொருத்திக் கொண்டு வாருங்கோ அண்ணை.

தம் : சரி வாறன்! கதிரேசர் அண்ணை! நீங்களும் கொஞ்ச நாளைக்கு கவிதையைக் குறைச்சு, கலியாணத்திலை கவனமாய் இருங்கோ! (தம்பர் போகிறார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத் : தம்பி ரவீந்திரன் எழுதினவன் தானே எவ்வளவு சீதணம் எண்டாலும் அனுப்புவன், தங்கச்சிக்கு கலியாணம் செய்து வையுங்கோ எண்டு.?

கதி : ஓ தெரியும்.

ரத் : பிறகு ஏன் தம்பருக்கு இழுத்தடிச்சனீங்கள்? தம்பி காசனுப்பினால் வாறம் எண்டு?

கதி : ரத்தினம் பெரிய தொகையல்லே? அவன் கைபடக் கடிதம் எழுதாமல், நாங்கள் எப்பிடி வாக்குக் குடுக்கிறது?

ரத் : அவன் அனுப்புவன்!

கதி : நீ ரவீந்திரனைக் கஷ்டப்படுத்துறது எண்டே நிக்கிறாய்!

ரத் : தங்கச்சியாருக்குக் கலியாணம் செய்து வைக்கிறது அவனுக்குக் கஷ்டமே? சந்தோசமல்லோ?

(ராஜினி வருகிறாள்)

ராஜனி : அம்மா! எனக்காக ஒருத்தரும் கஷ்டப்பட வேண்டாம்?

கதி : ஆர் கஷ்டப்படுறது?

ராஜ : அப்பா, இப்ப சொன்னியள் தங்கச்சிக்காக கஷ்டப்படுறது எண்டு?

கதி : பிள்ளைக்குக் கலியாணம் செய்து வைக்க வேண்டியது எங்களுடைய கடமை. இதிலை என்ன கஷ்டம்?

ராஜ : எனக்கு ஒருத்தரும் கலியாணம் செய்து வைக்க வேண்டாம். நான் இப்பிடியே இருப்பன்!

ரத் : என்னெண்டு இருப்பாய்?

ராஜ : நான், ஆசிரியையாக வேலை பாக்கிறன். சொந்தக் காலிலை நிப்பன்!

ரத் : ஆசிரியராக வேலை பாத்தா, கட்டக்கூடாதே?

கதி : எவ்வளவு காலம் எண்டு இருப்பாய்? நாங்கள் செத்தா?

ராஜி : உழைப்பு இருக்கு. நான் இருப்பன்.

ரத் : ஒரு பொம்பிளை தனிய சீவிக்க முடியுமே? அதிலை அர்த்தமும் இல்லை!

ராஜி : எனக்காக நீங்கள் கஷ்டப்படாதேங்கோ! அதெல்லாம் நான் இருப்பன்!

கதி : நீ பேசாதை பிள்ளை. அதெல்லாம் நாங்கள் செய்து வைப்பம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத் : நீங்கள் இதுவரேலை செய்து வைச்சிருத்தா, அவள் இப்பிடிக் கதைக்க மாட்டாள்!

ராஜி: அப்பாவைக் குறை சொல்லாதை அம்மா!

ரத் : ராஜி! அல்லது எங்காயாலும் காதல், கீதல்லை விழுந்துட்டியோ?

ராஜி : எனக்கொரு காதலும்மில்லை! உங்களைக் கஷ்டப்படாமல் இருக்கச் சொல்லூறன்!

ரத் : பிள்ளை ராஜினி! அது எங்கடை கடமை. அதை நாங்கள் வடிவா நிறைவேற்றுவம்! நீ பேசாமல் இரு!

**காட்சி – உ**

**இடம் : யாழ்ப்பாணம் கதிரேசர் வீடு.**

(தரகர் வருகிறார்)

தம்பு : கதிரேசர் அண்ணை!

ரத் : ஆர் தம்பர் அண்ணையே, வாருங்கோ, இருங்கோ!

தம் : நீங்கள் வராயள். நானே வாறமெண்டன்; வந்துட்டன்! (சிரிக்கிறார்)

ரத் : என்னண்ணை விசேசம்?

தம் : நீங்கள்தானே சொல்லவேணும் கதிரேசர் அண்ணை, என்ரை கோரிக்கைக்குச் சம்மதமோ?

கதி : ஓம் தம்பர் நாங்கள் சம்மதம்.

ரத் : தம்பிக்கு எழுதி அவனும் காசு அனுப்பூறன் எண்டு எழுதீட்டான்!

தம் : ஒரு சின்ன பிரச்சினை!

கதி : என்ன பிரச்சினை?

தம் : காசை முப்பது லட்சம் தரவேணும். 25 சீதனம். 5 இனாம்.

கதி : உது சின்னப் பிரச்சினையா? (சிரித்து) உதைத்தான் சொல்லூறது பேராசை எண்டு!

தம் : கதிரேசர் அண்ணை இதெல்லாம் கலியாணப் பேச்சிலை சர்வசாதாரணம்!

கதி : அது சர்வசாததரணமாயிருக்கலாம். எங்களாலை தர முடியாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் : தம்பிக்கு எழுதுங்கோவன்!

கதி : தம்பி ரவீந்திரனுக்கு எழுதி அவன் அனுப்பூறன் எண்டு எழுதீட்டான். இனி மாத்தி எழுதூறதா?
எத்தினை முறை எண்டு எழுதூறது?

தம் : கலியாணம் ஒப்பேற வேணுமெண்டா எத்தினை முறையும் எழுதலாம்! (சிரிக்கிறார்)

கதி : உப்பிடி மூளை மாறூற ஆக்களோடை பெரிய கரைச்சல். இண்டைக்கு ஒரு கதை, நாளைக்கு ஒரு கதை!

தம் : அப்பிடியெண்டா விடுங்கோ. உங்கை எத்தினை பகுதி கேட்டுக் கொண்டு நிக்குது!

கதி : (கோபமாக) நாங்கள் செய்யேல்லை. நீங்கள் போய் பேசிச் செய்யுங்கோ!

ரத் : பொறுங்கோ! முறிக்காதேங்கோ!

கதி : வேண்டாம். உப்பிடிப் பேச்சு மாறூற ஆக்களோடை சம்பந்தம் வேண்டாம்!

தம் : கதிரேசர் அண்ணை கோபிக்கிறார்!

கதி : வேறை என்ன செய்யிறது தம்பு? இப்ப கோபியாட்டா, வாழ்க்கை முழுக்க கோபிச்சு சண்டை பிடிக்க வேண்டி வரும்!

தம் : சரி அண்ணை நான் வாறன்.

ரத் : தம்பு அண்ணை! அதெல்லாம் சரிப்பண்ணலாம். பொறுங்கோ!

தம் : சரி நான் வாறன்! (போகிறார்)

ரத் : ஏன் முறிச்சனீங்கள்? கன நாளைக்கு பிறகு ஒண்டு வந்தது பொருந்தினது. அதையும் பிடிச்சு முறிச்சிட்டியள்.

கதி : ரத்தினம்! நானே முறிச்சது? அவனல்லோ? நேரம் ஒரு கதை பேசினா உது சரிவராது!

ரத் : ரோசம் பாத்தா, கலியாணம் பொருந்தாது!

கதி : பொருந்தாட்டா, பொருந்தின இடத்திலை செய்வம்.

ரத் : நீங்கள்தான் ஒரு இடமும் பொருந்த விடாயளே! வேணுமெண்டு குழப்பினீங்கள்.

ராஜ : அம்மா! அப்பாவைக் குறை சொல்லாதை! அவர் செய்தது சரி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத் : என்ன கலியாணத்தைக் குழப்பினதோ?

ரா : அம்மா, உவை வாழ்க்கை முழுக்க உப்பிடித்தானே கேட்டுக் கொண்டிருப்பினம்?

ரத் : பிள்ளை ராஜினி. சீதனம் தந்தா, உன்ரை காசு உன்னிட்டைத் தானே இருக்கும்? கலியாணம் முடிஞ்சு போனா, பிறகு ஏன் கேக்கிறாங்கள்?

ராஜ : இப்ப நீங்கள் இருக்கேக்கை கேட்டா, குடுப்பியள். பிறகு என்னைத் தனிய வைச்சு வெருட்டினா, நான் என்ன செய்வன்?

ரத் : அப்பிடிக் கேளாயினமடி பிள்ளை. நீ பேசாமல் இரு. நாங்கள் பாத்துச் செய்து வைப்பம்!

ராஜ : அம்மா. எனக்கு உந்தக் கலியாணம் வேண்டாம். வேறை கலியாணம் பேசுங்கோ!

கதி : பாத்தியே ரத்தினம், ராஜி சொல்லுறதை!

ரத் : தகப்பனும் மகளும் ஒரு பக்கம்!

## காட்சி – ௩

### இடம் : யாழ்ப்பாணம் கதிரேசர் வீடு.

(சைக்கிள் மணிச்சத்தம்)

கதி : சைக்கிள் மணி அடிக்கிறாங்கள். கடிதமாக்கும், போய் வாங்கியாறன். (போய் வருகிறார்)

ரத் : ஆர் தம்பி ரவீந்திரனே?

கதி : வேறை ஆர்? வாசிக்கிறன் கேள். (ரவீந்திரனது குரலில் கடிதம் வாசிக்கப்படுகிறது)

அன்புள்ள அப்பா, அம்மா, நான் நல்ல சுகமா இருக்கிறேன். அது போல உங்களது சுகத்தையும் இறைவன் காப்பாற்றுவாராக. நான் தங்கச்சி ராஜினிக்குக் கலியாணம் செய்து வைக்கும்படி நீண்ட காலமாக எழுதி வருகிறேன். நீங்கள் அசையவில்லை!

ரத் : ஆர் அசையேல்லை? நீங்கள் தான் அசையேல்லை!

கதி : இடேலை குழப்பாதை ரத்தினம்! (கடிதம்) சீதனம் எவ்வளவானாலும் தரலாம் என்று எழுதியிருந்தேன். பிறகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன தடை? நீங்கள் உசாராகப் பேசவில்லை. அப்பா, கவிதை இலக்கியம் என்று திரியிறாராக்கும். தங்கச்சிக்கு கலியாணம் செய்து வைத்து விட்டுக் கவிதை எழுதலாம் தானே!

ரத்: பாத்தியளே! நான் சொல்லூறதைத்தான் ரவீந்திரனும் எழுதியிருக்கிறான்!

கதி : பொறு! பொறு! (கடிதம்) ராஜிக்கும் வயது முப்பதாகிறது. இப்ப செய்து வைக்காவிட்டால், பிறகு செய்யவே முடியாது! நானே வந்து பேசுவேன்! எனக்கு வந்து நிற்க நேரமில்லை. வேலை. உழைக்க வேணும்!

ரத் : ஏன் அவன் வருவான்? நாங்கள் இஞ்சை சும்மா இருக்கிறனாங்கள் பேசுவம்

கதி : வாசிக்கிறன். (கடிதம்) விரைவில் ஒரு கலியாணத்தைப் பொருத்தவும். கலியாண வீட்டிற்கு வருகிறேன். உங்கே கலியாணம் பொருந்தாவிட்டால், ராஜியை இங்கே கனடாவுக்கு அனுப்பலாம். நான் இங்கே பாத்துப் பேசி வைப்பேன்.

நீங்களும் தான் ஏன் உங்கே இருக்கிறீர்கள்? தங்கச்சியை இங்கே அனுப்பி விட்டால் அவளுடன் நீங்களும் கனடா வரலாம். உங்களையும் இங்கே அழைக்க அனுமதி தருவார்கள். உங்களுக்கு ஒன்று நடந்தால் எல்லோருக்கும் மனவருத்தம் தானே?

கதி : ரத்தினம்! என்ன எழுதூறது?

ரத் : இனிக் கவிதை எழுத மாட்டன். கலியாணத்தைப் பேசிப் பொருத்தூறன் எண்டு எழுதுங்கோ!

கதி : சும்மா பகிடி விடாமல் சொல்லு பாப்பம்!

ரத் : என்ன பகிடி? அது தானே உள்ளது? தம்பியே சுட்டிக் காட்டியிருக்கிறான்!

கதி : என்னைக் கனடாவுக்கு வரட்டாம். அங்கை போய், அந்தக் குளிருக்கை குந்திக் கொண்டிருக்கவோ? (சிரிக்கிறார்)

ரத் : என்னாலும் குளிர்தாங்கேலாது. நானும் போகேல்லை!

கதி : அங்கை அறேக்கை குந்திக்கொண்டிருக்க வேணும். இஞ்சை உலாவி நாலுபேரோடை பேசலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத் : உங்களுக்கு உங்கடை கவிதை இருக்கு! எல்லாம் அங்கை போனாவல்லோ? உந்தக் கதையை விடுவம்!

கதி : முதல்லை பிள்ளை சம்மதிக்க வேணுமே?

ராஜி : (வந்து) அப்பா! நான் கனடாவுக்குப் போகேல்லை!

ரத் : ஏன் பிள்ளை?

ராஜி : அம்மா நான் இஞ்சை ஒரு ஆசிரியையாக இருக்கிறன். அங்கை போய்ச் சும்மா இருக்க வேணும்!

ரத் : உப்பிடிக் கனபேர் போட்டாளவை. உத்தியோகத்தையும் விட்டுவிட்டு.

ராஜி : அவளவை போனா நானும் போகவேணுமா? ஆசிரியர் வேலை ஒரு சேவை!

ரத் : அங்கை போனா குடும்பமாய் வாழலாம்.

ராஜி : குடும்பமாய் வாழுறது மட்டும்தானா வாழ்க்கை?

கதி : வேண்டாம் பிள்ளை நீ அங்கை போக வேண்டாம்!

ரத் : வாச்சுப் போச்சு. கவிதையை விட்டுட்டு கலியாணத்தைப் பொருத்துங்கோ! அங்கை போக வேண்டிவராது!

கதி : ரத்தினம் நான் கவிதையும் எழுதுவன், கலியாணமும் பொருத்துவன்! (சிரிக்கிறார்)

ரத் : ஆனா ஒண்டும் நடக்கேல்லை!

ராஜி : அம்மா, அப்பாவை நெருக்காதை! அவர் ஆறதலாப் பேசட்டும்!

ரத் : பிள்ளை ராஜி! ஆறுதலாப் பேசினா வயது ஏறீடும். பிறகு கலியாணம் பொருத்தூறது கஷ்டம்!

**காட்சி – 4**

**இடம் : யாழ்ப்பாணம் கதிரேசர் வீடு.**

(ரவீந்திரன் பிரயாணப் பெட்டிகளுடன் வருகிறான்)

ரவீந்திரன் : அப்பா!

கதி : நிமிர்ந்து பார்த்து வியப்புடன் ஓ ரவீந்திரன்! எப்ப வந்தனி!

ரவீ : இப்பதான் வாறன் அப்பா!

கதி : இரு! இரு (இருவரும் இருந்த பின்பு) என்ன இருந்தாப் போலை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவீ : ஏனப்பா வரப்படாதோ? (சிரிக்கிறான்) உங்கள் எல்லாரையும் ஒருக்காப் பாப்பம் எண்டு வந்தனான்.

கதி : உவ்வளவு காசு சிலவளிச்சு... நல்லா ஊதிப் பருத்து........

ரவீ : கனடா சுவாத்தியம் சாப்பாடு.......... (ரத்தினம் வருகிறாள்)

ரவீ : அம்மா!

ரத் : ரவீந்திரன்! என்ரை பிள்ளை (கட்டித் தழுவுகிறாள்) பத்து வரியத்திப் பிறகு! நான் இனிச் சீவியத்திலை உன்னைக் காணுவன் எண்டே நினைச்சிருக்கேல்லை!

ரவீ : அது தானம்மா நானும் வந்தனான், உங்களைப் பாக்க!

ரத் : நல்லா ஊதிப் பருத்துட்டாய்!

ரவீ : அப்பா, அம்மா ரண்டு பேரும்நல்லா மெலிஞ்சுட்டியள்!

ரத் : வயதல்லேடா தம்பி!
(ராஜினி வருகிறாள்)

ராஜி : அண்ணை!

ரவீ : தங்கச்சி! ராஜி கொஞ்சம் ஊதி மினுமினுப்பாய் இருக்கிறாள்!

ராஜி : நீயும் பருத்திருக்கிறாய். எல்லாம் வயது தானண்ணை! என்னண்ணை திடீரெண்டு? கடிதம் கூடப் போடேல்லை?

ரவீ : போடத் தேவையில்லை தங்கச்சி! ஆக்களைச் சந்திச்சாச் சரி! (சிரிக்கிறான்)

ரத் : இஞ்சை பார் வந்த பிள்ளையைச் சாப்பிடு, களையாறு எண்டு சொல்லாமல் கதைச்சுக் கொண்டு நிக்கிறம்!

ரவீ : வேண்டாம் அம்மா. எனக்கு ஒரு களையும் இல்லை. உங்களோடை பேசத்தானே வந்தனான்? பேசுவம். களை போச்சு?

கதி : உதுகளைப் பிறகு பேசலாமல்லே?

ரவீ : பேசவேண்டியதுகளை இப்பவே பேசீட்டா, முடிவு எடுக்கிறது சுகம்!

கதி : சரி என்ன பேசப் பேறாய் சொல்லு!

ரவீ : தங்கச்சிக்கு ஏன் கலியாணம் செய்து வைக்கேல்லை?

ராஜி : அண்ணை உதை விட்டுட்டு வேறை ஏதும் பேசு.

ரவீ : தங்கச்சி பேச வேண்டிதைத்தான் பேசவேணும். நானும் இதுக்கெண்டுதானே வந்தனான்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத் : கொப்பரல்லோ பேசிப் பொருத்த வேணும்?

கதி : நான் பேசுறன். பொருத்தினாத் தானே?

ரத் : நீங்கள் எங்கை பேசூறியள்? கவிதை பாடிக் கொண்டு திரியிறியள்!

ரவீ : நான் வந்தது, கலியாணத்தைப் பேசிப் பொருத்த, அல்லது தங்கச்சியைக் கனடாவுக்குக் கூட்டீட்டுப் போக.

ராஜி : அண்ணை! நான் கனடாவுக்கு வரேல்லை!

ரவீ : ஏன் ராஜி?

ராஜி : நான் ஒரு வாத்தி. இஞ்சை பிள்ளையளுக்குப் படிப்பிக்கிறன். அங்கை வந்து சும்மா இருக்கட்டா? பொம்மை மாதிரி.

ரவீ : கலியாணம் செய்து குடித்தனமாக வாழலாம்!

கதி : அங்கை பேசி வைச்சுட்டா வந்தனி?

ரவீ : இல்லை அப்பா, பொருத்தலாம். அங்கை மாப்பிளையள் இருக்கு!

ராஜி : முன் பின் தெரியாத மாப்பிளையள். அதுகளும் நிட்சயமில்லை. நான் வரேல்லை! உந்தக் கதையை விட்டுட்டு வேறை ஏதும் பேசண்ணை.

ரவீ : தங்கச்சி! இஞ்சை பொருத்தினாச் செய்வியோ?

ராஜி : ஓம் அண்ணை. இஞ்சை பொருத்தினா செய்யிறன்.

ரவீ : சரி, அப்ப நான் பேசிப் பொருத்தூறன்!

கதி : நீ வேலையை விட்டுட்டுக் கலியாணம் பேசிப் பொருத்திக் கொண்டு நிக்கப் போறியோ?

ரவீ : கெதியாப் பேசிப் பொருத்தீட்டுப் போறனப்பா.

கதி : தம்பி! கலியாணம் பொருத்தூறது இலகுவான காரியமில்லை.

ரத் : உங்களைப் பேலை கவிதை பாடாமல் பேசினா, பொருத்தீடலாம். (சிரிக்கிறாள்)

ரவீ : முயன்று பாப்பம்! இதுக்கெண்டு தானே வந்தனான்! (சிரிக்கிறான்) ராஜி வந்துட்டா நீங்களும் தான் ஏன் இஞ்சை இருக்கிறியள். நீங்களும் வாருங்கோவன் கனடாவுக்கு. தனிய இருக்கிறம் எண்டு சொன்னா அனுமதி தருவங்கள்!

கதி : தம்பி ரவீந்திரன் உந்தக் கேள்வியை மட்டும் கேளாதை! நான் வரன் கனடாவுக்கு. அந்தக் குளிரை என்னாலை தாங்கேலாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத் : என்னாலும் குளிர் தாங்கேலாது.

கதி : இஞ்சை ஊர் முழுக்க உலாவித் திரியலாம். நாலு மனிசரோடை பேசலாம். அங்கை வந்து அறேக்கை அடைஞ்சு கிடக்க வேணும். பேசவும் ஆக்களில்லை!

ரவீ : அப்பாவும அம்மாவும் நீங்களே ஆளோடை ஆள் பேசிக் கொண்டிருங்கோவன்.

ரத் : தம்பி, கொப்பர் வந்தா நானும் வருவன்!

ரவீ : அப்பிடியா அம்மா? எல்லாம் அப்பாவிலைதான் தங்கியிருக்கு!

கதி : தம்பி! எனக்குக் கவிதை கற்பனை சுரந்து கொண்டிருக்கும். நான் கவிதை பாடவேணும். என்னாலை பாடாமல் இருக்க முடியாது.

ரவீ : அங்கையிருந்து பாடுங்கோவன்!

கதி : இஞ்சை எண்டா? என்னை நாலுபேருக்குத் தெரியும். கவிஞர் கதிரேசர் எண்டு பாராட்டுவங்கள். அங்கை நான் இருக்கிறன் எண்டும் தெரியாது!

ரவி : அப்பா! உங்களுக்கு இஞ்சை பேர் இருக்கு தானே?

கதி : ஓ! அழைக்கிறாங்கள் கவிஞர் கதிரேசர் எண்டு!

ரவி : அவ்வளவும் போதும் தானே? நீங்கள் அங்கை வந்தாலும் இஞ்சை சொல்லிக் கொண்டு இருப்பங்கள் தானே கவிஞர் கதிரேசர் எண்டு?

ராஜி : அண்ணை! எதுக்கும் நான் வந்தாத்தானே? நான் வரன். ஏன் அப்பாவையும் அம்மாவையும் வீணா நெருக்கூறாய்?

ரவீ : இப்ப ஏன் உடனடியாத் தீர்மானிப்பான்? நான் ஊரிலை பேசூறன். பொருந்தாட்டா, பிறகு யோச்சுச் செய்வம்?

**காட்சி – 5**

**இடம் : யாழ்ப்பாணம் மாணிக்கம் வீடு.**

ரவீந்திரன் : (வந்து) மாணிக்கம் மாமா!

மாணிக்கம் : ஓ தம்பி ரவீந்திரன். கனகாலத்திப் பிறகு....?

ரவீ : பத்து வரியம் மாமா. நேற்றுதான் வந்தனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணி : ஏது திடீரெண்டு...?

ரவீ : கனடா போய் கனகாலம் எண்டு வந்தனான். ஒருக்கா எல்லாரையும் பாத்துட்டுப் போவம் எண்டு வந்தனான்.

மாணி : நல்லாய் ஊதிப் பருத்தட்டாய் தம்பி.

ரவீ : அங்கத்தையில் சுவாத்தியம் சாப்பாடு......... நீங்கள் நல்லா மெலிஞ்சு போறியள் மாமா.

மாணி : வயதல்லே தம்பி? என்னிட்டை வந்த நோக்கம்......?

ரவீ : மாணிக்கம் மாமா, நீங்கள் எனக்கு ஒரு சின்ன உதவி செய்து தரவேணும்?

மாணி : சொல்லும் தம்பி. உமக்கில்லாத உதவியா?

ரவீ : தங்கச்சி ராஜினிக்குக் கலியாணம் செய்து வைக்க வேணும். அப்பா அம்மாவுக்கு எழுதி மூதி களைச்சுப் போனன். அவையாலை பொருத்த முடியேல்லை. நான் ராஜனியையே கனடாவுக்கு கூட்டீட்டுப் போகப் பாக்கிறன்.

மணி : அங்கை போனாப் பொருத்தலாமோ?

ரவீ : இஞ்சை முடியேல்லை. அங்கை போய்ப் பாப்பம். தங்கச்சி வர மாட்டாளாம்.

மாணி : அவ ரீச்சரல்லா? அது தான்.

ரவீ : அப்பா வந்தா, வருவள். அவர் வராராம். இஞ்சை கவிதை பாடவேணுமாம் (சிரித்து) அப்பா வந்தா, அம்மாவும் வருவ. அப்ப தங்கச்சியையும் கூட்டீட்டுப் போயிடலாம்.

மாணி : கதிரேசர் எப்பவும் கவிதைதான் பாடிக்கொண்டு திரியிறார்! (சிரிக்கிறார்)

ரவீ : என்ன கவிதை இயற்றுறார்?

மாணி : என்னவோ புளுகுவர். நான் ஆமோ எண்டு கேப்பன்.

ரவீ : பேப்பரிலை வாறதில்லையா?

மணி : சிலவேளை வரும். நான் பாக்கிறதில்லை! எல்லாக் கோயில்களிலும் ஊஞ்சல் பாடி வைச்சிருக்கிறார். உத்தியோகத்திலை இருந்து ஓய்வு பெறுகிறவைக்கும் பெரியாக்களுக்கும் சேவை நயப்பு பாடுவர். சிலருக்குக் கல்வெட்டு பாடுவர்.

ரவீ : உதுகள் தானா? (சிரிக்கிறான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணி : கேட்டா மறுக்க முடியுமோ? வந்து கேப்பங்கள். பாடிக்குடுப்பார்! அதோடை சூரியன், சந்திரன், மலை ஆறு பூமி எண்டு... (சிரிக்கிறார்)

ரவீ : பூமீலை இருக்கிற நாங்கள் பூமியைப் பாடாமல் வேறை எதைப் பாடுறது! (சிரிப்பு)

மாணி : தம்பி ரவீந்திரன் உதிலை நான் என்ன செய்யலாம்?

ரவீ : அப்பாதான் எல்லாத்தையும் குழப்பூறார். தங்கச்சிக்குக் கலியாணம் கட்டி வைக்காததும் அவற்றை பிழைதான்! மாணிக்கம் மாமா. நீங்கள் அவற்றை சினேகிதன் தானே? ஏதாவது சொல்லி அவற்றை மனதை மாற்ற வேணும்?

மாணி : கதிரேசர் என்ரை சினேகிதன் தான். ஆனா இந் விடயத்திலை நர்ன் சொல்லூறதைக் கேக்கிறாரோ என்னவோ?

ரவீ : சொல்லிப்பாருங்கோ! வேறை வழி தெரியேல்லை!

மாணி : முதல் கதிரேசர் கவிதை பாடுகிறதைக் கைவிடச் சம்மதிக்க வேணும்.

ரவீ : சொல்லிப் பாருங்கோ மாமா. எங்களுடைய குடும்பத்துக்காக இந்த உதவியை செய்து தாருங்கோ!

மாணி : சரி தம்பி ரவீந்திரன். முயன்று பாக்கிறன்!

**காட்சி - [illegible]**

**இடம் : யாழ்ப்பாணம் மாணிக்கம் வீடு.**

(கதிரேசகர் வருகிறார்)

மாணி : வா வா கவிஞர் கதிரேசர்! வா இரு!

கதி :- என்ன மாணிக்கம்? ஏன் அவசரமா அழைச்சனி?

மாணி : கதிரேசர்! நண்பன் எண்ட முறேலை உன்னோடை ஒரு விஷயம் பேச வேணும்.

கதி : சரி பேசு! பேசு!

மாணி: மகன் ரவீந்திரன் வந்து நிக்கிறான்.

கதி : ஓ, கனநாள் வரேல்லை எண்டு வந்தவன்.

மாணி : தங்கச்சியாரை கனடாவுக்குக்கூட்டீட்டுப் போப் போறானாம் கலியாணம் செய்து வைக்க!

கதி : எண்டுதான் சொல்லூறான்.

மாணி : நீ பெட்டைக்கு ஒரு கலியாணத்தைப் பேசிப் பொருத்தியிருந்தா, மகன் வந்திரானே? பாவம் அவனை உலைச்சுப் போட்டாய், காசுகளையும் சிலவழிச்சு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதி : நான் பேசிக் கொண்டு தானே இருக்கிறன். அது பொருத்தா-தாம். கலியாணம் எண்டாச் சும்மாவா மாணிக்கம்?

மாணி : நீ தீவிரமாப் பேசியிருந்தாப் பொருந்தியிருக்கும். உனக்குக் கவிதை பாடுற கவலை! (சிரிக்கிறார்)

கதி : இல்லை மாணிக்கம். நான் தீவிரமாகத்தான் பேசுறன்.

மாணி : சரி, இனியாவது உதை நிப்பாட்டிட்டு பிள்ளைக்கு ஒரு கலியாணத்தைப் பேசிப் பொருத்து!

கதி : என்ன கவிதையை விடவோ? இவ்வளவு காலமும் பாடிட்டு இனி விடவோ?

மாணி : இவ்வளவு காலமும் பாடிப் பாடி என்னத்தைக கண்டாய்?

கதி : ஊர் உலகத்திலை ஒரு பேர் இருக்குதானே, கவிஞர் கதிரேசர் எண்டு?

மாணி : எங்கை? நான் கேள்விப் படேல்லை! (சிரிக்கிறார்)

கதி : நீ என்ரை கவிதையளையும் வாசிக்கிறதில்லை. அதுகளுக்குக் கிடைக்கிற பாராட்டுகளையும் கேட்கிறதில்லை! உனக்கு என்னிலை பொறாமை!

மாணி : சரி அப்பிடியே இருக்கட்டும். இவ்வளவு பேரும் புகழும் போதாதா உனக்கு?

கதி : இன்னும் நிறைய எழுத வேணும். எழுதி என்ரை பேரை நிலைநாட்ட வேணும். கவிஞர் கதிரேசர் எண்டு. வரும் காலம் என்னைப் பாராட்ட வேணும்!

மாணி : இப்பவே பாராட்டாதவங்கள் வருங்காலத்திலையா பாராட்டப் போறாங்கள்? (சிரிக்கிறார்)

கதி : பாரதியை அவன் வாழ்ந்து கொண்டு இருக்கேக்கை ஒருத்தரும் பாராட்டேல்லை. இப்ப எல்லாரும் பாராட்டுறாங்கள்!

மாணி : நீ பாரதியா? (சிரித்து) இண்டைக்கு ஆயிரம் பேர் கவிதை எழுதுறான். அவங்களும் சாக, அவங்களை எல்லாரும் மறந்துடுவங்கள்!

கதி : அப்ப என்ன கவிதை இயற்றுறது கூடாது எண்டு சொல்லுறியா?

மாணி : கவிதை இயற்றுறது நல்லது. கவிதையை விடக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையைச் செய்யிறது நல்லது எண்டு சொல்லூறன்! கதிரேசர்! நீ பேர் புகழுக்காகத்தானே கவிதை இயற்றூறாய்?

கதி : இல்லை தமிழிலை கவிதைக் கலையை வளர்க்க!

மாணி : தமிழ் மொழீலை இரண்டாயிரம் அண்டுக் கவிதை இருக்கு! நீ கவிதை இயற்றேல்லை எண்டு ஒருத்தரும் அழேல்லை! இதைவிட உன்ரை மகளுக்குக் கலியாணம் செய்து வைக்கிறது முக்கியம்! மகளுக்குக் கலியாணம் செய்து வைக்காமல் நீ செத்தா? உனக்கு வசை! புகழுக்குப் பதில் உனக்கு வசை தான் மிஞ்சம்!

கதி : (ஏங்கி) வசையா? அப்பிடியா?

மாணி : நீ கலியாணத்தைச் செய்துவை. இல்லாட்டா மகனோடை சேந்து கனடா போ. அவன் செய்து வைப்பன்!

கதி : (சிரித்து) யோசிக்க வேண்டிய விடயம்தான்!

மாணி : யோசிச்சுக் கொண்டு நல்லாதை! செயலிலை இறங்கு. இது தான் நண்பன் எண்ட முறேலை நான் உனக்குச் சொல்லூற புத்திமதி! போ! ஓடு! ஓடு!

**காட்சி – 7**

**இடம் : யாழ்ப்பாணம் கதிரேசர் வீடு.**

கதி : தம்பி ரவீந்திரன் நானும் வாறன் கனடாவுக்கு

ரவீ : (வியப்புடன்) வாறியளா, அப்பா கனடாவுக்கு? நம்ப முடியாமலிருக்கே!

கதி : பிள்ளைக்குக் கலியாணம் செய்து வைக்க வேணும்.

ரவீ : சந்தோஷம் அப்பா. நான் வந்தது வீண் போகேல்லை.

ரத் : (வந்து) போகப் போறியா கனடாவுக்கு? உண்மையாகவா?

கதி : உண்மை தான் ரத்தினம். போவம்!

ரத் : மழை பெய்யப் போகுது! (சிரிக்கிறாள்)

ரவீ : அம்மா கனடாவிலை சோனா வாரியா மழை பெய்யும்! (சிரிக்கிறான்)

ரத் : இப்பதான் உங்களுக்குப் புத்தி வந்திருக்கு. எனக்கு முந்தியே வந்துட்டுது! பெண் புத்தி பின்புத்தி எண்ணூறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு முந்தியே வந்துட்டுது புத்தி!

ரவீ : அம்மாவுக்கு முன் புத்தி! (சிரிக்கிறான்)

ரத் : நீங்க போனா நானும் வாறன் கனடாவுக்கு!

ராஜி : (வந்து) அம்மா! நான் வரன் கனடாவுக்கு. நீங்கள் தான் போக வேணும்.

கதி : இதென்ன பிள்ளை பெரிய குண்டாத் தூக்கிப் போடுறாய்? உனக்காகத்தானே நாங்கள் போகத் தீர்மானிச்சனாங்கள்.?

ரத் : பிள்ளை ராஜி! இஞ்சை தனிய இருந்து என்ன செய்யப் போறாய்?

ரவீ : தங்கச்சி! அப்பா தன்ரை ஆசையான கவிதையையே விட்டுட்டு வாறாராம்! நீயும் வா!

ராஜி : சரி உங்களுக்காக வாறன்!

கதி : நாங்கள் உனங்காக வர, நீ எங்களுக்காக வாறாய்! (சிரிக்கிறார்)

ராஜி : அப்பாவின்ரை கவிதையை என்ன செய்யிறது?

கதி : அது இவ்வளவு காலமும் எழுதினது போதும் பிள்ளை!

ரவீ : அங்கை வந்தும் எழுதலாம் தானே அப்பா?

கதி : இஞ்சை எழுதினாப் பேப்பருக்குக் குடுக்கலாம். ஆரும் வாசிப்பன். அங்கை வந்து எழுதி என்ன செய்யிறது?

ரவீ : எல்லாத்தையும் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிடுங்கோ அப்பா. நான் காசு தாறன்!

கதி : பத்தகத்தை ஆருக்கு விக்கிறது? அதுக்கு, பிறகு இலங்கைக்குத்தான் வரவேணும்!

ரவீ : சரி வருவம்!

கதி : வேண்டாம் தம்பி. எழுதினது போதும். கனடா போய் பிள்ளைக்கு ஒரு கலியாணத்தைச் செய்து வைப்பம்! கவிதையைவிட கடமைதான் முக்கியம்!

ரவீ : நான் ஆயத்தங்கள் செய்யிறன்.

இலங்கை வானொலி 04.06.2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

# ஒரு நாடகாசிரியரின் கதை

நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழா தொடங்கி விட்டால், இளம் வயதில் கோவிலே கதி என்று கிடப்பேன். ஒவ்வொரு நாளும் நண்பர்களுடன் போவேன்.

கோவில் திருவிழா ஆறு மணிக்கு முடிந்துவிடும். நாங்கள் கடை கடையாகப் போய், மனிதர்களைச் சந்தித்துக் கதை பேசி சிரித்து, காட்சிகள் பார்த்து வீடு திரும்ப இரவு பத்து மணியாகிவிடும்.

இப்பொழுதெல்லாம் நான் நல்லூர் கந்தனிடம் அதிகம் போவதில்லை. கூடிக் கொண்டு போய் வர நண்பர்கள் இல்லை. சரியான சன நெருக்கடி. வயசான காலத்தில் சனத்துக்கை போனால் என்ன நடக்குமோ என்ற பயம் ஒரு பக்கம்.

கோவிலுக்குப் போய்த்தான் தெய்வத்தை வணங்க வேண்டுமா, நினைப்பவர் மனமே கோவிலாய் கொள்பவனை வீட்டில் இருந்த வாறே வணங்க முடியாதா? இப்பொழுதெல்லாம் நான் அப்படித்தான் இறை வழிபாடு செய்கின்றேன்!

கடவுள் வழிபாடு கூடச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. நாங்கள் செய்வதைச் சரியாகச் செய்தால், மற்றவர்கள் பயன்பெற வாழ்ந்தால் அதுவே போதும் என்று நினைப்பவன் நான். மக்கள் சேவை மகேசன் சேவை அன்றோ?

திருவிழாக்காலத்தில் எப்பொழுதாவது கோவிலுக்குப் போவேன். சைக்கிள்தான். அதைத் பாதுகாப்பில் வைத்துவிட்டு நடந்து போய், சுவாமி சரிசனம் செய்துவிட்டு வருவேன்.

அன்றும் வழக்கம் பொலச் சுவாமி தரிசனம் செய்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தேன். தெற்கு வீதிக்குத் திரும்புகிற இடத்தில்

"Excuse me! சுந்தரம்பிள்ளை!"

பின்னால் இருந்து ஒரு பெண் குரல் அழைத்தது. யார் என்னை அழைப்பது? திரும்பிப் பார்த்தேன். நல்லூர்க் கந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபுரமும் முன் மண்டபமும் தெரிந்தன. எங்கும் மனிதர்கள். இந்தப் பின்னணியில் ஒரு மூதாட்டி எனக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தார்.

நான் அவளை ஏற இறங்கப் பார்த்தேன்.

"தெரியேல்லையா? சரோஜா! உங்களோடை பேராதனைப் பல்கலைக்கழகத்திலை படிச்சவள்". சிரித்தாள்.

எனக்கு அவளை உடனடியாக அடையாளம் காண முடியவில்லை. சில நிமிடங்கள் யோசித்ததும் எல்லாம் பளிச்சென்று ஞாபகம் வந்தன. ஓ சரோஜா! என்னோடை வாசிற்றீலை படிச்சவள்!

"என்னாலை உன்னை டக்கெண்டு மட்டுக்கட்ட முடியேல்லை. நீ எப்படி என்னைக் கண்டுபிடிச்சாய்?"

"நான் கனக்க மாறீட்டன். உங்களிலை அதிக மாற்றமில்லை. அடையாளம் தெரியுது!"

"எனக்கு இப்ப உம்மை நல்லா அடையாளம் தெரியுது. சரியா 50 வருடங்களுக்குப் பிறகு சந்திக்கிறம்! இவ்வளவு காலமும் நீர் எங்கை இருந்தீர்? என்ன செய்தீர்?"

"நான் அவுஸ்ரேலியாவிலை இருந்தன். நாட்டுக்குச் சமாதானம் வந்தபடியால், பிறந்த நாட்டை ஒரு முறை பாப்பம் எண்டு வந்தன். நல்லூர்க் கந்தன் கோயிலுக்கு வந்த இடத்தலை உங்களைச் சந்திச்சன்"

அவளா இவள்? பொன் நிறம், கொடி உடல், ஓவல் ஷேப் முகம், அந்தக் செவ்விதழ்களில் தவழும் புன்னகை, கருகருவென்ற நெளி நெளியான கூந்தல்... எல்லாம் எங்கே? தலை நரைச்சு முகம் காஞ்சு உடல் வளைஞ்சு....

"என்ன யோசிக்கிறியள்? தெரியேல்லையா"

"என்னாலை நம்ப முடியாமல் இருக்கு சரோஜா! அந்த மின்னல் அழகும், மிடுக்கான நடையும், மயக்கு விழிப் பார்வையும் எங்கே? கம்பஸ் அழகியல்லா? கம்பஸ்ஸை ஒரு கலக்குக் கலக்குவியே!"

"நான் ஒருத்தரையும் கலக்கேல்லை"

"கனபேர் உன்ரை அழகிலை மயங்கினவங்கள். அந்த அழகு எங்கே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"25 சிலை இருந்த அழகு 75சிலை இருக்குமா? நீங்களும்தான் மாறிப்போயிட்டியள், சுந்தர். அந்தச் சுருள் முடி உதிர்ந்து, மயிர் நரைச்சு, முகம் காஞ்சு, உடம்பு மெலிஞ்சு.... தமிழ்ச் சங்கக் கூட்டங்களிலை முழங்குவியளே! நாங்கள் எல்லாம் கேட்டுக் கொண்டிருப்பம். அந்தக் கம்பீரமும் அழகும் எங்கை?" சிரித்தாள்.

"சரோஜா! உடம்பு சோர்ந்து போனாலும், அந்த அறிவும் ஆற்றலும் குறையேல்லை! பல்கலைக்கழகத் தமிழ் சங்கத்திலை நூறு மாணவர்களுக்குப் பேசினன். இப்ப வானொலி நாடகம் எழுதுறன். இலங்கை வானொலி பேசுது. இந்த நாடு முழுக்க அதைக் கேக்குது!"

"ஓம் நான்கூட நல்லாக் கேட்டிருக்கிறன், அவுஸ்ரேலியா போறதுக்கு முந்தி. நல்ல நாடகங்கள்!"

"அதாலைதானே வானொலிலை தொடர்ந்து ஒலிபரப்பினார்கள்?" சிரித்தேன்.

"பேசுவியள், நல்லாப் பாடுவியள். நாங்கள் மாணவர்கள் ரிறிப் போகிற பொழுது, பஸ்ஸிலை உங்களுடைய குரல் ஒலிக்கும்!."

"நீர்கூடப் பாடுவீரே! ரண்டு பேரும் சேர்ந்து duet பாடியிருக்கிறம் பஸ்ஸிலை! ஞாபகம் இருக்கா?" என்று சிரித்தேன்.

"நான் சாதாரணம். நீங்கள் இனிமையாகப் பாடுவியள்! உங்களுக்கு கம்பஸ் சௌந்தரராஜன் எண்டு பேர்!"

"சிகிரியாவுக்கு ரிறிப் போகேக்கை, நீரும் நானும் சேர்ந்து டுயற் பாடினமே பஸ்ஸிலை ஞாபகமிருக்கா?"

"எல்லாம் நல்லா ஞாபகம் இருக்கு.வசந்த கால நினைவுகள் மறந்துபோகுமா லேசிலை?" என்று சிரித்தாள். அந்தச் சிரிப்பில் ஒரு குதூகலம் நடனமாடியது.

"சரோஜா! நான் அப்ப சொல்லேலை. இப்ப சொல்லூறன். நான் அப்ப உம்மைக் காதலிச்சன்!" என்றேன் உணர்ச்சிபொங்க.

"காதலிச்சியளா?" என்றாள் குரலில் வியப்புத்தொனிக்க. முகத்திலும் சில மகிழ்ச்சி ரேகைகள் ஓடின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காதலிச்சன். ஒரு தலைப்பட்சமாக இல்லை. நீரும் என்னைக் காதலிச்சீர்! இல்லை எண்டு சொல்லாதையும்!"

"ஓம் சுந்தர்! நானும் உங்களைக் காதலிச்சன். நீங்கள் "ஐ லவ் யூ" சொல்லியிருந்தா, நானும் உங்களுடைய காதலை ஏற்றுக் கொண்டிருப்பன். நீங்கள் சொல்லேலெல்லை. ஒரு பெண் எப்படி காதலை முதல்லை வெளியிட முடியும்?"

"ஓம் சரோ உள்ளதுதான்!"

"நீங்கள் ஏன் சொல்லேலெல்லை?"

"படிப்பு, பரீட்சை வரப்போகுதெண்ட பயம், தயக்கம், கூச்சம், எல்லாம் சேர்ந்து தடுத்துட்டுது. என்னுடைய காதலை வெளியிடாததுக்கு, பிறகு நான் மனவருத்தப்பட்டும் இருக்கிறன்!"

மனவருத்தப்பட்டியளா? நான் இஞ்சை இலங்கேலைதானே இருந்தன். என்னோடை தொடர்பு கொண்டிருக்கலாமே!"

"அதுக்குத் தேவை இல்லாமற் போச்சு!"

"ஏன்?"

"பல்கலைக்கழகப் படிப்பு முடிஞ்சு யாழ்ப்பாணம் போனதும், என்னுடைய ஒன்று விட்ட மச்சாளைச் சந்திச்சன். நான் வாசிற்றி போகும் பொழுது சின்னப் பெண்ணாக இருந்தவள். அப்ப எழிலார் சிற்பமாக என் கண்முன் நின்றாள்! நான் என் வாழ்கேலை காதலிச்ச, காதலிக்க நினைச்ச எல்லாப் பெண்களையும் அந்தக் கணமே மறந்துட்டன்!"

"அவ்வளவு அழகியா உங்களுடைய மச்சாள்?"

"என்னுடைய பல்கலைக்கழக வாழ்கேலை மூன்று பெண்களைக் காதலிச்சன்!. அந்த மூன்று பெண்களையும்விட என்னுடைய மச்சாள் மங்கை அழகி!."

"பல்கலைக்கழத்திலை இருந்து வெளிக்கிடேக்கை வயது 25. ஊருக்குப் போய், 18 வயது மச்சாளைச் சந்திச்சா, மினுமினுவெண்டு அழகாகத்தானே இருப்பள்?" சிரித்தாள்.

"அதுகும் உண்மைதான். பேராதனைப் பல்கலைக்கழகம் ஒரு அழகுப் பூங்கா. அதிலை பருவத்தின் பூரிப்பிலை நிக்கிற ஆண்களும் பெண்களும் சந்திக்கிற பொழுது, காதல் தானாக வரும். நான் முதல் வரியம் ஒரு பெண்ணையும் இரண்டாம் வரியம் ஒரு பெண்ணையும் மூன்றாம் வரியம் உம்மையும் காதலிச்சன்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியா? காதல் மன்னன்தான்!" சிரித்தாள்.

"அவளவைக்கும் நான் "ஐ லவ் யூ" சொல்லேல்லை. சொல்லியிருந்தா நான் காதல்லை மாட்டுப்பட்டிருப்பன்!"

"ஏன் சொல்லேல்லை? அப்ப நீங்கள் தீவிரமாகக் காதலிக்கேல்லையா? நான் சொல்லூறன், நீங்கள் அந்தப் பெண்களில் ஒருத்தியையும் காதலிக்கேல்லை! உங்களுக்கு ஏற்பட்டது. கவர்ச்சி! Infatuation!"

"அழகு மயக்கம்! Infatuation!" என்று நானும் சிரித்துவிட்டுத் தொடர்ந்தேன். இளமைக் காலத்திலை பேராதனைப் பல்கலைக்கழகத்திலை படிக்கேக்கை, ஆண்களுக்கும் பெண்களுக்கும் கவர்ச்சி ஏற்படுறது அதிசயமில்லை!"

"அப்ப ஒத்துக்கொள்ளுறியள்!"

"இந்தக் காலம் மாதிரி இல்லை அந்தக் காலம். அந்தக் காலத்திலை ஆண்களும் பெண்களும் சகஜமாகப் பேசிப் பழகூறதில்லை. பழக்கம் குறைவு. பல்கலைக்கழகத்தை விட்டு விலகினாத் தூரம். பிறகு என்ன நடக்குமோ எண்ட அச்சம்.... மச்சாளைக் கண்டதும் நான் பல்கலைக்கழகத்திலை காதலிச்சிருக்ககூடிய எல்லாப் பெண்களும் மறைந்தார்கள்!"

"பிறகு மச்சாளையே காதலிச்சு கலியாணம் செய்தியளாக்கும்!"

"நான் இன்னும் ஒண்டை நேர்மையாகவே சொல்லூறன் சறோஜா. நான் பல்கலைக்கழகத்திலை எந்தப் பெண்ணைக் காதலிச்சிருந்தாலும் அந்த நேரத்திலை அவளுக்குத் துரோகம் செய்திருப்பன்! பல்கலைக்கழகம் விட்டதும் தூரம் கூடிப்போச்சு. இது கண்ணுக்கு முன்னாலை கைக்குள்ளை அழகான பெண்! ஆரும் துரோகம் செய்யத் தயங்கியிருக்கமாட்டான்!"

"உந்த மாதிரிப் பல ஆண்கள் செய்திருக்கினம்"

"ஏன் பெண்கள் செய்யேல்லையா? எனக்குத் தெரியும். சில பெண்களும் ஏமாத்தியிருக்கினம்!"

"ஓம் நான் ஒத்துக்கொள்ளுறன். பல்கலைக்கழகத்துக் குள்ளையும் செய்திருக்கினம், வெளீலை போன பிறகும் நடந்திருக்கு. உதிலை ஆண்கள்தான் அதிகம்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்னொரு பெண்ணைக் காதலிக்காமலும் அவளுக்குத் துரோகம் இழைக்காமலும் ஆண்டவன்தான் என்னைத் தடுத்தாட் கொண்டார் எண்டு நினைக்கிறன்!"

"சுந்தர மூர்த்தி நாயனாரைத் தடுத்தாட்கொண்டது போலை!" சிரித்துக்கொண்டே கூறினாள்.

"படிக்கிற காலத்திலை உம்மிலை பலருக்கு இன்ரறெஸ்ட் இருந்தது. நீர் ஒருத்தரையும் காதலிக்கேல்லையா?"

"பலரல்ல சிலர். சும்மா சைக்கோ அடிச்சுக்கொண்டு திரிஞ்சாங்கள். ஒருத்தனும் "ஐ லவ் யூ" சொல்லேலை. சொல்லியிருந்தாலும் நான் ஏற்றுக்கொண்டிருக்க மாட்டன்!."

"ஏன்?"

"உங்களைப் போலை தயக்கம்தான். எனக்குத் தெரியும் பல்கலைக்கழக காதல் நிறைவேறுறது கஷ்டம் எண்டு"

"புத்தசாலி!"

"நெடுக நிண்டு பேசுறமே, எங்கையாவது போய் இருந்து பேசுவம்."

"இந்த சனத்துக்கை எங்கை இருக்கிறது? நிண்டே பேசுவம், கோயில் வாசலிலை."

"நான் என்னுடைய கதையையே பேசிக்கொண்டு நிக்கிறன். சரோஜா! இனி நீர் உம்முடை கதையைச் சொல்லும்!"

"நானும் ஆசிரியரானன். அதன் பிறகு விநாயகமூர்த்திய-ரைக் கலியணம் செய்தன். பேசிச் செய்த கலியாணம்தான். அவர் கிளறிக்கல் சேவிஸ். நான் அந்தஸ்துப் பாக்கேல்லை!"

"ஏதோ ஒரு கலியாணத்தைக் கட்டினாச் சரிஎண்டு!"

"மூர்த்தீலை ஒரு குறையும் இல்லை. கொழும்பிலைதான் சீவிச்சுக்கொண்டிருந்தம். 1983லை அவருக்கு அவுஸ்ரேலியா போக ஒரு வாய்ப்பு வந்தது. எனக்கு படிப்பித்தலை விட்டுட்டுப் போக மனமில்லை. அவருடைய வற்புறுத்தலாலை போகச் சம்மதிச்சன்!"

"பிள்ளையள் இல்லையா?"

"ஒரு மகள். தீபா. குடும்பமாகப் போய், அவுஸ்திரேலியா விலை குடியேறினம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லா உழைச்சம். வீடும் வாங்கி வசதியாக வாழ்ந்தம். அவர் காலமாகீட்டார்"

"எனது அனுதாபங்கள்!"

"மகள் தீபாவுக்கு கர்நாடக சங்கீதம் பரதநாட்டியம் எல்லாம் கற்பிக்க ஆசைப்பட்டன். வசதி இருந்தது. அவள் சம்மதிக்-கேல்லை. தன்ரை விருப்பத்துக்கு ஏதோ ரெக்கின்கல் சைட்டிலை படிச்சு குவாலிபை பண்ணினாள். சுலபமாக வேலையும் கிடைச்சுது. தன்ரை விருப்பப்படியே கலியாணமும் செய்தாள்."

"மறுக்கமுடியுமா இந்தக் காலத்திலை?"

"இப்ப மகளோடை தான் இருக்கிறன். நான் இலங்கைக்கு வாறது தீபாவுக்கு விருப்பமில்லை. பிறந்த நாட்டை ஒருக்காப் பாக்கவேணும் எண்டு. வற்புறுத்திச் சொல்லி அனுமதி பெற்றுக் கொண்டுதான் வந்தன். கெதியாத் திரும்பி வாவெண்டு சொல்லிவிட்டவள். அவசரம் திரும்ப வேணும்!"

"இலங்கைக்கு வந்து எவ்வளவு காலம்?"

"ரண்டு கிழமை!"

"ஆக ரண்டு கிழமையா?"

"ஒரு மாதமாவது நிக்க வேணும் எண்டு தான் வந்தன். இஞ்சை என்னத்தைப் பாக்க? சந்திச்சுப் பேசவும் மனிசரில்லை. உங்களைச் சந்திச்சது சந்தோசம்".

"நான் இந்த நாட்டிலையே இருக்கிறன். எனக்கும் சந்திச்சுப் பேச ஆக்கள் இல்லை! தெரிஞ்ச ஆக்களெல்லாம் எங்கையோ போட்டினம். புத்தகமும் கையமாகச் சீவிக்கிறன்!"

"நான் ஒரு சாதாரண குடும்பப் பெண். என்னைப் பற்றிச் சொல்ல இன்னும் என்ன இருக்கு? நீங்கள் இலக்கியம் படைக்கிறவர். உங்களுடைய இலக்கியச் சேவைபற்றிச் சொல்லுங்கோ!"

"ஆசிரியரானன். அதோடை நாடக வேலையைத் துவங்கினன்."

"வேறை வேலையளுக்குப் போகேல்லையா?"

"நான் முயற்சி செய்யேல்லை. முயற்சி செய்திருந்தாலும் கிடைச்சிராது. ஆசிரியர் வேலை யோடையே நான் திருப்திப்பட்டுக் கொண்டன்.!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சம்பளம் கூடக் கிடைச்சிருக்கும்."

"ஓ கிடைச்சிருக்கும். இந்தக் காலத்திலை காசு எல்லாரிட்டும் தான் இருக்கு! 500 நாடகங்கள்! இவ்வளவு நாடகங்கள் எத்தினை பேரிட்டை இருக்கு?"

"இலங்கையர் எல்லோருக்குமல்லா நாடக விருந்து அளிச்சிருக்கிறியள்? அது சேவைதான்! சேவை செய்ய எல்லாருக்கும் சந்தர்ப்பம் கிடைக்கிறதில்லை!"

"நாடக விருந்தளிக்க திறமையும் வேணும்!"

"ஓம், ஓம்!"

"நான் மச்சாளைக் கலியாணம் செய்து யாழ்ப்பாணத்திலை இருந்தாலதான், அராலி நண்பர்களோடை சேர்ந்து நாடகங்களை நடத்தினன். நான் இளமேலை அவங்களோடை சேர்ந்து விளையாடினன். கூடி வாழ்ந்தன்! நாங்கள் ஒரே குடும்பமாகப் பழகினம். அப்பிடியான உறவு இல்லாமல் நாடகங்கள் நடத்தியிருக்க முடியாது!"

"ஊரவர்கள் ரசிச்சார்களா? போதிய ஆதரவு தந்தினமா?"

"ஓரளவு ஆதரவு கிடைச்சுது? எண்டாலும் பண்நட்டம்தான். நான் அதை ஒரு சேவையாக்வே செய்தன்! நண்பர்களுக்கும் நடிக்கச் சந்தர்ப்பம்."

"பேராதனைப் பல்கலைக் கழகத்திலை நீங்கள் நடிச்ச நாடகங்களை கண்டி ரிறினிற்றி கல்லூரிலை பாத்தன்! அப்பிடியான நாடகங்களைத்தானே நடிச்சியள்?"

"ஓ அந்த மாதிரி நாடகங்கள் தான். தமிழிலை அந்த மாதிரி நாடகங்களை நவீன நாடகங்கள் எண்டு சொல்லுறது. பேராசிரியர் கணபதிப்பிள்ளைதான் அவற்றை முதல் முதலாக எழுதி நடிப்பித்தவர்."

"அப்பிடியா? எங்களுடைய பேராசிரியர் கணபதிப் பிள்ளையா?"

"தெரியாதா?"

"நாடங்களைப் பாத்து ரசிச்சன் ஆனா எங்கடை பேராசிரியர்தான் பேச்சுவழக்கு நாடகங்களை முதல் முதலாக எழுதி நடிப்பித்தார், எண்டது தெரியாது! எங்களுக்குப் பல்கலைக்-கழத்திலை நாடகம் படிப்பிக்கேல்லையே!" சிரித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முத்தமிழ் எண்டு சொல்லுகினம். ஆனா தமிழ் மொழியிலை முதல்லை நாடகங்கள் இருக்கேல்லை!"

" அப்பிடியா? அப்ப எதோ ஆடினாங்களே?"

"அதுகள் நாட்டுக்கூத்துகள். அதுகளுக்குப் பிரதிகூட இல்லை. தமிழ் மக்களுக்கு அண்ணாவிமார் பழக்கிவிட்டது. மேற்குலகிலை இருந்து வந்த டிராமா எண்டதை வைச்சுக் கொண்டு பாத்தா, அதுகளிலை பல குறைபாடுகள். தமிழிலை முதன் முதலாக நாடகம் எண்டு நூல் எழுதப்பட்டது, 19ஆம் நூற்றாண்டிலை!"

"அப்ப பேராசிரியர் கணபதப்பிள்ளைதான் முதன் முதலாக நாடகம் எழுதினார் எண்டு சொன்னியளே!"

"அது இலங்கேலை, 20ஆம் நூற்றாண்டிலை. அதுக்கு முந்தி இலங்கேலும் எதை எதையோ ஆடினாங்கள். பேராசிரியர் தான் முதன் முதலாக நவீன நாடகத்தை எழுதி நடிப்பித்தார்1"

"நவீன நாடகத்தின் அடையாளம் என்ன? சிறப்பு அம்சம் என்ன?"

"எங்களுடைய சமகால வாழ்க்கையைச் சித்திரிக்கிற நாடகம். சமூகத்திலை நடமாடுற மனிதர்கள்தான் பாத்திரங்களாக வரவேணும். நாடகம் எந்த இடத்தைக் களமாகக் கொள்கிறதோ, அந்த இடத்தின் பேச்சு வழக்கிலைதான் நாடகம் எழுதப்பட வேணும்!"

"அப்பதானே நாடகம் சமூகத்தைப் பிரதிபலிக்கும்! மக்களுக்கு வேண்டிய கருத்துக்களையும், சொல்லலாம். மக்களும் நாடகத்தை ஆர்வத்தோடை பார்த்து கேட்டு ரசிப்பினம்!"

"சமூககத்தின் குறை நிறைகளையும் சொல்லலாம்! மண் வாசனை நாடகம் எண்டு சொல்லுறதும் இதைத்தான்!"

"உங்களைச் சந்திச்சதாலை தமிழ் நாடகம் பற்றிம் அறிஞ்சுட்டன்!"

"75 ஆவது வயதிலை!" என்று சிரித்து "அப்ப பல்கலைக்கழகத்திலை நாடகம் பாக்கிற பொழுது நீங்கள் இது பற்றியெல்லாம் சிந்திச்சுப் பாக்கேல்லையா!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சும்மா நாடகத்தைப் பாத்துட்டுப் போவம், வெறும் பொழுது போக்காக. அந்த நேரத்திலை படிப்பைப் பற்றித்தான் சிந்திப்பம். நாடகத்தைப் பற்றிச் சிந்திக்க நாடகமும் தெரியாது! நேரமும் இல்லை!"

"எனது ஊர் நண்பர்கள்தான் எனது நாடகங்களின் நடிகர்கள்!"

"நடிக்கிற திறமை இருக்க வேணுமே!"

"எல்லாம் இருந்தது. எல்லாம் கிடைச்சுது! நடிப்பு, நாடக நிர்வாகம் எல்லாம் நண்பர்கள்தான்! அப்பிடியான திறைமையுள்ள நண்பர்களையும் ஆண்டவன்தான் தந்தார்!" என்றேன் நன்றிப்பெருக்குடன்.

"பெண் பாத்திரங்கள்...? எங்களுடைய பெண்கள்தான் நடிக்க வரார்களே!"

"அந்தக் காலத்திலை கோயில்களிலை சதிர் ஆடுறத்துக்கெண்டு சில பெண்கள் இருந்தார்கள். தேவதாசிகள். அவர்களைப் பெண் பாத்திரங்களிலை நடிக்கவைச்சம், காசு குடுத்து!"

"அப்ப நாடகங்கள் தத்ரூபமாக நடந்ததெண்டு சொல்லுங்கோ!"

"பொதுமக்கள் நல்லா ரசிச்சாங்கள்! இந்த மாதிரி 20 ஆண்டுகள்! 25 நாடகங்கள்! அது ஒரு சாதனை!" என்றேன். இந்த வயதிலும் எனது குரலில் பெருமை தொனித்தது.

"உங்களுக்கை சண்டை சச்சரவு ஒண்டும் வரேல்லையா?"

"ஒரு விக்கினமும் இல்லாமல் நாடகங்களை நடிச்சு முடிச்சம்! அதுவும் ஆண்டவன் கருணைதான்!"

"நீங்கள் உண்மையான சேவை செய்த படியால், ஆண்டவனும் அருள் பாலிச்சிருக்கிறான்!"

"நான் நாடகங்கள் நடத்தட்டும் எண்டு! அதே நேரத்திலை நான் நாடகக் கலையைப் படிச்சன். நாடகங்கள் பற்றியும் படிச்சன். அதுகளை, அரங்கேற்றுவது பற்றியும் படிச்சன்!"

"நூல்கள் எங்கை கிடைச்சுது?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாழ்ப்பாணம் பொது நூலகத்திலை நல்ல நூல்கள் இருந்தது. தமிழிலை நாடக நூல்கள் இல்லை. ஆங்கிலத்திலை உள்ள நவீன நாடக நூல்களைத் தேடி எடுத்துப் படிச்சன். அதுகள் தான் நாடகம் எழுத உதவிச்சுது!"

"இலங்கை வானொலிக்குள்ளை எப்பிடி நுழைஞ்சியள்?"

"எனது நாடகங்கள் தாமாகவே நுழைந்தன!" என்று கூறிச்சிரித்துவிட்டு" 1980ஆம் ஆண்டு முதல் வானொலி நாடகத்தை எழுதி அனுப்பினன். ஒலிபரப்பட்டது."

"நீங்கள் தான் நாடகத்தைத் துறைபோகக் கற்றுட்டியளே!"

"அதுக்குப் பிறகு நான் எழுதி அனுப்பிய அனேகமாக எல்லா நாடகங்களையும் ஒலிபரப்பியிருக்கினம்!"

"அவைக்கும் நல்ல நாடகங்கள்தானே தேவை? அப்பதானே அவைக்கும் பேர்?"

"இப்பவும் என்னுடைய புதிய நாடகங்கள் வானொலீலை ஒலிபரப்பப்படுது!"

"இப்ப வந்த பிறகு, கொழும்பிலை நிக்கேக்கை ஒரு நாடகம் கேட்டன்!"

"இலங்கை வானொலியையும் எனக்கு இறைவன்தான் தந்தார். அதாலைதான் இவ்வளவு நாடகங்களை எழுதிக் குவிச்சன்!"

"உங்களுடைய தகுதியைக் கண்டு இறைவன் தந்திருக்கிறார்!"

"சரோசா! சைவசித்தாந்தப்படி பக்குவப்பட்ட ஆன்மாக்களை இறைவன் ஆட்கொள்வார்!" என்று சிரித்தேன்.

"நீங்கள் வெளிநாடு ஒண்டுக்கும் போகேல்லையா?"

"படிச்சுப் பட்டம் பெற்ற இரண்டு தம்பிமார் வெளிநாட்டிலை! ஆனா நான் ஒரு நாட்டுக்கும் போகேல்லை. இலங்கை வானொலீலை ஒலிபரப்பப்படுற எனது நாடகங்கள் இணையத்தளம் மூலம் உலகம் முழுவதும் போகுதே! நான் ஏன் போவான்?" சிரித்தேன்.

"நீங்கள் எப்பிடி வானொலி நாடகம் எழுதப் பழகினீங்கள்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வானொலி நாடகம் எழுத நான் எவரிட்டும் படிக்கேல்லை. நாடகங்களைக் கேட்டுட்டு, நானே எழுதினன். நவீன நாடகங்களை துறை போகக் கற்றதாலை, எனக்கு அந்தக் கலை இலகுவாக கைவந்துட்டுது!"

"இனி வாறவைக்குச் சுகம். அவை உங்கடை நாடகங்களைக் கேட்டு வானொலி நாடகம் எழுதப்பழகலாம். எத்தினை நூல்கள் வெளியீட்டிருக்கிறயள்?"

"26. அதிலை பதினொண்டு வானொலிநாடக நூல்கள். வானொலி நாடகம் எழுதுவது எப்படி? எண்டொரு நூலே எழுதிவெளியிட்டன். அப்பவும் கன பேர் வானொலி நாடகம் எழுதப் பழகேல்லை!"

"நாடகம் எழுதூறவை உங்களுடைய நாடகங்களின் சிறப்பை அறியத் தவறீட்டினம்!"

"இலங்கைத் தமிழ் பேசும் பிள்ளையளுக்கு நவீன நாடகமும் வானொலி நாடகமும் கற்பிக்கச் செய்ய வேணும் எண்டதை லட்சியமாகக் கொண்டு நூல்கள் எழுதி வெளியிடுறன்!"

"தமிழ் பேசும் பிள்ளையளுக்கு நவீன நாடகமும் வானொலி நாடகமும் கற்பிக்கிறதில்லையா?

"இல்லை. இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவை மட்டும்தான் எனது நாடகங்களின் சிறப்பை அறிஞ்சு-கொண்டிருக்கு!"

"அதாலை இந்த நாடு முழுவதும் பயனடையுது!"

"நூல்கள் வெளியிடுறதோடை என்ரை கடமை முடிஞ்சுது. இனி அதுகளைப் பயன்படுத்த வேண்டியது. கல்விக்குப் பொறுப்பாய் உள்ளவேன்ரை கடமை!"

"பயன்படுத்துவினம்! நல்லதைச் செய்யத்தானே வேணும்!"

"நான் என்னைப் பற்றியயே சொல்லிக்கொண்டு நிக்கிறன் சரோஜா!.. இனி நீங்கள் உங்களைப் பற்றிச் சொல்லுங்கோ!"

"சொன்னனே மகளிட்டை அனுமதி பெற்றுக் கொண்டு வந்தனான். கொழும்பிலை தெரிஞ்சாக்கள் ஒருத்தரையும் சந்திக்க முடியேல்லை. யாழ்ப்பாணத்திலும் வேண்டிய ஆக்கள் ஒருத்தரையும் சந்திக்க முடியேல்லை. பெரிய ஏமாற்றம்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பலர் இறந்திருப்பினம். சிலர் வெளிநாடு போயிருப்பினம். சிலர் நோய்வாய்ப்பட்டிருப்பினம்! பேராதனைப் பல்கலைக்கழகம் போகேல்லையா?"

"அங்கை ஏன்? அந்த உலகமே மாறிப் போயிருக்கும்! சுந்தர்! உங்களைச் சந்திச்சது எனக்குத் திருப்தி! சந்தோஷம்!"

"உமது பல்கலைக்கழக கால நண்பன்!"

"இலங்கை நாடகத்துறேலை சாதனை படைச்ச ஒருவர்!"

"சரோசா! எனக்கு உம்மைச் சந்திச்சது சந்தோஷம். என்னுடைய பல்கலைக்கழக நாட்களெல்லாம் ஞாபகம் வந்தது. இளமை திரும்பிச்சுது!"

"உள்ளத்திலை! இரண்டு பேருக்கும்!" இருவரும் சிரித்தோம்.

"சரோசா ஒரு நாளைக்கு வீட்டுக்கு வாருமன் ஆறுதலாக இருந்து பேசலாம்!"

"நான் உங்களுடைய அழகிய மனைவியைச் சந்திக்க விரும்பேல்லை!" சிரித்தாள்.

"மங்கை இப்ப இல்லை.!"

"என்ன சொல்லுறியள்?"

"அவ எப்பவோ போய்ச் சேந்துட்டா!"

"அப்ப பிள்ளையள்?"

"ஒரே ஒரு மகன். மணிவண்ணன். ஒரு பட்டதாரி ஆசிரியர்! அவரும் போய்விட்டார்!"

"மனைவியையும் மகனையும் இழந்த நிலையிலுமா, இப்பிடி நாடக விருந்தளிக்கிறியள்?" என்றாள் குரலில் வியப்புத் தொனிக்க.

"மகாகவி ஷேக்ஸ்பியருக்குகூட ஒரு மகன் இறந்துட்டான்!"

"அது ஒரு மகன். இது ஒரே ஒரு மகன்!" இப்ப தனியவா இருக்கிறியள்?"

"இல்லை மருமகளோடும் பேரப்பிள்ளையளோடும். அவை என்னைப் பாத்துக்கொள்ளுகினம். நானும் அவையைப் பாத்துக் கொள்ளுறன்! அதாலைதான் இப்பவும் இலக்கியம் படைக்க முடியுது!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த வசதியையும் உங்களுக்கு இறைவன்தான் அளிச்சிருக்கிறார்!"

"நான் பக்குவப்பட்ட ஆன்மா!" இருவரும் சிரித்தோம்.

"மகள் தீபா தவிச்சுக்கொண்டிருப்பள். பயப்பிடுவள். நான் உடனடியாகத் திரும்பவேணும்! சந்திச்சு, பழைய நினைவுகள் எல்லாத்தையும் அசைபோட்டுட்டம். இன்னும் என்ன இருக்கு பேச?"

"சரி போட்டு வாரும் சரோசா! உங்களுடைய எஞ்சிய வாழ்நாள்கள் இன்பகரமாகக் கழிய என்னுடைய நல்வாழ்துக்கள்! அவளது கையை பிடித்து வாழ்த்துச் சொல்லிவிடை கொடுத்தேன். எனது உள்ளத்தில் ஒரு நண்பனைச் சந்தித்த மகிழ்ச்சியைத் தவிர வேறு எந்த உணர்ச்சியும் இல்லை."

**"சுந்தர்! இலங்கைத் தமிழ் பேசும் பிள்ளைகளது கல்வி முன்னேற்றத்தோடை உங்களுடைய இலட்சியத்தை இணைச்சிருக்கிறியள்! அது கட்டாயம் நிறைவேறும்!** அது நிறைவேற எனது நல்லாசிகள்!" சரோசாவின் முகத்திலும் மகிழ்ச்சி ஒளி தெரிந்தது. கையை எடுத்துக் கொண்டாள்."

"நான் இன்னும் ஒண்டு, சொல்லூறன். நான் இப்ப எதையும் நாடகமாக்குவன். நாங்கள் இரண்டு பேரும் சந்திச்சுக் கதைபேசினதைக்கூட ஒரு நாடகமாக்குவன்! எழுதட்டா?" என்றேன்.

"நாங்கள் பலவிடயல்கள் பற்றிப் பேசினம். நாடகத்தை, எழுதி அனுப்புங்கோ. இலங்கை வானொலி ஒலிபரப்பும். எல்லாரும் கேட்டுப் பயன்பெறட்டும்!"

வெவ்வேறு திசைகளில் நடக்கத் துவங்கினோம்.

***

---

1. இது எனது வாழ்க்கையில் நடந்த சில சம்பவங்கள். எனது சாதனைகள் சிலவற்றைத் தழுவிய ஒரு தன் வரலாற்று சிறுகதை! (Autobiographical Short Story)
2. இதில் வருகின்ற சரோஜா பாத்திரம் வெறும் கற்பனையே!
3. ஏனைய பாத்திரங்களும் சம்பவங்களும் உண்மையே!

வீரகேசரி 17.10.2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை எழுதுவது எப்படி?

**நவீன இலக்கியங்களைப் படைத்தல் :** நவீன இலக்கியங்களான புதுக்கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் எதற்கும் இலக்கணங்களோ வரையறைகளோ, கட்டுப்பாடுகளோ இல்லை. அவற்றைச் சுதந்திரமாக எழுதலாம். ஆனால் பெரிய பெரிய எழுத்தாளர்கள் காலத்திற்குக் காலம் சில வரையறைகளைப் பின்பற்றி, பல அழகான இலக்கியங்களைப் படைத்திருக்கிறார்கள். அந்த இலக்கியங்களைப் படித்தால் அந்தந்த இலக்கியங்களுக்குரிய இலக்கணங்கள், பண்புகள் பற்றி அறிந்து கொண்டு, நாங்களும் அழகாக எழுதலாம். அவற்றை மீறியும் எழுதலாம். ஆனால் நாம் படைக்கும் இலக்கியம் அழகாகவும், சுவையாகவும், பயனுள்ளதாகவும் இல்லாவிட்டால், மற்றவர்கள் அதை வாசிக்கமாட்டார்கள்.

நவீன இலக்கியங்களை விளக்கிக் கூறலாம். அவற்றின் சிறப்புக்கள் பற்றி எடுத்துக் கூறலாம். ஆனால் படைக்கும் ஆற்றலை ஒருவர் இன்னொருவருக்குக் கற்றுக் கொடுக்க முடியாது. உங்களுக்குக் கருவிலே திரு இருந்தால்தான் உங்களால் இலக்கியம் படைக்க முடியும்!

அமெரிக்க எழுத்தாளராகிய "எட்கார் அலன்போ" என்பவர்தான் முதலாவது சிறுகதையை எழுதினார். அதற்குப் பிறகு பலர் பல அழகான சிறுகதைகளை எழுதிவிட்டனர். தமிழ் மொழியிலும் பல நல்ல கதைகள் எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றில் இருந்து பல அறிஞர்கள் எடுத்துக்கூறிய இலக்கணங்கள் பற்றிச் சருக்கமாக எழுதுகின்றேன்.

எதுவும் இலகுவில் கைகூடாது. நிறைய வாசியுங்கள். பிறகு தொடர்ந்து எழுதுங்கள். அப்பொழுதுதான் அந்த ஆற்றல் உங்களுக்குக் கைவரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்க்கை அனுபவம் :** சிறுகதை ஒரு கதை, ஒரு சம்பவம், ஒரு கருத்து, ஒரு பாத்திரம், ஒரு உணர்ச்சி எதிலிருந்தும் பிறக்கலாம்! என்றாலும் சொந்த அனுபவத்தை வைத்து எழுதப்படும் சிறுகதைகளே நல்ல சிறுகதைகளாக அமையும் என்று சொல்கிறார்கள். எனவே உங்களைச் சுற்றியுள்ள உலகத்தைக் கூர்ந்து கவனியுங்கள். அதில் ஏதாவது ஒன்று உங்களது உள்ளத்தைத் தொடும். நீங்கள் அதில் ஈடுபடவேண்டும். அந்த உணர்ச்சியில் மூழ்க வேண்டும். அப்பொழுது சிறுகதை எழுதுவது சுலபமாக இருப்பதுடன், கதையும் உணர்ச்சிகரமாக அமையும். நான் எனது வாழ்க்கை அனுபவங்களுடன் மற்றவர்களது வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகள், கேள்விப்பட்ட கதைகள், வெபறும் கற்பனைகளை வைத்துக்கூட சிறுகதைகள் எழுதியுள்ளேன்.

**கருத்து :** சிறுகதை அனேகமாக ஒரு கருத்தில் இருந்தே பிறக்கிறது. அது எதுவாகவும் இருக்கலாம். எங்களது சமகால வாழ்க்கையில் இருந்து எடுக்கப்பட்ட கருத்தாக, வாழ்க்கைக்கு வேண்டிய கருத்தாக இருந்தால்தான் அது வாசகர்களைக் கவரும். புராண இதிகாசங்களில் இருந்து எடுக்கப்பட்ட கருத்துக்களை வெறும் கற்பனை என்று வாசகர்கள் அலட்சியம் செய்வர். அதில் ஒரு நம்பகத் தன்மை இருக்க வேண்டும். நிஜவாழ்கையில் இருந்து எடுக்கப்பட்ட சிறுகதையை வாசிப்பவர்கள் உள்ளம் உருகி நிற்பர்!

**சிறியது:** பெயருக்கேற்ப சிறுகதை சிறியதாகவே இருக்க வேண்டும் என்பது சொல்லாமலே பெறப்படுகின்றது. ஆனால் சிறிய கதைகள் எல்லாம் சிறுகதைகள் ஆக மாட்டா. சிறுகதை ஒரு நாவலின் சுருக்கமுமல்ல. அதற்கு ஒரு தனி வடிவம் (form) இருக்கிறது. அந்த அமைப்பு இருந்தால்தான் அது சிறுகதை என்று ஏற்றுக்கொள்ளப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒன்று மட்டும்:** ஒரு நாவலில் எத்தனை கதைகள், எத்தனை கதைக்கோப்புகள் (Plots), எத்தனை பாத்திரங்கள், எத்தனை சம்பவங்களும் வரலாம். ஆனால் சிறுகதையில் ஒரு கதை, ஒரு பாத்திரம், ஒரு சம்பவம், ஒரு உணர்ச்சி என்று ஏதாவது ஒன்று தான் வரும். அந்த ஒன்றைச் சுற்றியே கதை பின்னப்படும். ஒன்றுக்கு மேற்பட்டவை வந்தால், அதன் அழகு சிதையும். எனவே சுருக்கம் இறுக்கம் ஆகியவை அதன் இன்றியமையாத அம்சங்களாகின்றன.

**வர்ணனைகள் :** ஒரு நாவலாசிரியர் பக்கம் பக்கமாக வர்ணனைகளை வளர்த்துக் கொண்டு போவார். அப்படியான வர்ணனைகளுக்கு சிறுகதையில் இடமில்லை. எடுத்துக் கொண்ட கதைக்கும் கருத்திற்கும் பாத்திரங்களுக்கும் தேவையான, மிகவும் இன்றியமையாத வர்ணனைகளே அதில் இடம் பெறும்.

பெரிய கதை, ஆழகான கதைக்கோப்பு பெரிய பாத்திர வார்ப்பு என்று எதுவும் சிறுகதையில் வரா. ஒரு பாத்திரம் மட்டுமே வரும். அந்தப் பாத்திரத்தைக்கூடப் பேச விடாமல் ஆசிரியர் கதையைச் சொல்லி முடித்துவிடலாம்.

**தொடக்கம் :** சிறுகதையில் ஒரு கதை இருந்ததால் நல்லது. அதை எந்தவிதப் பீடிகையும் இன்றித் திடீரென்று தொடங்கலாம். தொடக்கம் அழகாக இருந்தால் வாசகர்களைக் கவரும், வாசகர்களை உடனடியாகவே கதையின் மையப்பகுதிக்கு இட்டுச் சென்றால் அவர்கள் கதையில் மூழ்கி, அதைத் தொடர்ந்து வாசிப்பர்

**கதை ஓட்டம்:** கதை விறுவிறுப்பாகவும் வேகமாகவும் நேர் கோட்டில் ஓட வேண்டும். அதற்காக நம்பமுடியாத சம்பவங்களையோ வேண்டுமென்றே புகுத்தப்பட்ட திருப்பங்களையே கதையில் புகுத்தக்கூடாது. கதைச் சம்பவங்களும் கருத்துக்களும் ஒன்றில் இருந்து ஒன்று பிறக்க வேண்டும். அவை இயல்பாக தர்க்க ரீதியாக ஒன்றை ஒன்று தொடர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தெரிவு செய்தல்:** சிறுகதை ஒரு நல்ல கருத்தையேனும் சொல்வது நல்லது. அந்தக் கருத்தை வாசகர்களது மனதில் நன்கு பதியச் செய்யவும் வேண்டும். சிறுகதையில் எல்லாவற்றையும் சொல்லத் தேவையில்லை. அப்படிச் சொல்லிவிடவும் முடியாது. எனவே சிறுகதை ஆசிரியருக்கு எதைச் சொல்வது எதைச் சொல்லாது விடுவது என்று தீர்மானிக்கும் தேவையும் ஏற்படுகின்றது. சிலவேளைகளில் சொல்லாது விட்டவைகளே வாசகர்களைச் சிந்திக்கச் செய்யும். அதனால் ஒரு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தவும் கூடும்.

**மொழிநடை (Style) :** சிறுகதையில் பாத்திரங்களுக்கு உரையாட அதிக வாய்ப்பில்லை. அப்படி உரையாடும் பொழுது அவை தமக்கே உரிய இயல்பான பேச்சு வழக்கிலேயே உரையாட வேண்டும். அந்தப் பேச்சு வழக்கே பாத்திர வார்ப்பும் செய்துவிடும்.

சிறுகதை அழகாக எழுதப்பட வேண்டும். ஒவ்வொரு எழுத்தாளனிடமும் ஒவ்வொரு எழுதும் முறை (Style) இருக்கிறது. அவன் அந்த முறையிலேயே எழுதுவான். மற்றவர்களது மொழிநடையைப் பின்பற்றி எழுதுவது செயற்கையானது. அது எழுதுபவனைக் காட்டிக் கொடுத்துவிடும். உங்களது சொந்த மொழிநடையிலேயே எழுதுங்கள்!.

**திருத்தி எழுதுதல் :** சிறுகதை எழுதி முடிந்ததும் அவசரப்பட்டுப் பத்திரிகைகளுக்கு அனுப்பாதீர்கள். அதைச் சிறிது காலம் சில மாதங்களாவது வைத்திருந்து விட்டுத் திரும்பவும் வாசியுங்கள். அப்பொழுது அதில் உள்ள பிழைகள் சில உங்களுக்கே தெரிய வரும். பிழைகளைத் திருத்தி எழுத கதையில் மெருகு ஏறும். உலகின் தலை சிறந்த இலக்கியங்களெல்லாம் பலமுறை திருத்தி எழுதப்பட்ட இலக்கியங்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி கற்ற குடும்பமானால், நீங்கள் எழுதிய கதையை உங்கள் குடும்ப உறுப்பினர்கள் சிலரிடம் வாசிக்கக் கொடுங்கள். அவர்கள் உங்கள் நலனிலும் உங்கள் கதையின் தரத்திலும் அக்கறை உள்ளவர்கள். நல்ல கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லலாம். அவை பொருத்தமானவையாக இருந்தால் அவற்றையும் உள்ளடக்கி கதையைத் திருத்தி எழுதலாம். எக்காரணம் கொண்டும் வெளிஆட்களிடம் கதையை வாசிக்கக் கொடுக்காதீர்கள். அவர்களிற் சிலர் அக்கறை இல்லாமலும் உங்கள் உற்சாகத்தைக் கெடுக்கும் நோக்கத்துடனும் கதையை மட்டம் தட்டிப் பேசவும் கூடும்.

**விமர்சனம் :** ஒரு கதை பிரசுரிக்கப்பட்ட பிறகு அது பொதுச் சொத்தாகின்றது. அதுபற்றி யாரும் கருத்துக் கூறலாம். அவற்றில் நல்லவை இருந்தால் ஏற்றுக்கொள்ளுங்கள். அல்லாதனவற்றைத் தட்டிவிடுங்கள் - தூசி தட்டிவிடுவ போல!

ஒவ்வொரு படைப்பாளிக்குள்ளும் ஒரு விமர்சகன் இருக்கிறான். எழுத்தாளன் தான் எழுதுவதைப் பல முறை சுய விமர்சனம் செய்தே ஏழுதுகிறான். அதே நேரத்தில் தங்களை விமர்சகர்கள் என்று கூறிக்கொள்பவர்களும் சிலர் இருக்கிறார்கள். அவர்களுடைய எழுத்தை எழுத்தாளன் மிகுந்த எச்சரிக்கையுடன்தான் வாசிக்க வேண்டும். அனேகமான விமர்சககர்கள் இலக்கியம் படைக்க முயன்று தோற்றுப் போனவர்களே! எனவே அவர்கள் இலக்கியம் படைப்பவர்களை விழுத்த வேண்டும் என்ற காழ்ப்பு உணர்வுடனேயே கருத்துக்களை உதிர்ப்பார்கள். அவற்றில் நல்லன இருந்தால் ஏற்றுக் கொள்ளுங்கள். பிழையானவை பற்றிக் கவலைப்படாதீர்கள்!. அக் கருத்துக்கள் உங்களை ஒன்றும் செய்யமாட்டா!

**முடிவு :** சொல்ல வந்த கதையையோ கருத்தையோ சொல்லி முடிந்தவுடன் சிறுகதையை நிறுத்திவிட வேண்டும். ஒரு வரிகூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலதிகமாக எழுதக்கூடாது. சிறுகதைக்குப் பலவிதமான முடிவுகளைக் கொடுக்கலாம். கதையைத் திடுதிப்பென்று முடித்து விடலாம். அமெரிக்க எழுத்தாளர் "ஓஹென்றி" போல அதற்கு ஒரு எதிர்பாராத திருப்பத்தைக் கொடுத்தும் முடித்துவைக்கலாம். அதற்கு சிறுகதை மன்னன் என்று பாராட்டப்படும் "கை டீ மாப்பஸான்" எழுதிய "நெக்லெஸ்" நல்ல உதாரணம். அது கதைக்கு ஒரு எதிர்பாராத முடிவைக் கொடுப்பதுடன் ஒரு ஆழமான கருத்தையும் சொல்கிறது. எந்தவித திடீர்த் திருப்பங்களுக்கும் போகாமல், கதைக்கே உரிய இயல்பான முடிவையும் கொடுக்கலாம். சிறுகதைக்கு ஒரு முடிவைக் கொடுக்காமல் எல்லாவற்றையும் அந்தரத்தில் தொங்கவிட்டும் முடிக்கலாம். வாழ்க்கையில் எல்லாப் பிரச்சினைகளும் தீர்த்து வைக்கப்படுகின்றனவா? எங்களது சமகால வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்ற சிறுகதையும் அப்படித்தான். அந்த முடிவே பலரது சிந்தனைகளைத் தூண்டிவிடும். அவரவரும் தனக்குப் பிடித்தமான முடிவைக் கொடுப்பர்.

**ஏன் எழுதுகிறோம்? :** எங்களது கருத்துக்களை கடுதாசியில் பதித்து மற்றவர்களுக்கு வாசிக்கக் கொடுக்கவே எழுதுகின்றோம். அவர்கள் அதைவாசித்து எங்களைக் கவிஞன் என்றோ, சிறுகதை எழுத்தாளன் என்றோ, நாடகாசிரியன் என்றோ பாராட்ட வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறோம். அதில் சுயநலமும் கலந்துதான் இருக்கிறது.

தனது எழுத்தை அச்சில் பார்க்க வேண்டும் என்ற ஆசை யாருக்குத்தான் இல்லை? எனக்கு இருந்தது. எழுதக்கூடியவர்கள் எல்லோருக்கும் இருக்கும் இயல்பான ஆசைதான். நான் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பொழுதே நல்ல கட்டுரைகள் எழுதி ஆசிரியர்களது பாராட்டுக்களைப் பெற்றவன். அவற்றை "சுதந்திரன்", "வீரகேசரி"ப் பத்திரிகைகளுக்கும் அனுப்பினேன். அவை பிரசுரிக்கப்பட்ட பொழுது பார்த்து மகிழ்ந்தேன். அதனால் மேலும் மேலும் எழுத வேண்டும் என்ற ஆர்வம் பெருகிற்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிதாக ஒன்றைச் செய்ய வேண்டும் என்ற உந்துதல் எல்லோரது உள்ளத்திலும் இருக்கிறது. அதனால்தான் ஒரு கலைஞன் ஓவியம் தீட்டுகிறான். பாடகன் பாடுகின்றான். ஒரு பெண் நடனமாடுகிறாள். ஒரு தையல்காரன் அழகிய ஆடைகளைத் தைக்கிறான். ஒருவன் வீட்டைக் கட்டுகிறான். இது ஒரு பிள்ளையைப் பெற்று வளர்த்து, கல்வி கற்பித்து, சமூகத்திற்குப் பயனுள்ளவனாக வளர்த்தெடுப்பதற்கு ஒப்பானது. ஆசிரியர் ஒரு பிள்ளைக்குக் கற்பித்து அவனை ஆளாக்குவதற்கு ஒப்பானது. புதிதாக ஒன்றைப் படைக்கும் இன்பத்திற்கு ஈடேது? இணையேது?

இன்று உலகம் முழுவதிலும் அதிகம் எழுதப்படுகின்ற வாசிக்கப்படுகின்ற இலக்கிய வகை சிறுகதை! பாடசாலை மாணவர்கள் எல்லோருக்கும் சிறுகதை கற்பிக்கப்படுகின்றது. மாணவர்கள் பல சந்தர்ப்பங்களிலும் சிறுகதை எழுதும்படி கேட்கப்படுகிறார்கள்.

நான் 65 சிறுகதைகளும் "சிறுகதை எழுதுவது எப்படி?" என்ற நூலும் எழுதியவன். மாணவர்களுக்காகவே இந்தச் சிறிய கட்டுரையை எழுதினேன்.

உதயன்.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுரை

## மேற்குலக நாடகத்தின் ஒரு சுருக்கமான வரலாறு

**தொடர்ச்சியான நாடக வளர்ச்சி :**

மேற்குலகில் நாடகம் முதன் முதலில் எப்பொழுது ஆடப்பட்டது எப்படி ஆடப்பட்டது என்பதையே அறிய முடியாமல் உள்ளது. ஆனால் அது தொடர்ச்சியாக வளர்ந்து வந்திருக்கிறது என்பதை மட்டும் அறியக்கூடியதாக உள்ளது. அது காலத்திற்குக் காலம் மாற்றம் அடைந்தே வந்துள்ளது. ஒவ்வொரு காலத்திலும் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிக்கும் நாடகங்கள் எமக்குக் கிடைக்கின்றன. முதன் முதலில் கிரேக்கரே திறமான நாடகங்களை எழுதி நடித்தனர். கி.மு. ஐந்தாம் ஆறாம் நூற்றாண்டிலிருந்து அவர்களது நாடகங்கள் சில எமக்குக் கிடைக்கின்றன. கிரேக்கரிலிருந்து இந்த நாடக வளர்ச்சியை ஒரு சங்கிலித் தொடராகக் காணலாம். அதன் பிறகு ரோம சாம்பிராச்சியத்தில் நாடகங்கள் ஆடப்பட்டன. அவர்களுடைய நாடகங்களில் கிரேக்க நாடகங்களின் செல்வாக்கை நிறையக் காணலாம். அந்த வகை நாடகங்களின் செல்வாக்கு ரோமிலிருந்து ஐரோப்பாக் கண்டம் முழுவதும் பரவிற்று.

ஐரோப்பாக் கண்டத்தில் கிறீஸ்தவ மதம் பரவிய பின்பு, முதலில் மதப் பிரசார நாடகங்களே நடிக்கப்பட்டன என்பதற்குச் சான்றுகள் கிடைக்கின்றன. அவை சேர்ச் வளாகங்களிலேயே நடிக்கப்பட்டன. இந்த மத - நாடக உறவு, இன்றளவும் நீடிக்கின்றது.

காலக்கிரமத்தில் நாடகக்காரர்கள் மதத்தின் பிடியிலிருந்து விடுபட்டு, சுதந்திரமாக நாடகங்களை எழுதி நடிக்கத் தொடங்கினர். அதன் பிறகே நாடக வளர்ச்சியில் புதுமையும், விறுவிறுப்பும், வேகமும் ஏற்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மன்னராட்சிக் காலம். மன்னரையும் பிரபுக்களையும் வைத்தே நாடகங்கள் எழுதப்பட்டன. மன்னரும் பிரபுக்களுமே நாடக பாத்திரங்களாக வந்தனர். அவர்கள் நடத்திய போர்கள், அடிதடிகள், காதல்கள், களியாட்டங்களே நாடகங்களில் சித்திரிக்கப்பட்டன. சாதாரண பொது மக்களும் அவற்றை விரும்பிப் பார்த்து மகிழ்ந்தனர்.

## மகாகவி ஷேக்ஸ்பியரது நாடகங்கள் (கி.பி. 1564 – 1616)

ஷேக்ஸ்பியர் ஒரு தலை சிறந்த நாடக மேதை. இன்றளவும் நிலைத்து நிற்கும் பல அற்புத நாடகங்களைப் படைத்தவர். ஆனால் அவரால் கூட காலத்தை விஞ்சிய நாடகங்களைப் படைக்க முடியவில்லை. மற்றவர்கள் சென்ற வழித்தடத்திலேயே அவரும் சென்றார். மன்னர்களையும் பிரபுக்களையும் வைத்தே நாடகங்கள் எழுதினார்.

அவரது காலத்தில் ஆங்கில மொழியில் ஏராளம் நாடகங்கள் இருந்தன. அவர் அவை எல்லாவற்றையும் படித்தார். அவை ஒவ்வொன்றிலும் தனக்குப் பிடித்த அம்சங்களை எடுத்து தான் எழுதிய நாடகங்களில் பயன்படுத்தினார். பழைய கதைகள், வரலாற்றுச் செய்திகளைக்கூட நாடமகமாக்கினர். இரவல் வாங்க ஷேக்ஸ்பியர் தயங்கவில்லை. ஆனால் தான் தொட்டது எல்லாவற்றையும் பொன்னாக மாற்றினார்.!

ஷேக்ஸ்பியர் ஒரு சிறந்த கவிஞர். அழகான கவிதை நடையில் நாடகங்கள் எழுதினார். ஆனால் அவரது கவிதையினால் அவரது நாடகங்கள் புகழ் பெறவில்லை. மாறாக அவரது நாடகங்களது சிழறப்பினாலேயே அவர் ஒரு சிறந்த கவிஞர் என்பதை உலகம் அறிந்து கொண்டது. அவரது காலத்திலேயே யோன்சன், மாளோவ் போன்ற பல பெரிய கவிஞர்கள் நாடகம் எழுதிக் கொண்டிருந்தனர். எல்லோரையும் விட ஷேக்ஸ்பியரே சிறந்த கவிஞர் என்றும் சிறந்த நாடகாசிரியர் என்றும் பாராட்டப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது காலத்தில் ஆங்கில நாடகம் உச்சக் கட்டத்தை அடைந்தது. அவருக்குப் பிறகு ஆங்கில நாடகம் மட்டுமல்லாது, ஐரோப்பிய நாடகமே தரத்திலும் செல்வாக்கிலும் இறங்கிக் கொண்டு சென்றது. எல்லோரும் ஒரே வழித்தடத்திலேயே சென்றனர். எவரும் புதுமைகள் செய்யவில்லை.

## ஹென்றிக் இப்சன் நாடகங்கள் (கி.பி 1828 0 1906)

மகாகவிஷேக்ஸ்பியருக்குப் பின்பு நாடக வானில் தோன்றிய மாபெரும் நட்சத்திரம் நோர்வேஜியரான ஹென்றிக் இப்சன் ஆகும். அவரும் நீண்ட காலமாக மன்னர்களையும் பிரபுக்களையும் வைத்து நாடகம் எழுதிக் கொண்டிருந்தார். ஞானோதயம் வந்தவர் போலத் திடீரென்று "இந்த நாடகங்களுக்கும் மக்கள் வாழ்க்கைக்கும் தொடர்பில்லை. நாடகம் என்பது மக்களது சமகால வாழ்க்கையைச் சித்திரிக்க வேண்டும். அத்தகைய நாடகங்களால்தான் நாடகம் சிறக்கும்; மக்களும் அதிக பயன்பெறுவார்கள்". என்று கூறி, ஒரு புதிய வகை நாடகம் எழுதத் துவங்கினார். நாடகத்தில் அவர் செய்த புதுமைகள் சுருக்கமாக:

1. அரசர்களுக்கும் பிரபுக்களுக்கும் விடை கொடுத்து அனுப்பிவிட்டு, சமகாலச் சாதாரண மனிதர்களையே நாடக பாத்திரங்களாக்கினார்.
2. மக்களது அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளே நாடகங்களில் அலசப்பட்டன.
3. கவிதை நடையை முற்றாகக் கைவிட்டு, மக்களது சாதாரண பேச்சு வழக்கிலேயே பாத்திரங்களை உரையாட வைத்தார்.
4. சமூக சீர்திருத்தத்திற்குத் தேவையான ஆழமான கருத்துக்களை துணித்து ஆணித்தரமாகக் கூறி, ஐரோப்பாக் கண்டத்தையே சிந்திக்க வைத்தார்.
5. முதல் முதலாக உளவியல் கருத்துக்கள் நாடகத்தில் புகுத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. அடிதடிகளுக்கும் போர்களுக்கும் முற்றப்புள்ளி வைத்துவிட்டு, பாத்திரங்களை அவற்றிற்கு வேண்டிய கருத்துக்களை ஆராய வைத்தார்.
7. அரங்கச் செயற்பாடுகளிலும் யதார்த்தப் பண்புகளைப் புகுத்தினார்.

இவையே நவீன நாடகத்தின் பண்புகளும் ஆகும். இப்சன் செய்தது ஒரு புரட்சி. அதன் மூலம் நாடகத்திற்குப் பத்துயிர் அளித்ததுடன், மக்களையும் அவற்றில் இருந்து உச்சப் பயன்பாடடையச் செய்தார். அதனால்தான் அவர் **நவீன நாடகத்தின் வெளிச்ச வீடு** என்று பாராட்டப்படுகிறார்!.

அவரது நாடக வகைக்கும் அவர் கூறிய கருத்துக்களுக்கும் ஐரோப்பாக் கண்டத்தில் பெரும் பெரும் எதிர்ப்புக்கள் கிளம்பின. கண்டனங்களைக் கண்டு அவர் கலங்கவில்லை. தான் சரி என்று கண்ட வழியிலேயே தொடர்ந்து நாடகங்களை எழுதி அரங்கேற்றினார். ஐரோப்பாதான் மெல்ல மெல்ல அவரது வழிக்கு வந்தது!

"ஒரு பொம்மையின் வீடு" "பொது மக்களின் எதிரி" "சமுதாயத்தின் தூண்கள்" உட்பட அவர் எழுதி அரங்கேற்றியவை எல்லாம் பெரிய நாடகங்களே. அவற்றை ஒரு நாவலைப் போல வாசித்து இன்புறலாம். அந்த நடகங்களில் பலவற்றை நான் பல முறை வாசித்தேன், யாழ் நூலகத்தில், அது எரிக்கப்படுவதற்கு முன்பு.

அதன் பின்பு, லியோடாஸ்ஸ்டாய், அன்ரன் செக்காவ், மாக்சிம் காரக்கி, பேர்நாட்ஷா, யோன் கல்ஸ்வோதி உட்பட பெரிய நாடகாசிரிர்கள் எல்லோரும் இப்சன் காட்டிய வழியிலேயே நாடகங்களை எழுதி அரங்கேற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களில் பெர்நாட்ஷா ஒருபடி மேலே போய் "நான் இப்சனது Cecile". அவரைப் பின்பற்றி நாடகம் எழுதுபவன். என்று வெளிப்படையாகவே சொல்லிக் கொண்டார். இப்சனது நாடகங்களைப் பாராட்டி பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதினார். அவரது நாடக முறைகளையும் கொள்ளைகளையும் விளக்கி **"இப்சனது கொள்கைகளின் சாராம்சம்"** என்று ஒரு நூலிலே எழுதி வெளியிட்டார்.

நோர்வே அப்பொழுது அறுபது லட்சம் மக்களை மட்டுமே கொண்ட ஒரு சிறிய வட ஐரோப்பிய நாடு. அவரது நாடகங்களின் செல்வாக்கு மெல்ல மெல்லத்தான் ஐரோப்பாக் கண்டத்தில் பரவியது. பெர்நாட்ஷா செய்த பிரசாரமே இப்சனை உடனடி-யாகவே உலகப் புகழ்பெற வைத்தது!

இப்சன் செய்தது ஒரு புரட்சி. அவருக்குப் பின்பு ஐரோப்பாக் கண்டத்தில் நாடகம் ஒரு புது வழியில் செல்லத் தொடங்கியது. இன்று உலகம் முழுவதிலும் அவர் தந்த நாடக வகையே சிறந்த நாடக வகையாகக் கருதப்படுகிறது.!

இந்தப் பெரிய நாடக மேதைக்கு நோபல் பரிசு வழங்கப்படவில்லை என்றால் வியப்பாக இல்லையா? காரணம் பொறாமை தான். நோபல் பரிசை வழங்குபவர்கள் சுவீடின் நாட்டவர்கள். நோர்வே சுவீடனுக்குப் பக்கத்தில் உள்ள ஒரு சிறிய நாடு. ஒரு சிறிய நாட்டு நாடகாசிரியருக்கு நோபல் பரிசு வழங்குவதா என்ற பொறாமையில் தான் அவர்கள் இப்சனுக்குப் பரிசு வழங்கவில்லை. அவர்கள் பெரிய நாடுகளின் எழுத்தாளர்-களுக்குப் பரிசில்கள் வழங்கி, அந்த நாடுகளில் செல்வாக்குப் பெறவே விரும்பினர். சுவீடிஷ் அக்கடமியினர் புறக்கணித்ததால் கிப்சனது புகழ் மங்கிவிட்டதா? அவரது பெயர் சுடச்சுடரும் பெனபோல் உலகம் முழுவதிலும் பிரகாசிக்கின்றது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மொழியில்.....

தமிழ் மொழியில் நாங்கள் அந்த வகை நாடகத்தை நவீன நாடகம், இயல்பு நாடகம், மண்வாசனை நாடகம் என்று பல பெயர்களால் அழைக்கின்றோம். இந்தியாவில் ஏதேதோ நாடக வகைகளையெல்லாம் போற்றி வளர்க்கிறார்கள். நவீன நாடகம் நன்றாக வளர்ந்ததாகத் தெரியவில்லை.

இலங்கையில் பேராசிரியர் கணபதிப்பிள்ளையே முதன் முதலாக தமிழ் மொழியில் நவீன நாடகங்கள் எழுதினார். அவர் எழுதிய நாடகங்கள் 8. அவரைப் பின்பற்றி நான் எழுதிய நவீன நாடகங்கள் 515. இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவையும் முஸ்லிம் சேவையும் ஒவ்வொரு வாரமும் புதிய நவீன நாடகங்களை தயாரித்து ஒலிபரப்பி வருகின்றன. இருந்தாலும் இலங்கையிலும் நவீன நாடகம் நன்கு வளரவில்லை. தமிழ் மக்களுக்கு அந்த நாடகத்தின் சிறப்புத் தெரியவில்லை.

இலங்கைத் தமிழ் பேசும் பிள்ளைகளுக்கு நவீன நாடகம் கட்டாயம் கற்பிக்கப்பட வேண்டும் என்று தீவிரமாகப் பிரசாரம் செய்து வருகிறேன். பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதியும் நூல்கள் வெளியிட்டும் இருக்கிறேன்.

## பெர்நாட்ஷவின் நாடகங்கள் (1856 – 1950)

பெர்நாட்ஷா முதலில் நாடகங்களைப் படித்தார். அந்தக் காலத்தில் உலகின் தலைசிறந்த நாடகங்களையெல்லமாம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வைத்திருந்தார்கள். அதனால் அவருக்கு ஷேக்ஸ்பியரையும் விட அதிக நாடகங்கள் கிடைத்தன, படிப்பதற்கு.

பின்பு பத்திரிகைகளுக்கு நாடக விமர்சனங்கள் எழுதத் தொடங்கினார்.

சினிமாப் படம் வருவதற்கு முந்திய காலமானதினால் இங்கிலாந்து நாடு முழுவதிலும் பல நாடகங்கள் அரங்கேறிக் கொண்டிருந்தன. தனக்குப் பிடித்த இப்சனது கொள்கைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துக் கொண்டு, அந்த நாடகங்களையெல்லாம் காரசாரமாக விமர்சித்தார். அவற்றின் மூலம் பல நாடகாசிரியர்கள் நாடகத்தயாரிப்பாளரது வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டார். அவர்கள் முதலில் அவரைத் திட்டினாலும், காலக் கிரமத்தில் அவர்களிற் பலர் ஷாவின் விமர்சனங்களையும் சரி என ஏற்றுக்கொண்டனர்.

படிப்பினாலும் நாடக விமர்சனங்கள் எழுதியதனாலும் ஷாவின் நாடகத்துறை அறிவு நன்றாக வளர்ந்திருந்தது. அவர் இப்சனைப் பின்பற்றி சமூக நாடகங்களையே எழுதினார். தனக்குப் பிடித்த கருத்துக்களை நாடக பாத்திரங்களை உரையாட வைத்தார். குடும்ப வாழ்க்கை, பொருளாதார ஏற்றத்தாழ்வு, தொழிலாளரது பிரச்சனைகள், வர்க்க பேதங்கள், ஒழுக்கம், அரசியல் என்று பல விடயங்கள் அவரது நாடகங்களில் வாதிக்கப்பட்டன. அவர் தொடாத சமூகப் பிரச்சினைகளே இல்லை எனலாம். அதன் மூலம் கருத்து நாடகம் (Plays of I deas) என்றொரு புதிய நாடக வகையையே ஆங்கில மொழியில் தோற்றுவித்தார். "அவரது நாடகங்கள் வெறும் கலந்துரை யாடல்களே. மேடையில் நடக்கும் விவாதங்களே!" என்று பலர் அவற்றைக் கண்டித்தனர். அக் கண்டனங்களில் கொஞ்ச உண்மையும் உண்டு. அவரது நாடகங்களில் செயல்களும் நடமாட்டங்களும் குறைவு. தொடக்கத்தில் தோற்றுவாய் வரும். சிக்கலையும் புகுத்துவார். சிக்கல் வளர்ந்து இறுகி உச்சக்கட்டத்தை அடையும். அதன் பிறகு சிக்கல் அவிழ்ப்பு, வீழ்ச்சி, சமநிலை ஆகிய கட்டங்கள் வரா. மேடையில் பாத்திரங்கள் தொடர்ந்து கருத்துக்களை விவாதித்துக் கொண்டிருக்கும். இங்கிலாந்தின் கல்வி கற்ற "ஆடியன்ஸ்" கதிரைகளில் அசையாமல் இருந்து அந்த விவாதங்களை ரசிக்கும்!

கண்டனங்களை அவர் பொருட்படுத்தவில்லை. தொடர்ந்து அந்த வகை நாடகங்களையே எழுதி வெற்றியும் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷா தனது. பாத்திரங்களை அவற்றிற்கே உரிய இயல்பான பேச்சு வழக்கு மொழியிலேயே உரையாட வைத்தார். கடும் கொச்சை கலப்பதில்லை. அடுக்கு மொழிகள், அடை மொழிகள், உவமை உருவகங்கள், குறியீடுகள், படிமங்கள் என்று அலங்காரங்களை அடுக்கிக் கொண்டு போவதில்லை. தேவை இல்லாத எதையும் உரையாடலில் சேர்க்கமாட்டார். நேரடியாக விடயத்திற்கு வருவார். பாத்திரங்கள் தெளிவாக ஆணித்தரமாக தங்கள் கருத்துக்களைக் கூறும். விடயம் நன்கு விளங்கப்படுத்தப்படும். அவரது உரையாடல்கள் மேடைப் பேச்சுப் போலவும் அதே நேரத்தில் சிறந்த எழுத்து மொழி போலவும் இருக்கும். ஆங்கில மொழியில் இதுவரை எந்த ஒரு எழுத்தாளனும் அப்படி ஒரு திறமான மொழி நடையைக் கையாண்டதில்லை.! ஷாவின் நாடகங்கள் வெற்றி பெற்றதற்கு, அவரது மொழிநடையும் ஒரு காரணம்.

உரையாடலில் கிண்டலும் நகைச்சுவையும் நிறைய இருக்கும். சமூகக் குறைபாடுகளைக் குத்திக் குத்திக் காட்டுவார். சில சமூக அங்கத (Satire) நாடகங்கள். அதுவும் ஒரு புதிய நாடக வகையே!

பல்கலைக்கழகப் பட்டம் பெறாத ஷா, அவரது காலத்தில் சிறந்த நாடகாசிரியராக மட்டுமல்லாது, பல வகைத் திறமைகளும் கொண்ட ஒரு மாமனிதராகவும் கருதப்பட்டார்!

## ஷேக்ஸ்பியரும் பெர்நாட்ஷாவும் :

மகாகவி ஷேக்ஸ்பியரையும் அறிஞர் பெர்நாட்ஷாவையும் ஒப்பிட்டு ஆராய்ந்தால், அவர்களது நாடகங்கள் பற்றித் கூடுதலாக அறியலாம். ஆனால் அவர்களில் யார் சிறந்த நாடகாசிரியர் என்று அறிய முயற்சிப்பது பொருத்தமில்லை. வீண் வேலை! அவர்கள் இருவரும் வாழ்ந்த சமுதாயம், காலம், அவர்கள் எழுதிய நோக்கம் எல்லாம் வேறு வேறானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷேக்ஸ்பியர் வாழ்ந்தது மன்னர் ஆட்சிக்காலம். மன்னர்களதும் பிரபுக்களதும் போர்களும் அடிதடிகளும் குழப்பங்களும் காதல் களியாட்டங்களுமே இங்கிலாந்து நாட்டில் நிறைந்திருந்தன. அந்தச் சமூகத்தையே அவர் படம் பிடித்தார். சமூகத்தில் நடப்பவற்றை மேடையில் காட்டினார்.

மன்னரும் பிரபுக்களுமே ஷேக்ஸ்பியரை ஆதரித்தனர். அவர்களுக்கு நாடகவிருந்து அளிப்பதற்காகவும் தனது நாடகக் கழுவினர் நடிப்பதற்கு நல்ல நாடகங்கள் கொடுப்பதற்காகவுமே அவர் நாடகங்கள் எழுதினார்.

ஷேக்ஸ்பியர் எழுதியது அழகான கவிதை நடை. ஆனால் கடினமானது. ஆங்கில மொழி மூலம் கல்வி கற்ற என் போன்றவர்களுக்கே உரை நூல்களின் உதவி இன்றி, அவர் சொல்பவை எல்லாவற்றையும் புரிந்து கொள்ள முடியாது. கல்வி அறிவு அதிகம் பரவாத அந்தக் காலத்தில் சாதாரண பொது மக்கள் எல்லோரும் அவரது கவிதையை விளங்கி அவர் சொல்வது எல்லாவற்றையும் புரிந்து கொண்டு நாடகத்தை ரசித்திருப்பார்கள் என்று சொல்ல முடியாது.

ஷேக்ஸ்பியர் படைத்த பாத்திரங்கள் தத்ரூபமானவை. உயிர்த்துடிப்புளவை. அந்தப் பாத்திரங்களது சில குணப் பண்புகளும் நடத்தைகளும் இந்தக் கால மனிதர்களுக்கும் பொருந்தும். அவை நெஞ்சை விட்டு அகலாதவை. ஒரு நல்ல பாத்திரத்தை நினைத்தால், அந்த நாடகம் முழுவதுமே ஞாபகம் வரும். பெர்நாட்ஷாவினால் அப்படி ஒரு பாத்திரத்தைக்கூடப் படைக்க முடியவில்லை.

ஷேக்ஸ்பியர் தமது துன்பியல் (tragedy) நாடகங்களால் புகழ் பெற்றார். பெர்நாட்ஷா எழுதியவை எல்லாம் இன்பியல் (Coedy) நாடகங்களே. அவர் துன்பியல் நாடகமாக எழுத முயன்ற "டாக்டரின் திண்டாட்டம்" நாடகம் கூட அவரது கிண்டலலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாடலால் இன்பியல் நாடகமாகிவிட்டது. துன்பியல் நாடகம் எழுதும் கலை அவருக்குக்கைவரவே இல்லை!

கல்வி அறிவு நன்கு பரவி நல்ல விழிப்புணர்வு ஏற்பட்டுவிட்ட சனநாயக சமூதாயத்தில் வாழ்ந்த ஷா, எளிய இனிய பேச்சுவழக்கு மொழியில் பொது மக்களுக்கு நாடகம் எழுதினார். "சில நல்ல கருத்துக்களை பொது மக்களுக்கு வற்புறுத்திக்கூறுவதற்காவே நான் நாடகம் எழுதுகிறேன்" என்று வெளிப்படையாகவே கூறினார். பொது மக்களுக்கு வேண்டிய பல நல்ல கருத்துக்களைச் சொல்லி அவர்களைச் சிந்திக்கவும் வைத்தார்!

நாடகம் எழுதுவதற்கு ஒரு நோக்கம் (Purpose) இருக்க வேண்டும். ஷேக்ஸ்பியர் ஒரு நோக்கமும் இல்லாமல் நாடகம் எழுதினார் என்று அவரைச் சாடினார் ஷா. ஷேக்ஸ்பியரது நாடகங்களை அப்படிக் குறைகூறுவது பிழை. ஷேக்ஸ்பியர் எந்தக் கருத்தையும் நெற்றிப் பொட்டில் அடித்தாற் போலச் சொல்வதில்லை. அவரது நல்ல நாடகங்கள் - குறிப்பாக துன்பியல் நாடகங்களில் எக் காலத்திக்கும் பொருத்தமான பல நல்ல கருத்துக்கள் பாலிற்படு நெய் போலச் செறிந்து கிடக்கின்றன.! உதாரணத்திற்கு மக்பெத், ஓதெல்லோ, ஹாம்பெற், றோமியோவும் ஜுலியற்றம் நாடகங்களைக் கூறலாம். வாசிக்கும் பொழுதோ, நாடகம் பார்க்கும் பொழுதோ சிந்தித்தால் வாசகர்கள் / பார்வையாளர்கள் அக் கருத்துக்களை உய்த்துணராலம்!.

***

**உதயன்**

**நாடகம் கற்கும் மாணவர்களுக்காகவும்தான் இந்தக் கட்டுரையை எழுதினேன். அவர்கள் கற்பதற்கு எவ்வளவு இருக்கிறது என்று சுட்டிக்காட்ட!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை

# நல்ல இலக்கியங்களை இனங்காண்பது எப்படி?

**இலக்கியங்கள்:** பழங்காலத்தில் காப்பியங்களையும், புராணங்களையும் பெரும் பெரும் புலவர்கள் இயற்றினர். கவிதை நடையில் பாடப்பட்ட அந்த இலக்கியங்கள் தேவர்கள், அசுரர்கள், மன்னர்களது வாழ்க்கையைப் பொருளாகக் கொண்டவை. நாங்கள் அவை பற்றிச் சிந்தித்து சொல்வதற்கு ஒன்றும் இல்லை.

மேற்கத்தைய இலக்கியங்களின் செல்வாக்கினால், தமிழ் மொழியிலிலும் இன்று சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள் என்று நவீன இலக்கியங்கள் எழுதப்படுகின்றன. இன்று அந்த இலக்கியங்கள் மட்டுமே எழுதப்படுகின்றன. எங்களது சமகால வாழ்க்கையைச் சித்திரிக்கும் அந்த இலக்கியங்கள் பற்றிச் சிந்திப்பது பயனுடையதாக அமைவதுடன், அந்த இலக்கியங்களையும் நன்கு புரிந்து கொள்ளவும் உதவும்.

**கதை :** இந்த நவீன இலக்கியங்கள் எல்லாவற்றிலும் ஒரு கதை இருப்பது அவசியம். அதுதான் அடிப்படை. கதை இல்லாத இலக்கியம் சுவைக்காது. கதை சமகாலத்ததாக இருந்தால் தான் மக்கள் அதை ஆர்வத்துடன் வாசிப்பர். வெறும் கதை பின்பு கதைக் கோப்பாக (Plot) மாற்றப் பட வேண்டும். அது எந்த வகை இலக்கியமாக இருந்தாலென்ன அதில் வரும் நிகழ்ச்சிகளை காரணகாரியத் தொடர்புடன் கூறுவது கதைக்கோப்பு. நாங்கள் படைக்க இருக்கும் இலக்கிய வகைக்கு ஏற்ப கதைக் கோப்பை அமைத்துக் கொள்ளலாம்.

**கருத்து :** வெறும் கதை சப்பென்று இருக்கும். அதில் ஒரு கருத்தோ, பல கருத்தக்களோ வரவேண்டும். அந்தக் கருத்துத்தான் கதைக்கு ஒரு அர்த்தத்தைக் கொடுக்கும். அந்தக் கருத்து மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைக்கு வேண்டிய நல்ல கருத்தாக இருப்பது அவசியம். உதாரணமாக அன்பு காதல், நட்பு, உதவி செய்தல், தியாகம் செய்தல்.... பிழையான கருத்தைச் சொல்பவை நல்ல இலக்கியங்கள் ஆகா!

**பாத்திரப் படைப்பு:** அடுத்த முக்கியமான அம்சம் பாத்திரப்படைப்பு. கதைக்காகவே பாத்திரங்கள் படைக்கப்பட்டாலும் அவையே கதையை நடத்துகின்றன. பாத்திரங்கள் மூலமே எழுத்தாளன், தான் சொல்ல விரும்பியவற்றைச் சொல்கிறான். பாத்திரங்கள் நாங்கள் சமூகத்தில் சந்தித்து பேசிப் பழகும் மாந்தர் போல இருத்தல் வேண்டும்.அப்பிடியான பாத்திரங்களையே மக்கள் விரும்புவர். அவற்றிற்கு என்ன நடக்கப் போகிறது என்று அறியும் ஆவலில், அந்த இலக்கியத்தையே ஆர்வத்துடன் வாசிப்பர். அது நாடகமானால் வாசகர்கள் / பார்வையாளர்கள் அப் பாத்திரங்களுடன் ஒன்றி நின்று நாடகத்தை நன்கு ரசிப்பர். நாடகமும் சிறக்கும். நம்பகத்தன்மை அற்ற பாத்திரங்களை மக்கள் அலட்சியம் செய்வர். ஒரு இலக்கியத்தில் கதையா பாத்திரமா சிறந்தது என்று கேட்டால், பாத்திரங்களே சிறந்தவை! வாசகர்களைக் கவர்பவை நல்ல பாத்திரங்களே! ஒரு கதையை வாசித்து முடித்த பிறகு - நீண்ட காலத்தின் பின்பும் கதை மறந்து போனாலும், எமது நினைவில் நிற்பவை அதில் வந்த நல்ல பாத்திரங்களே! எழுத்தாளர்கள் பாத்திரங்களை நல்ல பண்புகள் கொண்டனவாகவும் உயிர்த் துடிப்புள்ளனவாகவும் படைத்தால், அந்த இலக்கியம் சிறக்கும்.

**சூழல் சித்திரம் :** நவீன இலக்கியங்க்ளில் சூழ்நிலையும் அழகாக அமைய வேண்டும். அது கதையின் பின்னணி மட்டும்மல்ல. கதை, அதில் வரும் பாத்திரங்கள், அவற்றின் நடைமுறை, அவை பேசும் பொருள்கள், அவை பேசப்படும் முறை, ஆசிரியரது கதை சொல்லும் திறன், எல்லாம் இதில் அடங்கும். நன்றாக அமைந்த சூழ்நிலை, கதைக்கு ஒரு நம்பகத் தன்மையையும் கொடுத்து அதைச் சிறப்பிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உணர்ச்சி:** உணர்ச்சியில் பிறப்பது இலக்கியம். அது வாசகர்களை உணர்ச்சியில் மூழ்கடிக்க வேண்டும். அன்பு, தயை, தாட்சண்யம், காதல், தியாகம் போன்ற நல்ல உணர்ச்சிகளை உள்ளத்தில் கிளர்ந்தெழச் செய்பவையே நல்ல இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன. மாறாக எரிச்சல், பொறாமை, காமக்குரோதம், கொலை வெறி போன்ற தீய உணர்ச்சனை வளர்ப்பவை நல்ல இலக்கியங்களாகக் கொள்ளப்பட மாட்டா.

**கதை சொல்லும் திறன்:** இவை எல்லாம் இருந்தாலும் ஆசிரியரிடத்தில் கதை சொல்லும் திறன் இல்லையாயின் அந்த இலக்கியம் சிறப்புற அமையாது. இதில் ஆசிரியரது மொழி அறிவும் தான் எடுத்துக் கொண்ட இலக்கியத்திற்கேற்ப மொழியைக் கையாளும் திறனும் அடங்கும். இதையே ஆசிரியரது எழுத்து நடை என்கிறோம்.

**எழுத்துநடை** (Style) : ஆசிரியருக்கு ஆசிரியர் வேறுபடும். அதில் தான் அவனது ஆளுமை வெளிப்படும். நவீன இலக்கியங்களில் உரையாடலைக் கையாள்வது ஒரு தனிக்கலை. அது பாத்திரங்களது இயல்பான பேச்சு வழக்குப் போல இருப்பதுடன் கொச்சை கலவாத அழகான மொழி நடையாகவும் மிளிர வேண்டும். எல்லா வகை இலக்கியங்களிலும் உரையாடல் வருமாயினும் நாடகத்தில் அதுவே எல்லாம். நாடகாசிரியன் தான் சொல்ல வந்த கருத்துக்களைச் சொல்வதுடன் அதன் மூலம் பாத்திர வார்ப்பும் செய்து விடுகிறான். வீண் ஆடம்பரங்கள் இன்றி மொழியை அளவாகவும் பொருத்தமாகவும் கையாண்டு அழகாக எழுத வேண்டும். அத்தகைய நடையே வாசகர்களைக் கவரும்!.

இன்னும் எவ்வளவோ அழகுகள் இருக்கின்றன.

மேலே கூறப்பட்ட அம்சங்கள் கொண்டவையே நல்ல இலக்கியங்களாகக் கொள்ளப்படுகின்றன. இவற்றில் ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்தாலும் அதற்கேற்ப அந்த இலக்கியத்தின் தரமும் இறங்கும். அதே நேரத்தில் எல்லா இலக்கியங்களிலும் எல்லாக் கூறுகளும் வரவேண்டும் என்றில்லை. சில இலக்கியங்களில் சில கூறுகள் இரா. சிலவற்றில் சில அம்சங்கள் குறைவாக இருக்கும். அது நீங்கள் படைக்க எடுத்துக் கொண்ட இலக்கியத்தைப் பொறுதத்து என்பதையும் மறந்துவிடக்கூடாது.

இலக்கியத்தில் இன்னும் எவ்வளவோ அழகுகள் இருக்கின்றன. அவை எல்லாவற்றையும் எழுத்தில் வடித்துவிட முடியாது. அவற்றைப் படைக்கும் போதும் வாசிக்கும் போதும் நீங்களே உணர்வீர்கள். மேலே கூறப்பட்ட அம்சங்களே, அடிப்படையானவை. அவற்றைக் கொண்டே நல்ல இலக்கியங்கள் இனங்காணப்படுகின்றன.

உதயன்

**இலக்கியங்களைச் சரியாக மதிப்பிடத் தெரியாமல், மனம் போனபடி மதிப்பீடு செய்து, தங்களுக்குப் பிடித்தவர்களுக் கெல்லாம் பரிசுகளை வழங்குபவர்களுக்காகவும் தான் இந்தக் கட்டுரையை எழுதினேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுரை

# நாடகம் எழுதுவது எப்படி?

**ஏன் எழுதுகின்றேன்:** நாடக வகைகள் நூற்றுக்கணக்கின. அவற்றில் எங்களது சமகால வாழ்க்கையைச் திறம்படச் சித்திரிக்கின்ற நவீன நாடகமே சிறந்தது. தமிழ் மொழியில் அந்த நாடத்தை யதார்த்த நாடகம், இயல்பு நாடகம், மண்வாசனை நாடகம், என்று பல பெயர்களால் அழைப்பர். இலங்கையில் நாங்கள் அதை இலங்கை மண்வாசனை நாடகம் என்று அழைப்போம். அந்த வகை நாடக நூல்கள் தமிழில் குறைவு. அவற்றை இலங்கையரால் மட்டுமே எழுத முடியும். எனவே அந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்காகவே இந்தக் கட்டுரையை எழுதுகிறேன்.

பாடசாலை தமிழ்த்தினப் போட்டிகள் சம்பந்தமாக எங்கள் கல்வித் திணைக்களம் ஒரு மேலதிக சுற்றுநிருபத்தை, 2011ஆம் ஆண்டு எல்லா பாடசாலைகளுக்கும் அனுப்பிவைத்தது. அதில் மாணவர்களை சமூக நாடகங்களை நடிக்கும் படி கேட்டிருக்கிறது. குறுநாடக எழுத்தாக்கப் போட்டியிலும் சமூகத்தை மையப்படுத்திய விடயங்களை வைத்தே குறுநாடகங்கள் எழுதப்பட வேண்டும் என்று பணித்திருக்கிறது. 2011ஆம் ஆண்டு தமிழ்த்தினப் போட்டிகளில் எல்லாப் பாடசாலைகளும் பங்கு பற்றிச் சமூக நாடகங்களை நடித்தன. அந்தச் சுற்று நிருபத்திற்கு அமைவாகவே மாணவர்கள் குறு நாடகங்களை எழுதியிருப்பர். எனக்கு 78 வயது. 515 நவீன நாடகங்களும் “நாடகம் எழுதுவது எப்படி?” “வானொலி நாடகம் எழுதுவது எப்படி?” என்ற நூல்கள் உட்பட பல நாடக நூல்களும் எழுதிய நான், மாணவர்களுக்கு உதவ வேண்டாமோ? எனது அறிவும் அனுபவமும் என்னோடு அழிந்து போகாமல், எல்லோருக்கும் நிரந்தரமாகக் கிடைக்கச் செய்யவே இந்தக் கட்டுரையை எழுதுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாடகம் ஒரு திட்டத்திற்கமைய எழுதப்படுவது :** நாவலையும் சிறுகதையையும் போன்றதன்று நாடகம். அது ரசிகர்கள் முன்னிலையில் நடிக்கப்படுவது. அல்லது தொலைக்காட்சியிலும் வானொலியிலும் அந்த அந்த ஊடகங்களுக்கு அமைவாக நடிக்கப்படுவது. நாவலைப் போல நாடகத்தை நினைத்தபடி நீட்டிக்கொண்டு போக முடியாது. அப்படி வள வளா என்று இழுத்துக் கொண்டு போனால், ரசிகர்களுக்கு அலுப்படிக்கும். சிலர் எழுந்து ஓடி விடவும் கூடும். அது T.V, வானொலி நாடகமானால் அவற்றை ரசிகர்கள் நூர்த்து விடுவர். நாடகம் குறிப்பிட்ட நேரத்தில் நடித்து முடிக்கப் பட வேண்டும். அவ்வளவு நேரமும் அது ரசிகர்களது கவனத்தை தன்பால் ஈர்த்து வைத்திருக்க வேண்டும். எனவே நாடகத்தை கவர்ச்சிகரமாக நடத்துவதற்காக ஒரு திட்டம் அமைத்து வைத்திருக்கின்றனர் நாடகத்துறை அறிஞர்கள். அத்திட்டத்தின் படி நாடகத்தை எழுதினால், அது விரைவாகவும் விறுவிறுப்பாகவும் ஓடி, ரசிகர்களது கவனத்தையும் தன்பால் ஈர்த்து வைத்திருக்கும். திட்டம் வருமாறு:

**தோற்றுவாய் :** நாடகத்தின் முதலாவது கட்டம் தோற்றுவாய் ஆகும். இதை அறிமுகம், புலப்படுத்துதல், தொடக்க நிலை என்றும் அழைக்கலாம். இந்த இடத்தில் நாடகத்தின் முக்கியமான பாத்திரங்கள் அறிமுகம் செய்யப்பட்டு, அவற்றிற்கு முன்பு என்ன நடந்தது, இப்பொழுது என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பவை விளக்கப்படும். சரியான தேவை இருந்தாலன்றி முக்கியமான பாத்திரங்களை நாடகத்தில் இடை நடுவிலோ, இறுதிக்கட்டத்திலோ புகுத்தக்கூடாது. ஐந்து அங்கங்களைக் கொண்ட பெரிய நாடகங்களில் இந்த அறிமுகம் சில காட்சிகளுக்கு நீளும். சிறிய நாடகங்களில் அவை விரைவாக அறிமுகம் செய்யப்படும்.

**முரண் :** நாடகத்தில் ஒரு முக்கியமான அம்சம் "முரண்". இதை மோதல், பிரச்சினை, கரைச்சல், சிக்கல், என்றும் தமிழில் அமைக்கின்றனர். மோதல் இல்லையேல் நாடகமே இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கின்றனர் நாடக விமர்சகர்கள். இரண்டு பாத்திரங்கள் கைகளால் மோதிக் கொள்வது மட்டும் மோதல் இல்லை. அது உடலளவிலும் நிகழலாம், மனத்தளவிலும் நிகழலாம். சூடான விவாதமும் மோதலே. வெவ்வேறு கொள்கைகள் லட்சியங்கள் குணாதிசயங்களைக் கொண்ட பாத்திரங்கள் ஒன்றுடன் ஒன்று எதிர்த்து நிற்பது எல்லாம் மோதலே!

பெரிய நாடகங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட முரண்களும் இடம் பெறும். சிறிய நாடகங்களில் ஒரு முரணே போதுமானது. மோதல் அந்த நாடகத்தின் கதையை வேகமாகவும் விறுவிறுப்பாகவும் வளர்த்துச் செல்ல உதவும். ஒரு பாத்திரத்திற்கும் இன்னொரு பாத்திரத்திற்கும் இடையில், பாத்திரத்திற்கு சமுதாயத்திற்கும் இடையில், பாத்திரத்திற்கும் இயற்கைக்கும் இடையில், அரசாங்கத்திற்கும் இடையில், பாத்திரங்களுக்கும் கடவுளுக்குமிடையில் கூட முரண் அமைந்திருக்கும். அனேகமான முரண்கள் வெளிப்படையாக எடுத்துக் காட்டப்படும். சில குறிப்பாக உணர்த்தப்பட்டிருக்கும். அதை அறிந்து கொள்வது வாசகர்களது பார்வையாளர்களது புத்திசாதுரியத்தைப் பொறுத்தது.

**எழுச்சி :** நாடக அமைப்பின் இரண்டாவது கட்டம் எழுச்சியாகும். தோற்றுவாயில் இருந்து நாடகத்தின் உச்சக்கட்டம் வரையிலான பகுதியே இவ்வாறு குறிப்பிடப்படுகிறது. இதுவே நாடகத்தின் வளர்ச்சிப் பகுதியுமாகும். சுவையான பகுதியும் இதுவே. இங்கு சிக்கல்கள் இறுகி, நாடகம் விரைவாக வளர்ந்து செல்கிறது. மேலே கூறப்பட்ட முரண்கள் அதற்கு உதவுகின்றன. பாத்திரங்கள் தங்கள் லட்சியங்களை அடையப் போராடுவதே எழுச்சியாகும். இந்தக் கட்டத்தில் பார்வையாளரும் அப்பாத்திரங்களுடன் ஒன்றி நின்று. அவற்றிற்கு அனுதாபப்பட்டு அவற்றுடன் சேர்ந்து போராடுவர். நாடகத்தின் கதைக்கும் பாத்திரங்களுக்கும் பொருத்தமான நிகழ்வுகளை அமைத்து, நாடகாசிரியர் சிறிது கூடத் தொய்வு விழாதபடி கதையை நகர்த்திச் செல்ல வேண்டும். முறுக்கு சற்றுத் தளர்ந்தாலும் பார்வையாளர்களது கவனம் குறையும். அது நாடக ரசனையையும் பாதிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உச்சக்கட்டம் :** நாடகத்தின் மிகவும் உணர்ச்சிச் செறிவான பகுதியே உச்சக் கட்டமாகும். நாடகக் கதைப் பின்னலின் உச்சக்கட்டமும் இதுவேயாகும். இது நாடகக் கதைப் போக்கின் ஒரு திருப்புமுனையாகவும் அமைகிறது. நாடகத்தின் எஞ்சியுள்ள பகுதி என்ன திசையில் செல்லப் போகிறது. என்பதையும் இந்த உச்சக் கட்டமே தீர்மானிக்கிறது. அந்தச் சிகர நுனியிலிருந்து திரும்பி வருதல், பின் வாங்குதல் என்ற பேச்சுக்கே இடமில்லை. அது துன்பியல் நாடகமாக இருந்தால் அதன் பின்பு ஒரே சரிவு தான். துன்பியல் அல்லாத நாடகமாயின் ஏதாவது ஒரு சம்பவம் நிகழ்ந்து, நாடகத்தின் முடிவு மாற்றப்படும். உச்சக்கட்டம் கதை ஓட்டத்திற்குப் பொருத்தமாக அமைய வேண்டும். அதில் ஒரு நம்பகத்தன்மை இருக்க வேண்டும் என்பதையும் மறந்துவிடலாகாது.

**வீழ்ச்சி :** இதைப் பூட்ட விழ்ப்பு என்னும் சொல்லலாம். மெல்ல மெல்ல வளர்ந்து சிக்கலடைந்து உச்ச நிலை எய்திய கதை, முறுக்குத் தளர்ந்து சிக்கல் அவிழ்ந்து முடிவை எய்துவதையே இந்தக் கட்டம் குறிக்கிறது. நாடகக் கதை வளர்ச்சியோடு ஏறி, உச்சநிலைக்குப் போன பார்வையாளர்களது உணர்ச்சியும் மீண்டும் இறங்கிச் சமநிலைக்கு வருகின்றது.

பெரிய நாடகங்களில் உச்சக்கட்டம் அனேகமாக நாடகத்தின் நடுப்பகுதியில் வருவதால், இந்த வீழ்ச்சி அதன் அரைப் பங்கினைக் கொண்டிருக்கும். இந்தப் பகுதியில் கதையை வேண்டுமென்றே நீட்டுகின்ற ஆசையை நாடகாசிரியர்கள் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லையேல் கதை சுவிங்கம் போல இழுபடும்.

ஓரங்க நாடகங்களில் உச்சக் கட்டம் நாடகத்தின் முடிவுக்கு மிக அண்மையில் வருவதால் அவற்றின் இறக்கம் மிகக் குறுகியதாகவே இருக்கும்.

**சமநிலை :** நாடகத்தின் முடிவு இன்பமானதாயினும் சரி, துன்பமானதாயினும் சரி, நாடகம் முடியும் பொழுது பாத்திரங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையாளர்களும் முறுக்குத் தளர்ந்து சமநிலைக்கு வந்து விடுகின்றனர். ஆனால் நாடகம் தொடங்கும் பொழுது இருந்த நிலையில் கதாபாத்திரங்களோ, பார்வையாளர்களோ இல்லை. பாத்திரங்கள் ஒரு முழு அனுபவத்தைப் பெற்று மாறிவிட்டிருக்கின்றன. பார்வையாளர்களும் அந்தப் பாத்தரங்களுடன் ஒன்றி நின்று நாடகத்தை அனுபவித்திருந்தால், நிச்சயமாகக் கொஞ்சமாவது அறிவு தெளிந்திருப்பார்கள். அது ஒரு பொழுது போக்கு நாடகமாயிருந்தால் ஒரு நல்ல நாடகத்தைப் பார்த்தோம் என்ற திருப்தியைப் பெற்றிருப்பார்கள்.

**நாடகத்தின் அமைப்பு – முக்கோணம் :** தோற்றுவாய், எழுச்சி, உச்சக்கட்டம், வீழ்ச்சி சமநிலை ஆகியவையே நாடகத்தின் முக்கிய கட்டங்களென வகுத்து வைத்துள்ளனர். மேநாட்டு நாடகத்துறை அறிஞர்கள். அந்தப் புள்ளிகளை வைத்து ஒருவரை படம் கீறினால் ஒரு முக்கோண வடிவம் வரும் என்கின்றனர். ஒரு எகிப்திய பிரமிட்டின் புற உருவப்படம்.

ஆனால் எல்லா நாடகங்களும் இத்தகைய அமைப்பைக் கொண்டிரா. உச்சக் கட்டம் சரி நடுவில் அமைந்த நாடகங்கள் மட்டுமே இத்தகைய வடிவமைப்பைக் கொண்டிருக்கும். மற்றவற்றில் சாயலான பிரமிட்டுக்களே வரும். ஓரங்க நாடகங்களில் உச்சக் கட்டம் நாடகத்தின் இறுதியில்தான் வரும் என்று மேலே பார்த்தோம். ஐரோப்பிய மொழிகளில் இந்தக் காலத்தில் எழுதப்படும் சில நாடகங்களில் ஒரு பிரமிட்டையும் காண முடிவதில்லை என்கின்றனர் நாடக விமர்சனங்கள்.

நாடகத்தில் இன்னும் சில விடயங்களைக் கவனிக்க வேண்டும்:

**கதை :** நாடகத்தில் ஒரு கதை இருப்பது அவசியம். கதையே நாடகமாக்கப்படுகிறது. கதை வளர வளர, நாடகமும் நகரும். வாசகர்களைக் கவர்ந்திழுப்பது கதையே. கதையே இல்லாத நாடகங்களும் நடிக்கப்படுகின்றனதான். அவை வெறும் கேலிக்கூத்தாகக் காட்சியளிக்கும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாடகத்திற்கான கதையை எங்கே இருந்து பெறுவது? வாழ்க்கையில் இருந்து தான். வேறு எங்கேயிருந்து? நாடகக் கதைகளுக்கா பஞ்சம்? தினமும் எங்களைச் சுற்றி எத்தனை நாடகங்கள் நடைபெறுகின்றன! பழைய கதைகள், புதிய கதைகள், எதிர்காலத் திட்டங்கள், புளுகுகள், பொய்கள்... எங்கள் ஒவ்வொருவரது வாழ்க்கையிலும் நாடகப்பாங்கான ஒரு சில சம்பவங்களாவது நடந்திருக்கும். எங்கள் உறவினர்கள் நண்பர்கள், அயலவர்கள், ஊரவர்கள் வாழ்க்கைகளிலும் தான். அவற்றையெல்லாம் நாங்கள் கண்டு கொள்வதில்லை. தினம் தினம் செய்திப் பத்திரிகைகளில் எத்தினை சுவையான சம்பவங்கள் பிரசுரிக்கப்படுகின்றன? நிஜ வாழ்க்கையில் நடக்கும் சில கதைகள், நாம் மேடையில் பார்க்கும் நாடகக் கதைகளைவிடச் சுவையானவை.!

எனது பெரும்பாலான நாடகங்களின் கதைகளை வாழ்க்கையிலிருந்தே பெற்றேன். வாழ்க்கையை நாடகக் கண்கொண்டு கூர்ந்து கவனியுங்கள். எந்த நேரமும் நாடகத்திற்கான ஒரு கருவைப் பாய்ந்து பிடிப்பதற்குத் தயாரா உசாராக இருங்கள். ஒரு கருத்து, ஒரு சம்பவம், ஒரு கதை, ஒரு கதாபாத்திரம் எதிலிருந்தும் நாடகம் உருவாகலாம். அதைக் கண்டுபிடித்து நாடகத்தை உருவாக்குவது நாடகாசிரியனுடைய திறமையைப் பொறுத்தது. அதற்கு நாடக உணர்வு (Dramatic Sense) வேண்டும். அந்த உணர்வு இயல்பாகவே அமையப் பெற்றவர்கள் பாக்கியசாலிகள்! மற்றவர்கள் அதைப் பயிற்சியால் பெறலாம்.

**கதைக் கோப்பு (Plot) :** "புளொட்" என்றால் "பிளான்": நீங்கள் கட்டப் போகும் கட்டத்தின் வரைபடம். நீங்கள் கட்ட இருக்கும் நாடகம் என்ற மாளிகையின் அடித்தளம். இதை நாங்கள் கதைப்பின்னல், கதையின் திட்டம் என்றும் அழைக்கலாம். நாவல், சிறுகதை ஆகியனவும் திட்டம் போட்டுத்தான் எழுதப்படுகின்றன. ஆனால் அவற்றைவிட நாடகத்திற்கே இது மிகவும் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. நாடகம் மேடை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலி, தொலைக்காட்சி என்று பல ஊடகங்களிலும் நடிக்கப்படுவது. ரசிகர்கள் அதை நேரில் பார்க்கிறார்கள், அல்லது கேட்கிறார்கள். அது அவர்களைக் கவர வேண்டும். உங்கள் நாடகத்தின் தோற்றுவாய், மோதல், எழுச்சி, உச்சக்கட்டம், வீழ்ச்சி, சமநிலை, கருத்து எல்லாம் இதில் அடங்கியிருக்கும். நன்றாகத் திட்டமிடப்பட்ட நாடகம் விறுவிறுப் பாகவும், சுவையாகவும் வேகமாகவும் ஓடும். திட்டமிடப்படாத நாடகம் குழப்பமாக இருக்கும்.

**பாத்திர வார்ப்பு :** பாத்திரப் படைப்பு நாடகத்தில் ஓர் இன்றியமையாத அம்சம். நாடகம் என்பது அதில் வருகின்ற பாத்திரங்களது கதைதானே? பாத்திரங்கள் இல்லையென்றால் நாடகமே இல்லை! பாத்திரவார்ப்புப் பிழைத்தால் நாடகமும் பிழைக்கும். பாத்திரங்களது உறவு, பகை, கொண்டாட்டங்கள், மோதல்களில்தான் நாடகம் கட்டி எழுதப்படுகிறது. நாங்கள் சமூகத்தில் சந்தித்துப் பேசிப் பழகும் மனிதர்களைப் போன்ற பாத்திரங்களைப் படைத்தளித்தால் தான், பார்வையாளர்கள் இலகுவாக அவற்றுடன் ஒன்றி நின்று நாடகத்தை நன்கு ரசிப்பர். அப்பாத்திரங்கள், கஷ்டப்பட்டுப் போராடும் பொழுது ரசிகர்களும் அவற்றுடன் சேர்ந்து போராடுவர். அவை வெற்றி பெறும் போது பார்வையாளரும் மகிழ்வர். இந்தப் பாத்திர- பார்வையாளர் ஒன்றிப்பு எவ்வளவுக் கெவ்வளவு இறுக்கமாக அமைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நாடகமும் வெற்றி பெறும். ஆசிரியர் பாத்திரங்களை வெவ்வேறு குணப்பண்புகள் உள்ளவர்களாகப் படைத்தளிப்பது நல்லது. அப்பொழுதுதான் அவற்றிற்கிடையிலான உரசல்கள் மோதல்களில் சூடு பிடிக்கும். நாடகத்தில் சுவையும் பிறக்கும். நல்லநல்ல கருத்துக்களும் உதிர்க்கப்படும்.

எத்தனை பாத்திரங்கள் வேண்டும்? கதைக்குத் தேவையான பாத்திரங்கள் வேண்டும். கதைக்குப் பாத்திரங்களே தவிர பாத்திரங்களுக்காகக் கதை இல்லை. நாவலில் எத்தனை பாத்திரங்களையும் புகுத்தலாம். ஆனால் நாடகத்தில் தேவையில்லாத ஒரு பாத்திரத்தைக்கூட கொண்டுவரக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படிக் கொண்டு வந்தால் நாடகத்தில் குழப்பம் ஏற்படும். ஒரு பாத்திரத்தையும் சரிவர வார்த்தெடுக்க முடியாது. வானொலி தொலைக்காட்சி நாடகங்களில் பாத்திரங்களை மிகுந்த எச்சரிக்கையுடன் படைத்தளிக்க வேண்டும். அவற்றில் நாலு ஐந்து பாத்திரங்கள் போதுமானவை.

**உரையாடல் :** நாடகத்தில் கவனிக்க வேண்டிய இன்னும் ஒரு சிறப்பு அம்சம் உரையாடல். நாடகாசிரியன் தான் சொல்லவந்தது எல்லாவற்றையும் பாத்திரங்களது உரையாடல் மூலமல்லவா வெளியிடுகிறான்? அவனுக்கு உள்ள ஒரே ஆயுதம் உரையாடல்.

நாடகம் எந்த இடத்தைக் களமாகக் கொண்டு எழுதப்படுகிறதோ, அந்த இடத்துப் பேச்சு வழக்கிலேயே உரையாடலை எழுதுவது நல்லது. அது அந்தப் பாத்திரத்தை அந்த மண்ணுக்கே உரியவன் என்று இனம் காட்டுவதுடன், நாடகத்திற்கும் ஒரு நம்பகத்தன்மையைக் கொடுக்கும். அப் பாத்திரங்களின் குணாம்சங்கள், கல்வி அறிவு, திறமைகள் முதலியவற்றையும் பேச்சு வழக்கே காட்டி நிற்கும். நாடக பாத்திரங்கள் தங்களுக்கே உரிய இயல்பான பேச்சு வழக்கிலேயே, தாங்கள் சொல்ல வந்தவை எல்லாவற்றையும் இலகுவாகவும் திறம்படவும் வெளியிடும். பேச்சு வழக்கு உரையாடலை எழுதுவது எளிது. பேசி நடிப்பது இனிது!

**கருத்து :** கருத்துள்ள நாடகமும் எழுதலாம், கருத்தில்லா நாடகமும் எழுதலாம். கருத்து நாடத்திற்கு ஒரு ஒளியைக் கொடுத்து அதன் தரத்தையும் உயர்த்தும். பார்ப்பவர்களும் வாசகர்களும் அதனால் பயன்பெறுவர். கருத்தில்லாத நாடகம் பெறும் பொழுது போக்காகவும் கேலிக்கூத்தாகவும் காட்சியளிக்கும். ஆசிரியர் அந்தக் கருத்து வாசகர் மனதில் நன்கு பதியும் படி செய்ய வேண்டும். நெற்றிப் பொட்டில் அடித்தாற் போல கருத்தை நேரடியாகச் சொல்லாமல், கதை முழுவதிலும் அதைச் செறிந்து கிடக்கச் செய்து, வாசகரை அதை உய்த்துணரவைப்பதே சிறந்த நாடகத்திற்கு அழகு!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முடிவு:** சிறு கதையைப் போலவே நாடகத்திற்கும் முடிவு கொடுக்கலாம், கொடுக்காமலும் விடலாம். ஒரு முடிவு கொடுத்தால் வாசகர்கள் / பார்வையாளர்கள் திருப்திப்படுவர். முடிவு கொடுக்காமல் முடிக்கும் பொழுது பல கேள்விக் குறிகள் தோன்றும். அவை பார்வையாளரைச் சிந்திக்கவும் செய்யும். முடிவு கொடுத்தாலும், ஒரு நாடகத்தில் எல்லாவற்றையும் சொல்லி முடிக்க முடியாது. பல அந்தரத்தில் தொங்கத்தான் செய்யும். நாடகாசிரியர் சொல்கின்ற விடயங்கள் வாசகர் மனதில் நன்கு பதிய வேண்டும். சொல்லாது விடுகின்ற விடயங்களும் வாசகர்களது மனதில் அதிர்வலைகளை எழுப்பி, அவர்களைச் சிந்திக்கச் செய்யவும் வேண்டும். நாடகம் முடிந்த பின்பும் நாடகத்தில் வந்த விடயங்கள் பற்றி பார்வையாளர்களைச் சிந்திக்கச் செய்யும் நாடகங்களே, சிறந்த நாடகங்கள் என்று பாராட்டப்படுகின்றன!.

**நாடகம் எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொடுக்க முடியாது! :**

நான் சிறுகதை எழுதுவது கட்ரையில் கூறியதையே இங்கே திரும்பவும் கூறுகிறேன். நாடகங்கள் பற்றி விளக்கிக் கூறலாம். அதன் சிறப்புகளைப் புகழ்ந்துரைக்கலாம். ஆனால் நாடகம், எழுதும் ஆற்றலை ஒருவர் இன்னொருவருக்குக் கற்றுக் கொடுக்க முடியாது! உலகத்தில் நாடகம் பற்றிப் பேசுபவர்கள் பலர் இந்தார்கள். இப்பொழுதும் இருக்கிறார்கள். ஆனால் நாடகாசிரியர்கள் ஒரு சிலரே! உங்களுக்குக் கருவிலே திரு இருந்தால்தான் உங்களால் இலக்கியம் படைக்க முடியும்!

யார் கண்டது அந்தத் திறமை உங்களுக்குள் ஒளித்துக்கொண்டிருக்கலாம். நல்ல நாடகங்களைத் தேடி எடுத்து வாசியுங்கள். தொடர்ந்து எழுதுங்கள். வெற்றி கிடைக்கலாம்.!

**உதயன்**

❀❀❀

**இலங்கையில் நான் மட்டுமே "நாடகம் எழுதுவது எப்படி?" நூலை எழுதியவன். நாடகம் எழுதாதவர்களுடைய பிழையான கட்டுரையே பாடநூலில் உள்ளது. அதை நீக்கிவிட்டு இந்தக் கட்டுரையைப் பாட நூலில் போடுங்கள் என்று நம்புகின்றேன்.!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை

# பல்கலைக்கழகக் கல்வி

**நாடகமும் அரங்கியலும் பாடம்**

பல்கலைக்கழகத்தில் "நாடகமும் அரங்கியலும்" பாடத்தை எவ்வளவு காலமாகக் கற்பிக்கிறார்கள்! எத்தனை நாடகாசிரியர்களை உருவாக்கினார்கள்? எத்தனை வானொலி நாடகாசிரியர்களை உருவாக்கினார்கள்?.

20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பேராசிரியர் கணபதிப்பிள்ளை எழுதிய "உடையார் மிடுக்கு" நாடகத்தையும் 16ஆம் நூற்றாண்டில் மகாகவி ஷேக்ஸ்பியர் எழுதிய "ஓதெல்லோ" நாடக்தையும் தயாரித்தளித்தார்கள். அவை போதுமா? வருடத்தில் 100 நாடகங்களல்ல, 10 நாடகங்களையாவது தயாரித்து அளிக்க வேண்டாமோ?

அந்த நாடகங்களைத் தயாரித்தளித்தவர் ஒரு விரிவுரையாளர். நாடகங்களை மாணவர்கள் தயாரித்தளிக்க வேண்டும்!

எதை எதையோ கற்பிக்கிறார்கள் நாடகம் என்று சொல்லி. ஆனால் நவீன நாடகமோ வானொலி நாடகமோ கற்பிப்பதாகத் தெரியவில்லை.

நான் நீண்டகாலமாகப் பிரசாரம் செய்து வந்திருக்கிறேன், மாணவர்களுக்கு நவீன இலக்கியங்களும் நவீன நாடகமும் கற்பிக்க வேண்டும் என்று. இந்தக் காலத்தில் எவரும் ஆடாத நாட்டுக் கூத்துகளைக் கற்பித்து மாணவர்களை நேரத்தை வீணடிக்கக்கூடாது! பகுத்தறிற்கு ஒவ்வாத அந்தக் கதைகளால் மாணவர்களது அறிவுதான் மழுங்கடிக்கப்படும்! மாணவர்கள் கற்பதற்கு எவ்வளவோ இருக்கிறது! தெரியாவிட்டால் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயனுக்கு எழுதிய "மேற்குலக நாடகத்தின் ஒரு சுருக்கமான வரலாறு" கட்டுரையைப் பார்க்கவும்.

மாணவர்களுக்கு எல்லா வகை நாடகங்களும் கற்பிக்கப்பட வேண்டும். மாணவர்கள் அவற்றை எழுதவும் நடிக்கவும் மட்டுமல்ல, அவற்றைத் தயாரிக்கவும் அறிந்துகொள்ள வேண்டும். படிப்பது நாடகமும் அரங்கியலும் பாடமல்லாவா? அப்பொழுதுதான் அவர்களுக்கு வழங்கப்படும் Certificateக்கு ஒரு பெறுமதி இருக்கும்!

எங்கள் கல்வித் திணைக்களம் எனது அறிவுரையை ஏற்று, ஒரு மேலதிக சுற்றறிக்கையை எல்லாப் பாடசாலைகளுக்கும் அனுப்பி வைத்தது. அதில் தமிழ்தினப் போட்டிகளில் மாணவர்களை சமூகநாடகம் நடிக்கும்படி கேட்டிருந்தது. 2011ஆண்டு தமிழ்த்தினப் போட்டிகளில் எல்லாப் பாடசாலைகளும் சமூக நாடகங்கள் நடித்தன. சுற்றறிக்கைக்கு அமைய, சமூகக் கருத்துக்களை மையப்படுத்தியே குறு நாடங்களையும் எழுதியிருப்பர்.

பல்கலைக்கழகத்தில் உள்ளவர்கள் இனியாவது மணாவர்களுக்கு நவீன நாடகங்கள் கற்பிப்பார்கள் என்று நம்புகிறேன். காத்திருக்கிறோம் - எங்கள் பிள்ளைகள் தயாரிக்கின்ற சமூக நாடகங்களைப் பார்க்க!

## தமிழ் மொழி கற்பித்தல்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எங்களுக்கு சிறுகதையும் நாவலும் கற்பிக்கப்பட்டன. நாடகம் கற்பிக்கப்படாவிட்டாலும், பேராசிரியர் கணபதிப்பிள்ளை "இலங்கை மண்வாசனை நாடகம்" எப்படி இருக்கும் என்று எழுதிக் காட்டினார். கலாநிதி வித்தியானந்தன் அவற்றை அரங்கிட்டுக் காட்டினார். நான் பல்கலைக்கழகத்தில் தான் நவீன நாடகம் பற்றி நன்கு அறிந்து கொண்டேன். பிறகு வந்த பேராசிரியர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றைக் கைவிட்டு விட்டார்கள் - நாடகம் பற்றிச் சரியாகத் தெரியாததாலோ? அல்லது....... தாங்கள் அவற்றைப் படைக்காததாலோ?

இன்று பழைய கவிதை இலக்கியங்களை ஒருவரும் படைப்பதில்லை, படிப்பதுமில்லை. பரீட்சைக்காக மட்டும் படிக்கிறார்கள். நவீன இலக்கியங்களான சிறுகதையும் நாவலும் நாடகமுமே இன்று எழுதப்படுகின்றன. வளர்ந்துவரும் நவீன இலக்கியங்களை பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி படிக்கும் பிள்ளைகளுக்குக் கட்டாயம் கற்பிக்க வேண்டும்.!

**இது கவிதையின் காலமல்ல, உரைநடையின் காலம். தமிழ் உரை நடை நன்றாக வளர்ந்து விட்டது. தமிழ்ப் பிள்ளைகள் வருங்காலத்தில் தமக்கு வேண்டியவை எல்லாவற்றையும் உரைநடையிலேயே கற்கப் போகிறார்கள். தமிழ் உரை நடையை வளர்ப்பவை நவீன இலக்கியங்களே! அந்த நவீன இலக்கியங்களை தமிழ் படிக்கும் பிள்ளைகளுக்குக் கட்டாயம் கற்பிக்க வேண்டும்!**

தமிழகத்திலுள்ள எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் எல்லாவகை நவீன இலக்கியங்களையும் கற்பிக்கிறார்கள்! உலகம் முழுவதிலும் நவீன இலக்கியங்கள் பல்கலைக்கழக மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன.!

இப்பொழுது உள்ள தமிழ்ப் பேராசிரியர்கள், முன் இருந்தவர்கள் செய்யாததை நாங்கள் எப்படிச் செய்ய முடியும் என்று தயங்கலாம். அப்பன் வெட்டிய கிணறு என்று சொல்லி, உப்புத்தண்ணியைச் குடித்துக் கொண்டிருக்காதீர்கள்.!

பேராசிரியர் கணபதிப்பிள்ளை துணிந்து தான் பேச்சு வழக்கு இலங்கை மண்வாசனை நாடகங்களை, எழுதினார், கிண்டல்கள் கண்டனங்களையும் பொருட்படுத்தாமல்! கலாநிதி வித்தியானந்தனும் துணிந்துதான் அவற்றை அரங்கிட்டுக்காட்டினர். காலத்திற்கு ஏற்றதை, மாணவர்களுக்கு வேண்டியதைத் துணிந்து செய்யுங்கள்! நீங்களும் அவர்களைப் போல வரலாற்றில் இடம் பெறுவீர்கள்!

உதயன்

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுரை

# நாடகங்கள் பற்றிய விளக்கங்கள்

**ஒரு இடம்பெயர்வின் கதை :**

இது வானொலி நாடகமல்ல. நான் இந்த நாடகத்தை எழுதி இலங்கை வானொலிக்கு அனுப்பினேன். அவர்கள் அதை ஒலிபரப்பவில்லை. நான் 1995ஆம் ஆண்டு இடம் யெர்வை வைத்துப் பல நாடகங்களை எழுதி அனுப்பியிருக்கிறேன். இலங்கை வானொலி அவற்றை ஒலிபரப்பியிருக்கிறது. அந்த நாடகங்கள் சிலவற்றை எனது நாடக நூல்களில் காணலாம். இந்த நாடகத்தை தயாரித்து ஒலிபரப்பாத காரணம் அவர்களுக்குத்தான் தெரியும்.

இது வானொலி நாடக நூலல்ல. எனது நூல். எனது திறமான நாடகங்களில் ஒன்றை அதில் பிரசுரிக்க வேண்டாமோ?. நவீன இலக்கியங்களின் சிறப்பு அம்சங்களில் ஒன்று, அவை எழுந்த காலத்தைச் சித்திரிப்பது. நான் எழுதிய சிறுகதைகள், நாடகங்கள், நாவல்கள் எல்லாவற்றையும் இயன்ற வரை காலத்தைப் பிரதிபலிக்கவே எழுதியிருக்கிறேன்! இந்த நாடகம் 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இடம் பெயர்வைச் சித்திரிப்பது.

யாழ்ப்பாண குடாநாட்டில் நடந்த ஒரு மறக்க முடியாத சம்பவம், 1995ஆம் ஆண்டு இடம் பெயர்வு. யாழ்ப்பாணம் வலிகாமத்தில் வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் எல்லோரும் இடம் பெயர்ந்து தென்மராட்சிக்கும், வடமராச்சிக்கும், கிளிநொச்சிக்கும் சென்றனர். வலிகாமத்தில் மக்களே இல்லை. யாழ்ப்பாண நகரம் செத்துக் கிடந்தது! நம்ப முடிகிறதா? இன்றைய இளைய தலைமுறையினரால் அதை கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண நகரம் செத்துத்தான் கிடந்தது! நான் அதில் வாழ்ந்து கொண்டிருந்தேன். பின்பு எனது மனைவி மங்கையுடன் எனது சொந்த ஊரான அராலிக்குச் சென்று, அங்கே 6 மாதங்கள் வாழ்ந்தேன். முதலில் வீட்டில் இருந்த நெல்லைக்குற்றி அரிசியாக்கிச் சமைத்துச் சாப்பிட்டோம். பிறகு ராணுவம் வந்து எங்களுக்கு நிவாரணம் தந்தது. யாழ்ப்பாணத்தில் எனது வீட்டுக்கூரை ஷெல் விழுந்து உடைந்தது! அதை நான் பிறகு திருத்தினேன். எனது புதிய ஹொண்டா, மோட்டச் சைக்கிள் காணாமல் போய்விட்டது! அதோடு நான் மோட்டச் சைக்கிள் ஓடுவதையே விட்டுவிட்டேன்!

வலிகாமத்தில் நாங்கள் அனுபவித்த தனிமை, பயம், சோகம். தட்டுப்பாடுகளை எடுத்துக்கூற வார்த்தைகளே இல்லை!

வலிகாமத்தில் நாங்கள் அனுபவித்தவை எல்லாவற்றையும் கட்டுரைகளாக எழுதி வீரகேசரிப் பத்திரிகைக்கு அனுப்பினேன். வீரகேசரியில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரைகளை உலகம் முழுவதும் வாசித்தது. சில வெளிநாட்டு பத்திரிகைகள் அவற்றை எடுத்து மறு பிரசுரம் செய்தன. பின்பு நான் அக்கட்டுரைகளைத் தொகுத்து "யாழ்ப்பாணத்தில் அந்த 6 மாதங்கள்" என்ற பெயரில் நூலாக வெளியிட்டேன். அந்த நூல் எப்பொழுதோ விற்று முடிந்து விட்டது. நான் அதை மறுபிரசுரம் செய்யவில்லை.

இடம்பெயர்ந்து சென்றவர்கள் பட்ட துன்பங்கள் சொல்லிமாளா! எனது மகனது குடும்பம் உட்பட, எனது நண்பர்கள் தெரிந்தவர்கள் பலர் வந்து தாங்கள் பட்ட துன்பங்களைக் கூறினர். அவற்றை வைத்து ஒரு நாவலே எழுதலாம். பலர் என்னை நாவல் எழுதும்படி கேட்டனர். நான் நேரில் அனுபவிக்க ஒன்றை வைத்து நான் நாவல் எழுத விரும்பவில்லை. எனவே நாடகங்களாக எழுதினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடக இலக்கியம் - அதிலும் நவீன நாடக இலக்கியம் தானே தமிழில் நன்றாக வளர்ச்சியடையாத இலக்கியம்? நாடகம் எழுதினால் நல்லது. தானே? நாடத்தின் எல்லா அம்சங்களும் நன்றாக அமைந்த நாடகம்! விருப்பமானால் இந்த நூலில் உள்ள எனது கட்டுரையில் உரைத்துப் பார்த்துக் கொள்ளலாம்!

**இருப்பதற்கு ஓர் இடம்:**

இது இலங்கை வானொலி தமிழ்ச் சேவையினரால் தயாரித்து ஒலிபரப்பப்பட்ட நாடகம். இதை "ஒரு இடம் பெயர்வின் கதை" நாடகத்தின் தொடர்ச்சி என்று சொல்லலாம். இடம் பெயர்ந்து சென்றவர்களில் பெரும்பாண்மையினர் திரும்பவும் வலிகாமத்திற்கு வந்தனர். எல்லோருக்கும் வீடுகள் இருந்தன. அவர்கள் அவற்றில் குடியேறினர். சிலருக்கு வீடுகள் உடைந்திருந்தன. அவர்கள் அவற்றில் இருந்தவாறே வீடுகளைத் திருத்தினர். சிலர் திரும்பிவராதவர்களது வீடுகளில் குடியேறினர். வீட்டுக்காறர் பல வருடங்களுக்குப் பிறகு வந்து, வீடுகளைப் பெற்றுக் கொண்டனர். வெளிநாடுகளுக்குப் போனவர்கள் போர் முடிந்த பிறகு வந்து வீடுகளை விற்றுக் காசாக்கினர். சிலர் இன்னும் திரும்பி வரவேயில்லை. அவர்களது வீடுகளில் மற்றவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். யாழ்ப்பாணத்தில் இப்பொழுதும் பல வீடுகள் ஆட்கள் இல்லாது வெறிச்சோடிக் கிடக்கின்றன! அந்தக் கதைகளை இந்த நாடகம் சொல்கிறது.

**ஒரு பாடசாலை முன்னேறுகிறது:**

ஒரு வகையில் இது முதல் இரண்டு நாடகங்களதும் தொடர்ச்சியே. வரலாற்றைப் பதிவு செய்து தரும் நாடகம்.

போரின் போது வன்னி முழுவதும் அழிந்தது. மக்களும் பலர் இறந்தனர். போர் முடிந்த பிறகு அரசாங்கம் மக்களை மீண்டும் வன்னியில் குடியேற்றத் தொடங்கியது. பாடசாலைகளை நடத்தவும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. மாணவர்கள் குறைவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களும் குறைவு. மாணவர்களும் ஆசிரியர்களும் நீள்குளம் பாடசாலையை முன்னேற்ற கஷ்டப்பட்டு உழைத்த கதையை நாடகம் சொல்கிறது. வந்து சேர்ந்த ஆசிரியர்களும் ஆசிரியைகளும் தங்களது போர்க்கால அனுபவங்கள் பற்றியும் தாங்கள் அடைந்த இழப்புக்கள் பற்றியும் சொல்கின்றனர். வன்னி மீள் குடியேற்ற ஆரம்ப காலத்தைச் சித்திரிக்கும் நாடகம். வன்னியில் வாழ்ந்த, வாழ்ந்துகொண்டிருக்கின்ற எனது உறவினர்-களும், நண்பர்களும் சொன்ன கதைகளை வைத்தே இந்த நாடகத்தை எழுதினேன்.

பொன் கொழிக்கும் பூமியாக விளங்கிய வன்னியை வைத்தும் நான் பல நாடகங்கள் எழுதியிருக்கிறேன். வன்னியில் ஏற்பட்ட ஒரு வெள்ளத்தை வைத்து நான் எழுதிய நாடகம் **"வெள்ளம்"** அது எனது **"முதலாம்பிள்ளை"** நாடக நூலில் உள்ளது. விரும்பியவர்கள் அந்த நாடகத்தையும் இந்த நாடகத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

வன்னி மீண்டும் செல்வச் செழிப்பை எய்தத்தான் போகிறது. அந்தக் கால வன்னியைச் சித்திரிக்கும் நாடகங்களை எழுத விரும்புபவர்கள், இந்த நாடகங்களை மாதிரிகளாகக் கொண்டு அவற்றை எழுதலாம். அவற்றை இந்த நாடகங்களுடன் ஒப்பிட்டு பார்க்கலாம்.!

சமகால வரலாற்று நிகழ்ச்சிகளை நாடகமாக்க விரும்புவர்கள் இந்த நாடகங்களை மாதிரிகளாகக் கொண்டு அவற்றை எழுதலாம். அவற்றை இந்த நாடகங்களுடன் ஒப்பிட்டு பார்க்கலாம்.

**அயலவர்கள்:**

அயலவர்கள் ஒற்றுமையாக வாழவேண்டும் என்று நாடகம் சொல்கிறது. அயலவர்கள், எல்லைக்காரர், காணி உரிமைக்காறர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகளால், கொலைகளே விழுந்திருக்கின்றன. மேடையில் நடித்தால் நாடகம் வேகமாகவும் விறுவிறுப்பாகவும் ஓடும். மேடையில் நெருப்பைக் காட்டத் தேவை இல்லை. புகையை அடித்துவிட்டு, "நெருப்பு, நெருப்பு" "வீடெரியப் போகுது!" "ஓடியாருங்கோ" என்று கத்தினாலே... தாக்கத்தை ஏற்படுத்தலாம். எந்தக் காலத்திற்கும் பொருந்தக்கூடிய நாடகம்!

**கடமையா, கவிதையா? :**

நான் கவிதையைத் தாக்குகிறேன் என்று என்மீது கோபப்படாதீர்கள் என்று, கவிஞர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நான் இங்கே குறிப்பிடுவது கவிதையை அல்ல, இலக்கியத்தை! இங்கே கவிதை என்ற பெயர் இலக்கியத்திற்கு ஒரு குறியீடு.

நானும் ஒரு கவிஞன் தான் பள்ளியில் படிக்கின்ற காலத்தில் நிறையக் கவிதைகள் எழுதியிருக்கிறேன். அவை பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. பின்பு, கவிதையை எல்லோரும் எழுதுகிறார்கள் என்பதாலும், அதைவிட நாடகம் எழுதுவது கூடுதலாகப் பயன்தரும் என்பதாலும் நாடகத்துறைக்குத் தாவினேன்.

குடும்பஸ்தனான ஒரு மனிதனது முதலாவது கடமை குடும்பத்தைக் கவனித்துக் கொள்வதே! அதன் பிறகுதான் கலை, இலக்கியம் எல்லாம். நான் அப்படித்தான் வாழ்ந்தேன்.

இந்தக் காலத்தில் நடக்கும் கதை. இப்படியாகப் பல கவிஞர்கள், எழுத்தாளர்கள், பிள்ளைகளுக்காகவும், பிள்ளைகளுடனும் சென்று வெளிநாடுகளில் குடியேறிவிட்டார்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை

**ஒரு நாடகாசிரியரின் கதை :**

இது எனது நாடக உலகச் செயற்பாடுகளைச் சுருக்கமாகக் கூறும் சிறுகதை. எனது பேராதனைப் பல்கலைக்கழக வாழ்க்கை அனுபவங்களும் கதையில் வருகின்றன.

ஒரே கதையை நாடகமாகவும் சிறுகதையாகவும் எழுதி நாடகத்தை இலங்கை வானொலிக்கும் சிறுகதையை வீரகேசரிப் பத்திரிகைக்கும் அனுப்பினேன். இலங்கை வானொலி **"நாடக விருந்து"** என்ற அந்த நாடகத்தை உடனடியாகவே தயாரித்து ஒலிபரப்பியது. அதே காலத்தில் வீரகேசரியும் **"ஒரு நாடகாசிரியரின் கதை"** என்ற இந்த சிறுகதையை உடனடியாகவே பிரசுரித்தது. அந்த நாடகம் எனது "நவீன நாடகம்" நூலின் இரண்டாம் பதிப்பில் இருக்கிறது. விரும்பியவர்கள் அந்த நாடகத்தையும் இந்தச் சிறுகதையையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

இந்த நூலில் உள்ள கட்டுரைகள் நாடகங்கள் எல்லாம் எனது அறிவிலும் அனுபவத்திலும் பிறந்தவை தானே? அவை ஒவ்வொன்றும் என்னைப் பற்றியும் சொல்கின்றன. அதனால் சிறுகதையின் பெயரையே நூலுக்கும் சூட்டியுள்ளேன்.


இலங்கைத் தமிழ் மண்வாசனை நாடக இயக்கம் பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது நான் அதன் அங்கமாக இருந்தேன். பல்கலைக்கழக நவீன நாடகச் செயற்பாடுகள் பற்றியும் சிறுகதை சொல்கிறது.

நான் இலங்கை மண்வாசனை நாடகங்களை எழுதிக் குவித்ததுடன் அவற்றின் சிறப்பபையும் எடுத்துச் சொல்லி வருவதால், இறைவன் என்னை இன்னும் எழுதக்கூடியவனாக வைத்திருக்கிறான். இறைவன் இட்ட பணியை நான் திறம்படச் செய்கிறேன். இலங்கை மாணவர்கள் எல்லோரும் அவற்றைப் படிக்கவும், நடிக்கவும் வழிசமைத்துவிட்டேனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன நாடகநூல் விமர்சனம்




நூல் : நவீன நாடகம்
ஆசிரியர் : கலாபூஷணம் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை

விமர்சிப்பவர்: S.பத்மராஜா B.A.M.Phil

அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையை உங்களுக்குத் தெரியும் தானே? அவர் எழுதியவை 510 நாடகங்கள், 12 நாடக நூல்கள், நாடகம் எழுதுவது எப்படி? வானொலி நாடகம் எழுதுவது எப்படி? சிறுகதை எழுதுவது எப்படி? நவீன இலக்கியங்களை கற்பித்தல், 4 இலக்கிய விமர்சன நூல்கள், எல்லாமாக 26.

இந்த நூலில் நவீன நாடகம் எப்படி இருக்கும் என்று விளக்கிக் கூறியிருப்பதுடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் கணபதிப்பிள்ளையால் ஆரம்பித்துவைக்கப்பட்ட "இலங்கைத் தமிழ் மண்வாசனை" நாடகம் இலங்கைத் தமிழ் பேசும் மாணவர்களுக்குக் கட்டாயம் கற்பிக்கப்பட வேண்டும் என்றும் கூறுகின்றார். நவீன நாடகத்திற்கு உதாரணமாக அவரது, "வாத்தியார் கவனம்" நாடகம் தரப்பட்டுள்ளது.

நூலில் உள்ள கட்டுரைகளையும் நாடகத்தையும் வாசித்தால், நவீன நாடகத்தையும் வானொலி நாடகத்தையும் எழுதிப்பழகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் எழுதிய நூல்கள்

**(இலங்கையில் மற்றவர்கள் எழுதாத புதுமையான நூல்கள்)**

**இலங்கை வானொலி தமிழ்ச்சேவை தனிநாடகங்களின் முதலாம் இரண்டாம் தொகுதிகள்.**

1. கெட்டிக்காரர்கள்............................................................ 1988
2. முதலாம் பிள்ளை............................................................ 1990

**மாணவர்கள் படிப்பதற்கும் நடிப்பதற்கும் பொருத்தமான நாடகங்கள் கொண்ட நூல்கள்.**

1. கெட்டிக்காரர்கள் ............................................................ 1988
2. இமயம் ............................................................ 2004
3. மனிதர்கள் ............................................................ 2006
4. படிப்பும் நடிப்பும்............................................................ 2007

**பரிசு பெற்ற வானொலி நாடகங்கள்.**

1. எங்கள் நாடு............................................................ 2002

**இலக்கியம் படைக்க வழிகாட்டும் நூல்கள்.**

1. நாடகம் எழுதுவது எப்படி?.............................................. 1997
2. வானொலி நாடகம் எழுதுவது எப்படி?........................ 2003
3. சிறுகதை எழுதுவது எப்படி?.............................................. 2005

**இலக்கிய விமர்சன நூல்கள்.**

1. இலக்கியக் கட்டுரைகள்.............................................. 2000
   (சிறுகதை, நாவல், நாடகம், இலக்கிய விமர்சனம் - ஆகியவற்றிற்கு எழுதப்பட்ட விளக்கங்களும் விமர்சனங்களும்)
2. வீடற்றவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும் ........ 2001
   (ஒரு முழு நாவலுக்கு இலங்கையில் எழுதப்பட்ட முதலாவது இலக்கிய விமர்சன நூல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இலக்கிய விமர்சனம்
(நாகம்மாள் நாவலுக்கும் கோடை நாடகத்திற்கும் எழுதப்பட்ட இலக்கிய விமர்சன நூல்) ...................... 2003

4. பொருளோ, பொருள் நாடக நூலுக்கு எழுதப்பட்ட விளக்கமும் விமர்சனமும்.............................................. 2004

5. இலக்கிய ஒப்பியல்
நாகம்மாள், வீடற்றவன் நாவல்களின் ஒப்பாய்வு...... 2008

6. ஊடகவியல் .................................................. 2009

7. நவீன இலக்கியங்களைக் கற்பித்தல் ...................... 2008

**● உண்மைச் சம்பவங்களைக் கொண்ட வரலாறு**

8. யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் .................. 1997

9. ஒரு நாடகாசிரியரின் கதை.......................................... 2011

**ஏனைய நூல்கள்**

**நாடகங்கள்**

1. பொலிடோலே கதி ........................................................ 1976
2. பணமோ பணம்................................................................ 1977
3. வீடு ................................................................................ 1997
4. யாழ்ப்பாணமா? கொழும்பா? ........................................ 1998
5. மழை வெள்ளம் .............................................................. 2004
6. நவீன நாடகம் ................................................................ 2010

**நாவல்கள்**

1. அக்கரைச் சீமையில் ........................................................ 1994
2. ஒரு காதலின் கதை .......................................................... 2001

**சிறுகதைத் தொகுப்பு**

1. யாழ்ப்பாணம் .................................................................... 1999

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ation.
rg

# அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை

## எழுதியவை

1. நாடகங்கள் – 515
2. நாடக நூல்கள் – 13
3. சிறுகதைகள் – 65
4. இலக்கியம் படைக்க வழிகாட்டும் நூல்கள் – 03
5. இலக்கிய விமர்சன நூல்கள் – 04
6. இலக்கியம் கற்பிக்க வழிகாட்டும் நூல் – 01

## அவர் பெற்ற பரிசுகளும் விருதுகளும்

01. இலங்கை வானொலியின் தமிழ் சேவை. 2000 ஆம் ஆண்டு நடத்திய பவள விழா இலக்கியப் போட்டிகளில், வானொலி நாடகம் எழுதும் போட்டியில் முதலாம் பரிசு!
02. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் தேசிய ஒருங்கிணைப்பு செயல்திட்டப் பணியகமும் ஒருங்கிணைந்து. 1998 ஆம் ஆண்டு நடத்திய வானொலி நாடகம் எழுதும் போட்டியில் முதலாம் பரிசு!
03. நோர்வே நாட்டுத் 'தமிழ் நாதம்' வானொலி நிலையம் அகில உலக ரீதியில் நடத்திய, வானொலி நாடகம் எழுதும் போட்டியில் முதலாம் பரிசு!
04. நோர்வே நாட்டிலுள்ள 'மொல்டே தமிழ் கலை கலாச்சார மன்றம்' அகில உலக ரீதியில் நடத்திய. வானொலி நாடகம் எழுதும் போட்டியில் முதலாம் பரிசு!
05. கனடா ரொறன்ரோ பெருநகர். – ஆசிய வானொலியின் தமிழ் ஒலிபரப்புப் பிரிவினால், அகில உலக ரீதியில் நடத்தப்பட்ட வானொலி நாடகம் எழுதும் போட்டியில் முதலாம் பரிசு!
06. இலங்கை வானொலி 1995 ஆம் ஆண்டு நடத்திய, நாடகம் எழுதும் போட்டியில் மூன்றாம் பரிசு!
07. இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவை /2001 ஆம் ஆண்டு நடத்திய. மெல்லிசை நாடக விழாவில், ஆசிரியரது 'பிறந்த மண்' நாடகத்தை வேண்டிப் பெற்று மேடையேற்றியது. அதுவும் ஆசிரியருக்கு ஒரு பரிசே!
08. வீரகேசரிப் பத்திரிகை 1997 ஆம் ஆண்டு நடத்திய, நாவல் எழுதும் போட்டியில் மூன்றாம் பரிசு!
09. இலங்கை அரசின் கலாபூஷண விருது – 2001 ஆம் ஆண்டு.
10. முதலாம் பிள்ளை, எங்கள் நாடு இமயம் நாடக நூல்களுக்கு வடக்கு கிழக்கு மாகாண சபையின் பரிசுகள்!
11. இலங்கையின் வடமாகாண சபையின் ஆளுநர் விருது – 2007 ஆம் ஆண்டு
12. இமயம் நாடகநூலுக்கு இலங்கை அரசின் சாகித்தியப் பரிசு!

கங்கை பிறிண்டேர்ஸ், யாழ். தொ.பே: 0776184567

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org